


கல்கி


KALKI 21.7.1968 40 காசு

திருமணம்



திருப்பதி ஸ்ரீ கல்யாணம் அய்யங்கார் அவர்கள் குமாரர் சிரஞ்சீவி நரஸிம்ஹன் அவர்களுக்கும் செள. சகுந்தலாவுக்கும் திருமணம் சமீபத்தில் சென்னையில் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!



வண்ணக் கண்ணாடியில்
எண்ணக் கோலம்!


படம்: பி. வி. சுப்பிரமணியம்

கல்கி

பொருளடக்கம்

கீலக ஆடி 6 • ஜூலை 21

கல்கியில் வெளிவரும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே



தமிழக அரசு
கிணற்றுத் தவளைகள் உற்ற தோழர்களே!
போதனை மொழி-தமிழ்
கல்லூரி மாணவர்கள்
PK



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 27 □ இதழ் 51

சர்க்காருக்கு ஒரு சவால்

முன்பு இந்திய சர்க்காரும் சமஸ்தான மன்னர்களும் செய்து கொண்ட ஓர் ஒப்பந்தத்துக்கு இணங்கியே தமது ஆட்சியதிகாரத்தை விட்டுக்கொடுத்து, தமது ராஜ்யங்கள் இந்திய யூனியனில் சேர மன்னர்கள் இணக்கம் தெரிவித்தனர். இந்த ஒப்பந்தத்தின்படி அவர்களுக்கு ராஜ மானியமும் வேறு சில சலுகைகளும் தரப்பட்டன. இவ்வொப்பந்தத்தை முறிக்க முடியாது. மன்னர்கள் மீதும் அவர்கள் ஆண்டு வந்த பிரதேசங்கள் மீதும் இந்திய சர்க்கார் எவ்வித ஆதிக்கமும் பெறுமுன்னரே இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இதன் புனிதத்துவத்தை வலியுறுத்துமுகமாகவே அரசியல் சாசனத்திலேயே ஓர் அங்கமாக இவ்வொப்பந்தத்துக்கு இடம் அளிக்கப்பட்டது. ஒப்பந்தம் தகர்க்கப்படாமல் அதைப் பலப்படுத்த வேண்டும் என்ற கருத்தின் மீதே அது அரசியல் சாசனத்தில் உள்ளடக்கப்பட்டது. ஆனால் இப்போதோ அது அரசியல் சாஸனத்தில் ஒரு பகுதியாக இருப்பதாலேயே அதனை மாற்றிவிடலாம் என்று கருதுகிறார்கள். வெறும் ஒப்பந்தமாக இருந்தால் அதை மாற்ற முடியாது; மாற்றுவதற்கு எண்ணவும் மாட்டார்கள். ஆனால் வெறும் ஒப்பந்தமாக இராமல், அதற்கு வலுத் தர வேண்டும் என்று கருதி அதை சாஸனத்தில் அங்கமாக்கியதாலேயே, இன்று இந்த நோக்கத்துக்கு நேர் மாறாகச் சாஸன ஷரத்தை மாற்றி, மூல நோக்கத்தை முறியடிக்க வழி ஏற்பட்டிருக்கிறது. ஆராய்ந்து பார்த்தால் இது வெறுமே சாஸனத்தைத் திருத்துகிற விஷயமல்ல என்பது தெரியும். சட்ட பூர்வமான ஒப்பந்தம் ஒன்றை அரசாங்கமே மீறுவதற்கு அநுமதிக்கலாமா என்ற பெரிய கேள்வி இவ்விஷயத்தின் அடித்தளத்தில் இருப்பது புரியும். இந்த அடிப்படையில் முன்னாள் மன்னர்கள் நீதி மன்றத்தில் வழக்குத் தொடுக்கக் கூடும் எனவும் தெரிகிறது. தில்லி ஆட்சியாளரும் இப்போது ராஜமானிய நிறுத்தம் சட்டத்துக்கு உட்பட்டதா, தார்மிக ரீதியில் அது செல்லுபடியாகுமா என்றெல்லாம் சிறிதே சிந்திப்பதாகத் தெரிகிறது.

ஆயினும் தங்கள் இலட்சியத்தை விட்டு விடுவதற்கு ஆட்சியாளர்களுக்கு மனோதைரியம் இல்லை. எனவேதான் மன்னர்களிடமே புது ஒப்பந்தம் செய்து கொண்டு அதன் மூலம் அவர்களாகத் தமது உரிமைகளை விட்டுக் கொடுப்பதற்கு வழி காணலாம் என்ற ரீதியில் இந்திய சர்க்காரின் சிந்தனை படர்ந்திருப்பதாகத் தெரிகிறது. சர்க்கார் தானே ராஜமானியத்தை நிறுத்துவது சட்ட விரோதமானதாகி விடும் என்பதால் முன்னாள் மன்னர்களிடமே புது ஒப்பந்தம் செய்துகொண்டு இதற்குச் சம்மதம் பெற முயலுவார்கள். முன்னாள் மன்னர்கள் தாமாக உரிமைகளை விட்டுக் கொடுப்பராகில் சர்க்கார் தன் உத்தேச நடவடிக்கையை வெற்றிகரமாகச் செய்வதோடு, சட்டத்திலிருந்தும் தன்னைக் காத்துக் கொண்டுவிட முடியும்.

சர்க்காரின் புது ஒப்பந்த உத்தேசத்தைக் கண்டு மன்னர்கள் மயங்கிவிட மாட்டார்கள் என்று நம்புகிறோம். தமது உரிமைகளை அவர்கள் விடாமல் பற்றி நிற்பார்கள் என்று நம்புகிறோம். இதனால் எத்தனை இடர்ப்பாடு ஏற்பட்டாலும் பொருட்படுத்தாமல், சுப்ரீம் கோர்ட்டும், உலக நீதி மன்றமும் நியாயம் வழங்க இருக்கின்றன என்ற நம்பிக்கையுடன் இந்த நீதி மன்றங்களையே முன்னாள் மன்னர்கள் சார்ந்து நிற்பார்கள் என்று நம்புகிறோம். இச்சமயத்தில் அவர்கள் தாமாக உரிமையை விட்டுக் கொடுப்பது தற்கொலைக்குச் சமானமாகும். வாக்குறுதியை முறித்து விட்டு நாகரிக நாடுகளின் அவமதிப்பைப் பெற இந்திய சர்க்கார் தயாராக இருக்கிறதா என்று மன்னர்கள் சவால் விடுக்க வேண்டும். 'தான் கொடுத்த வாக்கை — மக்களின் சாஸனத்திலும் இடம் பெற்ற வாக்கை — தானே அவமதித்து அதருமம் செய்துவிட்ட சர்க்கார்' என்று நாகரிக நாடுகளால் பேசப்படுவதற்கு இந்திய சர்க்கார் தயாராக உள்ளதா என்று மன்னர்கள் சவால் விடுக்க வேண்டும்.

ராஜாஜியின் கருத்துக்கள்

எந்த ஒரு சர்க்காரும் இன்னொரு சர்க்காருக்கு ஆயுத உதவி செய்வதற்குப் பெற்றுள்ள உரிமை பற்றி ஸ்ரீமதி இந்திராகாந்தி தந்துள்ள விளக்கத்தில் தவறு ஏதுமில்லை. ருஷ்யா இந்த உரிமையின்படி பாகிஸ்தானுக்கு ஆயுத உதவி தருவதால், நாம் ருஷியாவிடம் கொண்டுள்ள நட்பை மாற்றிக் கொள்ளத் தேவையில்லை. எனினும், இதனால் நாம் முன்போலவே அந்நியக் கொள்கையைத் தொடர வேண்டும் என்று ஆகாது. நமது ராணுவச் செலவைக் குறைக்க வேண்டுமாயின், அந்நியக் கொள்கையில் பெரிய மாற்றம் செய்தேயாக வேண்டும். இது எளிதான மாற்றமல்ல. இதை விரைவில் செய்யவும் முடியாது. ஆயினும் பொருளாதார நெருக்கடியைச் சமாளித்தாக வேண்டுமெனில், இம்மாற்றத்தைச் செய்தேயாக வேண்டும். நாசகரமான ஆயுதப் போட்டியில் இறங்கி, இதற்காக அந்நிய உதவியை நம்பியிருப்பது நமக்கும் நல்லதல்ல; பாகிஸ்தானுக்கும் நல்லதல்ல. இவ்விஷயத்தில் கொள்கையை மாற்றிக் கொள்ளும் திறம் படைத்த தலைவர்களும் சர்க்கார்களும் இரு நாடுகளுக்கும் தேவை. தாஷ்கண்ட் எழுப்பிய நம்பிக்கைகள் இன்னும் முற்றிலும் சாம்பலாகிவிடவில்லை. பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் தேவைப்படும் தலைவர்களும், சர்க்கார்களும் கிடைத்துவிட்டால் தாஷ்கண்ட் உணர்வை மீண்டும் உயிர்ப்பிக்கலாம்.

ஃஃஃ

தற்காப்பு என்பது ஜனநாயகத்தின் உரிமை மட்டுமல்ல; அது கடமையுமாகும். இது ஜனநாயகப் பிரஜை சர்க்காருக்குச் செலுத்தும் கடமை. ஆயினும், இதனால் தனியார் சேனைகள் நடத்தப்படுவதை அனுமதிப்பதற்கில்லை. பிரஜைகள் கூட்டாக ஒன்று சேர்ந்து சேனைகள் அமைப்பது தனிமனிதனின் தற்காப்பு நீதிக்கு உட்படாது. அரசாங்கத்தின் அனுமதி பெற்று, அந்த அனுமதியிலுள்ள கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டே பிரஜைகளின் கூட்டுத் தற்காப்பு நடைபெறலாம். இது போன்ற சேனைகளில் அச்சுறுத்தவும், பலாத்காரம் செய்யவும் வாய்ப்பிருக்கிறது என்பதால் மேற்சொன்ன கட்டுப்பாடு அவசியமாகிறது.

கட்டுக்கோப்பான முறையில், விரைவில் நடவடிக்கை எடுக்கப் பயிற்சி பெற்றுள்ள சிறிய சேனைகளுக்கும் இது பொருந்தும். எனவே, தனியார் சேனைகளின் விஷயத்தில் மெத்தனமாக இருந்து, அவை சமூகத்தின் எந்த ஒரு பகுதியிலும் ஆதிக்கம் பெற அனுமதிப்பது தகாது. தேர்தல் பிரசாரத்துக்கு இந்தச்சேனைகள் பெரும் உதவி புரிவதாக அரசியல்வாதிகள் கருதலாம். ஆனாலும், இதற்காக 'பயமற்ற வாழ்க்கை' என்ற ஜனநாயக சாரத்துக்கு ஊறு விளைவிக்கும் போக்கைச் சர்க்கார் அனுமதிக்கக் கூடாது.

தொழிற்சங்கங்களாக அமைந்துள்ள சிறுபான்மையினர் கூட, ஜீவாதாரமான பொதுக் காரியங்களை ஸ்தம்பிக்கச் செய்து சமூகநலனுக்கு ஊறு விளைவிக்க முடியும் என்பதைப் பார்த்து விட்டோம். இதிலிருந்து, தனியார் சேனைகள் கட்டுப்படுத்தப் பெறாவிடில் மக்கள் நலனுக்கு எத்தகைய ஆபத்து ஏற்படும் என்று புரிந்துகொள்வது எளிது.

தனியார் சேனைகளை மக்கள் அடக்க வேண்டும் என்று பிரதமர் கூறியிருப்பதாகச் செய்தி வெளியாகியுள்ளது. இது உண்மையாயின், ஆட்சேபகரமானது. இதுபோன்ற நிறுவனங்களை அடக்குவது சர்க்காருக்கே உரிய பணி. இதற்காகவே சர்க்கார் எனும் இயந்திரம் மக்களால் நியமிக்கப்பட்டுள்ளது.

ஃஃஃ

திறமைக்கு உகந்த வகையில் உழைத்து, தேவைக்கு உகந்த வகையில் ஊதியம் பெற வேண்டும் என்ற மார்க்ஸின் கொள்கையே கம்யூனிஸ்ட்களின் மந்திரம். ஆயினும், கம்யூனிஸ்ட்களின் வசமுள்ள தொழிற்சங்கங்கள் இதில் முதல் பாதியை மதிப்பதில்லை.

இது ஒருபுறமிருக்கட்டும். அன்றாட சகஜ வாழ்வை நிலைநாட்டுகின்ற (ரயில் போக்குவரத்து முதலிய) அத்தியாவசியப் பணிகள் நிற்காமலும், நிலைகுலையாமலும் அவற்றை நடத்த வேண்டும். நிர்வாகத்தினர் 'காண்ட்ராக்ட்'களை மதிக்க வேண்டும் என்பது போலவே; தொழிலாளரும் உழைப்பதாகத் தந்துள்ள ஒப்பந்தத்தை மதிக்க வேண்டும். மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பணிகளை ஸ்தம்பிக்க விடாமல் நடத்துவதற்காகச் செய்யப்பட்டுள்ள சட்டங்கள் அழுத்தமான தார்மிக ஆதரவு பெற்றுள்ளன. எனவே, இவற்றை அமுல் செய்வதில் தயக்கம் காட்ட வேண்டியதில்லை.

காமகோடியின் கருணைமொழி



கிளைகள், இலைகள் எல்லாம் அடர்ந்து இருக்கும் ஒரு மரத்தடியில் உட்கார்ந்தால் கீழே கொஞ்சம்கூட வெய்யில் படாமல் நிழல் இருக்கிறது. கொஞ்சம் காற்று அடிக்கும்போது இலைகள், கிளைகள் நகர்ந்து விலகுகிற சமயத்தில் சூரியனுடைய வெய்யில் கீழே அந்த இடைவெளி அளவுக்கு விழுகிறது. மீண்டும் அது மறைந்துவிடுகிறது. அதுமாதிரித்தான் ஆனந்தம் வருகிறது நமக்கு. ஆனந்தம் சூரியன்போல் எங்கும் நிறைந்திருக்கும் வஸ்து. ஆனால் நம்முடைய கெட்ட கர்மா, மனம், புத்தி — இவற்றால் அது கொஞ்சம்கூட நம்மிடத்தில் படாமல் மறைந்திருக்கிறது. ஒரு க்ஷணம் நாம் பண்ணியிருக்கிற புண்ணியச் செயல்களால் அவை விலகும்போது, காற்றடித்து இலைகள் விலகி சூரியன் ஒளி அதன் வழியே வருவதுபோல, நம்முடைய கர்மாக்கள் விலகித் திவலை ஆனந்தம் நமக்கு உண்டாகிறது.



ASP/LT-3D/67 TAM
யார்சொன்னது லக்மே டால்கம் விலையுயர்ந்தது என்று?
தூவித் தூவி மகிழுங்கள் மேனிமுழுதும்!
தூவித் தூவி மகிழுங்கள் ஆசை தீர. மகரந்த மாரி பொழியட்டும் மெய்குளிர. நாளெல்லாம் நேசக் கதை சொல்லும் நறு மணம். விரும்பிய மாத்திரத்தில் கைக் கெட்டும் விலைநயம். லக்மே டால்கம்- உரிமை கொள்வீர்கள் உடலார. உபயோகித்து மகிழ்ச்சிச் சுழலிலே திளைக்க 'லக்மே கரமான' நறுமணவகைகள் நான்கு: லேவெண்டர், நிர்வாண், வெட்டிவேர், சந்தனம்.
Lakmé TALC
Lakmé
லக்மே டால்கம்

ஆகஸ்டு 4உ
ஆண்டு மலரில்
புதிய அம்சங்கள்:

- ☐ குடும்பப் பிரச்னை
- ☐ எழுத்தில் புதுமை
- ☐ சினிமா சிந்தனை
- ☐ சிறுவர் விருந்து
  வாண்டு மாமா அளிக்கும்
  வண்ண மடல்
- ☐ சிறப்புச் சிறுகதை
- ☐ பொன்னியின் செல்வனுக்கு
  வண்ண ஓவியங்கள்

மகரிஷியின்
குறுநாவல்:

'துயரங்கள்
உறங்குவதில்லை!'

128 பக்கங்கள்

விலை 40 காசு

வயோதிகர், வாலிபர், வாண்டுகள் முதலிய குடும்பத்திலுள்ள அனைவரும் விளையாட்டாகப் பங்கு பற்றி மகிழ்ந்து பரிசும் பெறக்கூடிய ஒரு சுவாரஸ்யமான போட்டி பற்றி ஆகஸ்டு 4உ ஆண்டு மலரில் அறிவிக்கிறோம். பரிசு: ஓராண்டுக்கு கல்கி சந்தா! 52 கல்கி இதழ்கள் வெற்றி பெற்றவரின் வீடு தேடி வரும்!



ஆயிரமாயிரம் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட

அமரர் **கல்கி**யின்

பொன்னியின் செல்வன்

ஆகஸ்ட் 4—

கல்கி

ஆண்டு மலரில்
ஆரம்பம்





செம்மங்குடி செல்வம்

இசை வரலாற்றிலே 1968 ஜூலை 23ந் தேதி பொன்னெழுத்தில் — அல்லது வைர எழுத்தில் — பொறிக்கப்படும். நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகக் கர்நாடக சங்கீத வானில் தாரகையாகப் பிரகாசித்து வரும் செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீநிவாச அய்யர் அவர்கள் இம்மாதம் 23ந் தேதி வைர விழாக் காண்கிறார். செம்மங்குடிச் செம்மலுக்கு நமது இதயம் கலந்த அஞ்சலிகளை அளித்து இவ்விதழ் மேலட்டையில் அவரது உருவத்தை மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம். — ஆசிரியர்.

□ சிறுவன் ஸ்ரீநிவாசன் திருவிடைமருதூரில் கோட்டு வாத்தியம் ஸ்ரீ சகாராம ராவிடம் சிட்சை பெற்றபோது நடந்த ஒரு சுவையான சம்பவம்:

கிவளூர் ராமச்சந்திரய்யர் என்று சங்கீத உலகில் ஒரு சிம்மம் அந்த நாட்களில் உண்டு. அவர் ஒரு நாள் சகாராம ராவிடம், 'சனி தோடி தேவே' என்ற தியாகராஜ கிருதி பற்றி விவாதித்துக் கொண்டிருந்தார். இந்தப் பாடல் ஹரிகாம்போஜியா, கமாஸா என்பது பற்றி விவாதம். சிறுவன் ஸ்ரீநிவாசன் சடக்கென்று ''இது கமாஸ்தான், பல்லவி முடிவில் மத்திம நியாஸமும், அநுபல்லவித் தொடக்கத்தில் 'மநிதநிஸா' பிரயோகமும் இப் பாட்டு கமாஸ்தான் என்று நிச்சயப் படுத்துகின்றன'' என்றான்.

வாண்டுப் பயலின் விளக்கத்தைக் கேட்டு மூக்கில் விரல் வைத்தார் சங்கீத சிம்மமான கிவளூரார். ஸ்ரீநிவாசனின் குருவிடம், ''ராயர்வாள், பயல் படுசுட்டி; பிரமாதமாக முன்னுக்கு வருவான்'' என்றார்.

அது தீர்க்கதரிசன வாக்காகப் பலித்து விட்டதை இன்று காண்கிறோம்.

□ தமது மூத்த சகோதரராகிய செம்மங்குடி ஸ்ரீ நாராயணஸ்வாமி அய்யர், மகாராஜபுரம் ஸ்ரீ விசுவநாதய்யர், ஸ்ரீ சகாராம ராவ் ஆகியோரிடம் மட்டுமின்றி, தியாகராஜ சிஷ்ய பரம்பரையைச் சேர்ந்த உமையாள்புரம் சுவாமிநாதய்யரிடமும் செம்மங்குடி சங்கீத சிட்சை பெற்றிருக்கிறார். இவர்களோடு ஒரு விதத்தில் அரியக்குடி ஸ்ரீ ராமாநுஜ அய்யங்கார் அவர்களையும் தமது குருவுக்குச் சமமாக மதிக்கிறார் ஸ்ரீ செம்மங்குடி.

அ ரி ய க் கு டி யு ம் செம்மங்குடியுமாகச் சேர்ந்து கச்சேரிகள் செய்ததுண்டு என்பது வாசகர்களுக்கு வியப்பு அளிக்கும். ஆனால் இந்தக் கச்சேரிகள் பொது மேடையில் நடைபெறவில்லை. ஸ்ரீ செம்மங்குடி திருவனந்தபுரத்தில் சுவாதித்திருநாள் கல்லூரித் தலைவராக இருந்தபோது, ஸ்ரீ அரியக்குடி அந் நகருக்கு வரும்போதெல்லாம் அரண்மனையில் இருவருமாகச் சேர்ந்து பாடுவார்கள்.

□ சங்கீதத்தில் வீணை வழி, நாதஸ்வர வழி என்று இரண்டைச் சொல்வதுண்டு. இரண்டுமே உண்மையில் வாய்ப்பாட்டின் வழியை அநுசரித்தவைதாம். செம்மங்குடி அவர்கள் இளவயதிலிருந்து இரண்டு வழிகளையும் நுணுகிப் பருகி ரசித்தவர். திருப்பழனம் பஞ்சாபகேச சாஸ்திரிகளின் அழைப்பின் மீது வீணை தனம்மாள் அவர்கள் கும்பகோணத்துக்கு வந்து செய்த கச்சேரிகளைக் கேட்டு அந்த வழியில் லயித்தார் ஸ்ரீநிவாசன். அதே போல் அவர் மகா வித்துவான்களாகக் கருதும் மதுரை பொன்னுசாமி பிள்ளை, சிதம்பரம் வைத்தியநாதன் உள்ளிட்ட பல பிரபல நாயன வித்வான்களின் சங்கீதத்தையும் மொண்டு மொண்டு மாந்தியிருக்கிறார்.

□ செம்மங்குடி ஸ்ரீநிவாசய்யர் சிறு பிராயத்திலிருந்தே ஸ்ரீ மகாராஜபுரத்துடன் பின்பாட்டுப் பாடி வந்தபோதிலும் அவர் தனியாக முதல் 'பக்கா' கச்சேரி செய்தது 1926ல்தான். அப்போது அவருக்கு வயது பதினெட்டு.

ஒரு நாள் மாலை கும்பகோணத்தில் மகாராஜபுரத்தின் கச்சேரியில் அவர் உடன் செம்மங்குடி பாடி முடித்தவுடன், மிருதங்கம் வாசித்த அழகநம்பியாப் பிள்ளை திடீரென்று, ''சீனிய்யரே, இன்னிக்கு ராத்திரி நாகேசுவர ஸ்வாமி கோயிலில் நம்ம மண்டகப்படி. நீங்கதான் பாடுங்களேன்'' என்றார். செம்மங்குடி ஒப்புக் கொண்டார்.


செம்மங்குடியின் தாய் மாமனும், சங்கீத உலகம் என்றும் வணங்கத் தக்க பெருமை வாய்ந்தவருமான திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர் அவர்களின் இசை வழியில் வந்த திருக்கோடிகாவல் வேங்கடராமய்யர் இக் கச்சேரியில் வயலின் வாசித்தார். அழகநம்பியாப் பிள்ளையின் புதல்வர் ரத்தினவேலு மிருதங்கம். கச்சேரியின்போது கனமழை. கனமழையோடு தொடங்கியது கானமழையின் சரித்திரம். மேக மழையோடு தொடங்கியது ராக மழையின் வரலாறு.

'ராக மழை' என்று கூறினோம். பல்லாண்டுகளுக்குப் பிறகு அதனை ராகக் கடலாகவே மதித்து ஸ்ரீ செம்மங்குடி அவர்களுக்கு 'ராக ரத்னாகர' என்ற விருதை ஸ்ரீ சிருங்கேரி சங்கராசாரிய ஸ்வாமிகள் வழங்கினார்கள்!

□ கச்சேரிகள் செய்து சங்கீதத்தைப் பரப்பும் தொண்டு பல சங்கீத வித்வான்களுக்கு உரியது. இது மட்டுமின்றி இசை வளர்ச்சிக்கு வேறு விதங்களிலும் ஸ்தூலமாகப் பணியாற்றிய — பணியாற்றி வருகிற — விசேஷப் பெருமை ஸ்ரீ செம்மங்குடிக்கு உரியதாகும்.

இன்று ஸ்வாதித் திருநாள் கிருதிகள் இவ்வளவு பெருமளவில் புழக்கத்துக்கு வந்துள்ளனவெனில் அதற்கு ஸ்ரீ செம்மங்குடியே முக்கியமான காரணம். திருவனந்தபுரத்தில் ஸ்வாதித் திருநாள் கல்லூரித் தலைவராகப் பணியாற்றி, ஸ்வாதித் திருநாளின் பாடல்களில் சுமார் முந்நூற்றினைச் செப்பம் செய்தும், சுச்சிதப்படுத்தியும் பிரகடித்துள்ளார்.

சொந்த சாகித்தியம் செய்யாவிடினும், பிற சாகித்தியங்களுக்கு அவற்றின் சொல்



செம்மங்குடி ஸ்ரீ நாராயணஸ்வாமி அய்யர்

லமைப்பு — பொருள் இவற்றுக்கு உகந்த முறையில் வர்ண மெட்டு அமைப்பதன் மூலமே தமது ஆக்கத் திறமையை வெளிப்படுத்தியுள்ளார் ஸ்ரீ செம்மங்குடி. ஏற்கனவே பஜனைப் பத்ததிக்கேற்பக் கோஷ்டி கானத்துக்கு ஏற்ற வகையில் பாடப் பெற்று வந்த பல பாடல்கள் மேடைக் கச்சேரிக்குத் தகுந்த முறையில் புது மெருகு பெற்றிருப்பதில் செம்மங்குடியின் ஆக்க முத்திரையைக் காண்கிறோம். தீர்த்த நாராயணரின் கிருஷ்ணலீலா தரங்கிணி, ஜயதேவரின் கீத கோவிந்தம் இவற்றுக்கு இவ்வாறே புதுப் பொலிவு தந்தவர் செம்மங்குடி. சதாசிவ பிரம்மேந்திரர் அவர்களின் பாடல்கள் பலவற்றுக்குத் தாமே வர்ண மெட்டு அமைத்துப் பிரபலப்படுத்தியுள்ளார். மணி வாசகரின் திருவெம்பாவைப் பாடல்களுக்கு அவர் அற்புதமாக இசை அமைத்துள்ளதை அனைவரும் அறிவோம். இன்றைய மாபெரும் வாக்கேயகாரரான பிரம்மஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்களைத் திருவனந்தபுரத்தில் தம்முடன் ஒரு மாதம் தங்க வைத்து, அவரது கிருதிகளில் சுமார் நாற்பதைப் புழக்கத்துக்குக் கொண்டு வந்தார் செம்மங்குடி. இன்றைக்கும் அவர் ஓயாமல் ஒழியாமல் ஏதேனும் ஒரு தீட்சிதர் கிருதியையோ, தியாகையர் கீர்த்தனையையோ சுச்சிதம் செய்வதைக் காண்கிறோம். ஸ்ரீ செம்மங்குடி இவ்விதமாகப் 'பார்த்துள்ள' பாடல்களை எண்ணினால் ஆயிரத்துக்கு மேல் போனாலும் ஆச்சரியமில்லை.

❑ தமக்கு எல்லாவகையிலும் செழிப்பான வாழ்க்கை கைகூடியுள்ளது என்று திருப்தியுடன் கூறிக்கொள்ளும் செம்மங்குடி, இதற்கு ஸ்ரீ காஞ்சி ஆசாரியாளின் அனுக்கிரகமே முக்கிய காரணம் என உளம் நெகிழ்ந்து சொல்கிறார். திருவனந்தபுரம் மன்னரிடமிருந்து சுவாதித் திருநாள் கல்லூரியில் பதவி ஏற்குமாறு ஸ்ரீ செம்மங்குடிக்கு அழைப்பு வந்தபோது, அது பற்றி அவர் முடிவு செய்ய முடியாமல் சிறிதே கலங்கினார். உத்தியோகப் பொறுப்பு ஏற்பதால் கச்சேரிகள் பாதிக்கப்படலாம் அல்லவா?

ஸ்ரீ காஞ்சி ஜகத்குருவைக் கண்டு திருவிதாங்கூரின் அழைப்பு பற்றிக் கேட்டார். உடனே சுவாமிகள், "திருவனந்தபுரம் போய்ப் பதவி ஏற்றுக் கொள். யசஸுடன் திரும்பிவருவாய்" என்று ஆசி கூறினார். அதன் மீதே ஸ்ரீ செம்மங்குடி கேரளம் சென்றார்.

சுவாமிகளின் ஆசி விசேஷத்தால் அங்கு தமது இசையறிவை மேன்மேலும் வளர்த்துக்கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றார் ஸ்ரீ செம்மங்குடி. மகாராணி சேது பார்வதிபாய் அவர்கள் இந்த அம்சத்தில் செய்துள்ள உதவிகளை நெஞ்சம் நிறைந்த நன்றிப் பெருக்குடன் நினைவு கூருகிறார் ஸ்ரீ செம்மங்குடி. சங்கீத சாஸ்திர விஷயமாக ஸ்ரீ செம்மங்குடிக்கு என்ன ஐயப்பாடு ஏற்பட்டாலும் அதைத் தீர்ப்பதற்காக எப்படியாகிலும் எங்கிருந்தாலும் அரிய நூல்களை வரவழைத்து விடுவாராம் மகாராணியார்.

திருவிதாங்கூரால் செம்மங்குடி பெற்ற பயனைவிட, செம்மங்குடியால் திருவிதாங்கூர் பெற்ற பயனே அதிகம் எனலாம்.

அவர் திருவனந்தபுரம் சென்றபோது அந்தச் சீமையில் சாஸ்திரீய சங்கீதத்துக்கு இவ்வளவு 'மவுசு' கிடையவே கிடையாது. கேரளத்துக்கு நல்ல 'காது' வாய்ப்பதற்குச் செம்மங்குடியே பெருபகாரம் புரிந்தார். அவர் கீழ் நூற்றுக் கணக்கான மாணவர்கள் தயாராயினர். கேரளம் எங்கிலும் பல இசைப் பள்ளிகள் தோன்றின. இசையுணர்வில் அந்த ராஜ்யம் தனிச் சிறப்பு பெற்றது.

இந்தப் பேருதவி புரிந்தவருக்குத் திருவிதாங்கூர் மன்னர் 1945ல் 'ராஜ்ய சேவா நிரத' பட்டம் வழங்கியது பொருத்தம்தானே?

❑ சங்கீத வித்வான் ஒருவர் பயனுள்ள வகையில் பதவியும் வகிக்க முடியும் என்பதைத் திருவிதாங்கூரில் மெய்ப்பித்த செம்மங்குடி அதன் பின் வானொலியில் தென் பிராந்திய பிரதம இசைத் தயாரிப்பாளராகவும் சென்னை கர்நாடக சங்கீதக் கல்லூரியின் இயக்குநராகவும் பணிபுரிந்திருக்கிறார்.

'ராஜ்ய சேவா நிரத' பட்டம் பெற்ற இரண்டாண்டுகளுக்குப் பின் மியூஸிக் அகாடெமியின் 'சங்கீத கலாநிதி' விருது அவரைச் சென்றடைந்தது. 1953ல் ராஷ்டிரபதியால் சம்மானிக்கப்பட்டார்.

இவ்வாறு பல பட்டம் பதவிகளைப் பெற்று, இந்திய தேசமெங்கிலும் கச்சேரிகள் செய்து புகழும் பாராட்டும் பெற்றுள்ள செம்மங்குடி அவர்கள் புகழையும், புகழ்பவரையும் எண்ணாமல் பாடும்போதுதான் உண்மையான நாதானுபவத்தைப் பெறமுடிகிறது என்கிறார்.

"இன்று சங்கீதத்தில் இலட்சியம் வேறாகவும் இலட்சணம் வேறாகவும் இருக்கின்றன. இரண்டும் ஒன்றாக வேண்டும்" என்ற அவரது விருப்பத்தை நிறைவேற்றும் வித்யார்த்திகள் தோன்றிவிட்டால் அதுவே மகா வித்வானுக்குரிய மணி விழாவாகும்.

என்றும் நாற்பதே ஆகுக!

பாபநாசம் சிவன்

ஓர் ஊர் எங்கிருக்கிறது என்று தெரியா விட்டாலும் அதன் பெயரைச் சொன்னதும் ஒரு பெரிய வித்வானுடைய பெயர் தோன்றுவது சங்கீத உலகில்தான் அதிகம். அரியக்குடி, செம்பை, மகாராஜபுரம், முசிரி என்று சொன்னால் அந்த மகா வித்வான்களின் பெயரே அதுதானே என்று எண்ணும்படி அவ்வூர் சங்கீத வித்வான்களின் நினைவு வந்து முன் நிற்கிறது. அவ்வித பாக்கியம் செய்த ஊர்களில் செம்மங்குடி என்ற ஊரும் ஒன்று. கல்வியில் சிறந்தோர், தனதனவான்கள் பலர் இருந்தாலும் நமது சங்கீத கலாநிதி ஸ்ரீநிவாஸய்யரைப் பெற்றதே செம்மங்குடிக்கு விசேஷப் பெருமை ஆயிற்று.

ஸ்ரீநிவாஸய்யரின் தந்தையின் பெயர் ராதாகிருஷ்ணய்யர். சென்ற தலைமுறையில் கர்நாடக சங்கீதத்துக்கு மார்க்கதரிசியாய் விளங்கின பிடில் மகாவித்வான் திருக்கோடிக்காவல் ஸ்ரீ கிருஷ்ணய்யரின் சகோதரியே நம் செம்மங்குடியின் தாயாராவார். திருவிடைமருதூர் கோட்டுவாத்தியம் ஸ்ரீ ஸகாராமராவிடம் பல காலம் சங்கீதப் பயிற்சி பெற்றார் ஸ்ரீநிவாஸய்யர். பிறகு மகாராஜபுரம் ஸ்ரீ விசுவநாதய்யரிடம் சில ஆண்டுகள் கற்றதால் அந்த வித்தை நல்ல கனிந்த பழம் போல் பக்குவமாயிற்று. தமக்குத் தாமே நிகர் என்று மதிக்கத் தக்க மகா வித்வான் மகாராஜபுரம். குழந்தையுள்ளம் படைத்தவர். வெளித் தோற்றத்தில் பொல்லாதவர் போல் தோன்றும். ஸ்ரீநிவாஸய்யர் உயர்தரமான ஸங்கீதமொன்றே குறிக்கோளாய், சாஸ்திரப்படி குருகுலவாசம் செய்து, பிறகு குருவுக்கு ஏற்ற சிஷ்யனாய் அவரிடமிருந்து வெளிப்பட்டார்.

பாட்டுக் கச்சேரி செய்ய ஆரம்பித்தது முதல் தம்முடன் எந்தப் பக்க வாத்தியக்காரர் அமர்ந்தாலும் சளைக்காமல் தமக்கென்று ஒரு பாணி வகுத்துக் கொண்டு ஆள் கண்ட சமுத்திரம் போல் புங்கானுபுங்கமாய் ஸ்வர ராகங்களைக் கல்பனையாய், சாஸ்திரியமாய், ரஞ்சகமாய்ப் பாடி ஜனங்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவர் ஸ்ரீநிவாஸய்யர். இதைக் கண்டும் கேட்டும், இவரது பெற்றோர் போல் மகிழ்ந்தவர் மகாராஜபுரம் ஸ்ரீ விசுவநாதய்யர். ஸங்கீதத்தில் சிறந்த அம்சம் எங்கிருந்தாலும் சொற்பமாயிருந்தாலும் அதைச் சுவாதீனஞ் செய்து கொள்வார் ஸ்ரீநிவாஸய்யர்.

சென்ற நாற்பத்தைந்து ஆண்டுகளாய் அவருக்கு என்னிடம் சிநேகமும் அன்பும் உண்டு. கும்பகோணத்திலும் செம்மங்குடியிலும் பல நாட்கள் இவருடன் இவர் ஜாகையிலேயே வாஸஞ் செய்த நான் 'சீனு' என்றே அழைத்துப் பேசுவது பழக்கம். ஸ்ரீ ஸதாசிவம் (கல்கி) சொற்படி என்னிடமுள்ள அன்பால் என் பாட்டுக்களில் சிலவற்றை அவர் ஸ்வரப்படுத்திக் கல்கியில் வெளியிடும் சமயத்தில், 'ஸ்ரீநிவாஸய்யர்' என்றும் 'நீங்கள்' என்றும் நான் பேசினதை அவர் ஆக்ஷேபித்து ''சிவனே! உங்களுக்கு நான் பழைய சீனு தான். 'வாங்கள், போங்கள்' என்றெல்லாம் பேசக் கூடாது. 'வா', 'போ' என்று தான் சொல்லணும்'' என்றார். அவரது பெருந்தன்மையைக் காட்டவே இதைக் குறித்தேன்.

ஸ்வாதித் திருநாள் கீர்த்தனங்களை ஆல் போல் வேர் விட்டுப் படர வளர்த்த பெருமை ஸ்ரீநிவாஸய்யரையே சாரும். தம்மைச் சாரும் சிஷ்யர்களைத் தம் பிள்ளைகளைப் போலப் பாவித்து ஆதரிப்பவர். இவரது அறுபதாண்டு நிறைவையும், சதாபிஷேகத்தையும் நாடு முழுதும் கலந்து கொண்டாடுமென்பதற்கு ஐயமில்லை. இவரது சங்கீத கலாதேவி மட்டும் எந்நாளும் நாற்பதே வயதாய் நிலைத்துத் திகழ வேண்டும் என்பது என் உள்ளவா. இவரது சங்கீதமொன்றே தமது குடும்பத்தின் குறையாத குலதனமென்ற மனப்பான்மை கொண்ட இவர் தமையனார், பீஷ்மரைப் போன்ற பிரம்மச்சாரி பஞ்சாபகேசய்யரும், மற்றும் இவரது காலம் சென்ற மாமா கிருஷ்ணய்யர், பெற்றோர் முதலானவர்களும் இன்று அவர் மீது ஆசி மழை பொழிகின்றார்கள். செம்மங்குடி ஸ்ரீநிவாஸய்யர் ஆரோக்கிய, திடகாத்திரத்துடனும், சந்தோஷ சௌபாக்கியங்களுடனும், பாடிக் கொண்டே பன்னெடுநாள் அமோகமாய் வாழ வேண்டும் என்று நானும் இறைவனை இறைஞ்சுகின்றேன்.

சகாராமராவ்



என் மூத்த மகன்

மஹாராஜபுரம் ஸ்ரீ விசுவநாதய்யர்

திரு செம்மங்குடி சீனுவாசய்யர் அவர்கள் என்னுடைய பல சிஷ்யர்களில் தலைசிறந்தவர். என் அன்புக்கும் ஆசிக்கும் பாத்திரமானவர்.

இவருடைய சகோதரர் ஸ்ரீ செம்மங்குடி பஞ்சாபகேசய்யரவர்கள் என்னுடைய ஆப்த ஸ்நேகிதர். இன்றைய தினம் திரு சீனுவாசய்யர் விசேஷ ஜோதியுடன் சங்கீத உலகத்தில் பிரகாசிப்பதற்குக் காரணம் அவருடைய தமையனார் செம்மங்குடி பஞ்சாபகேசய்யர் அவர்களுடைய முயற்சிதான்.

செம்மங்குடியைப் பஞ்சாபகேசய்யர் ஒரு நாள் அழைத்து வந்தார். பாடச் சொல்லிக் கேட்டேன். பாட்டில்திருக்கோடிக்காவல் பரம்பரையின் த்வனியைக் கேட்டேன். அன்று முதல் சீனு என்னுடன் ஐந்து வருஷங்கள் சிஷ்யனாக இருந்தான். திரு செம்மங்குடி சீனு மாதிரி என்னிடத்தில் எந்த சிஷ்யர்களும் இருந்ததில்லை. ஓர் உண்மையான சிஷ்யனுக்குள்ள எல்லா லக்ஷணங்களும் அவரிடத்தில் இருந்தன. அடக்கம், மரியாதை, குரு பக்தி, சமயோசிதமாக நடந்து கொள்ளும் திறமை, சங்கீதம் கற்றுக் கொள்வதில் ஆர்வம் எல்லாம் அமைந்த சீனு சீக்கிரம் முன்னுக்கு வந்ததில் ஆச்சரியப்படவேண்டியதில்லை. சீனு அசாத்தியமான உழைப்புக்கு எடுத்துக்காட்டு. அதோடு பெரிய சங்கீத பரம்பரையைச் சேர்ந்த சீனுவுக்கு லட்சிய லட்சண ஞானங்கள் சுயமாகவே அமைந்திருந்தன.

திரு சீனு எனது சிஷ்யன் என்பது ஒரு பக்கம் இருந்தாலும் அவன் என்னிடம் வந்தது முதல் எனக்கு அவன் மூத்த பிள்ளை மாதிரி. செம்மங்குடி என்னிடத்தில் இருந்த சமயம் எனக்கு மாதம் முப்பது நாட்களும் கச்சேரி. நான் பணம் காசு விஷயத்தில் யாரிடமும் நம்பிக்கை இல்லாதவன். ஆனால் என்னுடைய பண வரவு செலவு எல்லாம் அந்தச் சமயம் சீனுதான். அவனிடத்தில் எனக்கு அவ்வளவு அபார நம்பிக்கை.

நான் கச்சேரி செய்யத் தொடங்கி அறுபது ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டன. இந்த அறுபது ஆண்டுப் பூர்த்தியும் என்னுடைய அருமை சிஷ்யன் சீனுவின் அறுபது வயதுப் பூர்த்தியும் ஒன்றாகக் கூடியிருப்பது ஸ்ரீ தியாகப்பிரம்மத்தின் கிருபை என்றே நினைக்கிறேன்.

உழைப்பின் சிகரம்

முசிரி ஸ்ரீ சுப்பிரமணிய அய்யர்

செம்மங்குடி சீனிவாசய்யர் சங்கீதத் துறையில் பூரண வெற்றி பெற்றதற்குக் காரணம் அவருடைய கடுமையான உழைப்பாகும்.

ஒருவருக்கு இயற்கையாகவே சாரீரம் அமைந்திருந்தால் அதிலே பிருகா அவ்வளவாக அமையாது. கடுமையான சாதகத்தின் பேரில் செம்மங்குடி அவர்களுக்குச் சாரீரத்தில் நெளிவு சுளிவுகளெல்லாம் சிறப்பாக அமைந்து விட்டன.

சங்கீதம் என்பது புத்தகத்தைப் பார்த்தோ, படித்தோ, நெட்டுருப் போட்டோ வந்து விடக்கூடிய வித்தையல்ல. கேட்டுக் கேட்டுப் பண்பட்டு வரவேண்டிய கலை. குருகுல முறைப்படி சங்கீதம் கற்றுக்கொள்ள வேண்டியதுதான். கற்றதை அப்படியே காப்பி அடிக்கக் கூடாது. கற்றுக் கொண்டதை ஜீரணித்து அதைத் தனதாக்கித் தன் தனி முத்திரையுடன் வழங்கும் சாமர்த்தியம் கலைஞனுக்கு இருக்க வேண்டியது அவசியம். அந்தச் சாமர்த்தியம் செம்மங்குடி சீனிவாசய்யருக்கு இருந்தது. தம் உழைப்பினாலும், சாமர்த்தியத்தினாலும் தமக்கென்று ஒரு பாணியை வகுத்துக் கொண்டார். அவரது சங்கீத வித்வத் திறமையைக் கண்டு திருவனந்தபுரம் சமஸ்தானத்துக்கு 1939 – 40ம் ஆண்டில் ஆஸ்தான வித்வானாக ஆக்கிக் கொண்டார்கள். திருவனந்தபுரம் ஸ்வாதித் திருநாள் சங்கீதக் கல்லூரியின் பிரின்ஸிபலாகவும் இருபத்திரண்டு வருஷங்கள் சேவை செய்ய வைத்துக் கொண்டார்கள். அவரது தலைமையில் ஸ்வாதித் திருநாள் கல்லூரி பிரபலமாயிற்று. அந்தப் பகுதியில் சங்கீத ஞானம் வளர அவரது சேவை காரணமாயிற்று.

ஸ்ரீ செம்மங்குடியின் சலியாத உழைப்பை முன்னுக்கு வர நினைக்கும் இளம் சங்கீதக் காரர்கள் மனத்தில் கொண்டு பின்பற்றி இசைத்துறையில் நன்கு பிரகாசிப்பார்களாக!

கிருஷ்ணமூர்த்தி



ஆர். கே. மூர்த்தி



மஹாராஜபுரம்



பஞ்சாபகேசய்யர்





சென்னை மியூஸிக் அகாடமியில் டைகர் வரதாச்சாரியார், முத்தையா பாகவதர் போன்ற சங்கீத சிம்மங்களுடன் ஸ்ரீ சீனிவாசய்யர்.

சங்கீத பரம்பரை

பிடில் வித்வான் ராஜமாணிக்கம் பிள்ளை

இராஜ் சேவாநிரத, சங்கீதகலாநிதி, சங்கீத வித்துவான் செம்மங்குடி சீனுவாசய்யர் அவர்களின் யோக்கியதாம்சங்களில் சிலவற்றைக் கூற எனக்கு வாய்ப்புக் கிடைத்ததை எனது பாக்கியம் என்று கருதுகிறேன். அவர்களை அவர்கள் சிறுபோதிலிருந்து எனக்குத் தெரியும். அவர்கள் சங்கீத வித்துவான் ஆனதற்குக் காரணம் அவருடைய தமையனார் ஸ்ரீ பஞ்சாபகேசய்யர் அவர்கள்தான். திரு பஞ்சாபகேசய்யர் செம்மங்குடி சீனுவாசய்யர் அவர்களைத் தம்முடைய சகோதரர் என்றுமட்டில் கருதாமல் தம் சொந்தக் குழந்தையைப் போல் கருதித் தம் வாழ்நாள் சகலத்தையும் அவருக்கே அர்ப்பணம் செய்த தியாகி.

சிறுபோதாக இருக்கும் பொழுதே அவர்களுடைய பந்துக்களான திப்பிராஜபுரம் கனவான் ஒருவர் வீட்டில் திரு பஞ்சாபகேசய்யர் முயற்சியில் பாடிய போது முதன் முதலாக அவர் கச்சேரிக்கு நான் பிடில் வாசித்திருக்கிறேன். அதிலிருந்து அநேக கனவான்கள் வீடுகளிலும், சபாக்களிலும், ராஜசபைகளிலும் கச்சேரிகள் செய்ததோடு மேன்மை தங்கிய கொச்சி மகாராஜா சபையிலும் கச்சேரி செய்து தோடா சம்பாவனை பெற்றிருக்கிறார்கள். அதிலிருந்து என் வாழ்க்கையில் பெரும் பகுதி திரு செம்மங்குடிக்கேவாசித்திருக்கிறேன்.

திரு செம்மங்குடியின் கச்சேரித் தொடக்கம் முதல் மங்களம் பாடும் வரை வித்துவான்களும் ரஸிகர்களும் எந்த நிமிஷத்தில் எந்த கற்பனையைக் கேட்காமல் இருந்துவிடப் போகிறோமோ என்ற சிரத்தையுடன் கேட்டுக் கொண்டிருப்பார்கள். அவரும் சங்கீதத்திலேயே ஞாபகத்தைச் செலுத்துபவராதலால் மேலும் மேலும் கற்பனை செய்து, ரஸிகர்களை ஆனந்தமடையச் செய்வதிலேயே கண்ணும் கருத்துமாய் இருப்பார்.

திருவனந்தபுரத்தில் ஸ்ரீ சுவாதித் திருநாள் அகாடமிக்கு முதல்வராகப் பணி செய்து அநேக சிஷ்யர்களுக்கு ஞான தானம் செய்தவர்கள். லட்சுமி கடாட்சமும் சரஸ்வதி அனுக்கிரகமும் நிரம்பப் பெற்றவர்கள். திரு செம்மங்குடியின் பூர்வபுண்ணிய விசேஷத்தாலும் பெரியோர்கள் அனுக்கிரகத்தாலும் உத்தமியான மனைவியோடும் மக்களோடும் ஒரு குறைவும் இல்லாமல் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். திரு செம்மங்குடி அவர்களுக்கு சதாபிஷேகமும் நடந்து சங்கீத வித்துவான்களும் ரஸிகர்களும் கண்டுகளிக்க வேண்டுமென்று ஸ்ரீ சுவாமிநாத கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

ராஜ்யசேவாநிரத செம்மங்குடி



கீர்த்தி பெருக இரு மூர்த்திகள்

முடிகொண்டான் ஸ்ரீ வேங்கடராமய்யர்

செம்மங்குடி சீனிவாசய்யருக்கு அவரது மாமா திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யரிடமிருந்து சங்கீத வித்யா சொத்து பூரணமாகக் கிடைத்தது. இது இயற்கையாகவே வந்த பாக்கியம். இந்த இயற்கைச் சங்கீத செல்வத்தைத் தமது உழைப்பினால் நன்கு விருத்தி செய்து கொண்டார் ஸ்ரீ செம்மங்குடி.

உழைப்பினால் எல்லாக் காலப் பிரமாணங்களிலும் நன்றாகப் பேசும் நல்ல சாரீரம். என்றும் வித்தியார்த்தி



பெயரெடுக்க வேணுமே என்கிற கவலையோடும் பயபக்தியோடும் கச்சேரியில் பாடுவார். அவரது கச்சேரி விருவிருப்பாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்கும். அவரது கச்சேரிகளின் சிறப்புக்குச் சிறந்த ராக விஸ்தாரமும் கீர்த்தனைகளை அளவோடு அழகாகப் பாடுவதும் மத்யம கால ஸ்வரப் பிரஸ்தாரங்களும் காரணம் ஆகும். சர்வலகு சுத்தம் இவரிடம் அபூர்வமாய் அமைந்துள்ளது. சந்தானம், சம்பத்து, சந்தோஷம், ஏராளமான சிஷ்யர்கள், மற்றும் ஒரு காயகன் விரும்பும் எல்லா பாக்கியங்களையும் இவருக்கு பகவான் பூரணமாக அருளியிருக்கிறான்.

முதியவரின் பிரார்த்தனை

'என்றும் இளைஞரான' செம்மங்குடி சீநிவாசய்யர் பற்றி என்றும் கணீரென்ற குரல் ஒலிக்கப் பாடும் 'முதிய' வித்துவான் செம்பை வைத்தியநாதய்யர் சொல்கிறார் :

ராஷ்டிரபதி ராஜன்பாபுவிடம் விருது பெறுகிறார்.

யாகவே இருந்து வித்தையை விருத்தி செய்து கொள்ளும் அவா — எல்லாமாகச் சேர்ந்து செம்மங்குடி சீனிவாசய்யரைப் புகழேணியில் உயர்த்தின. ஆரம்ப காலக் கச்சேரிகளில் அவருக்குப் பூரண ஒத்துழைப்பு நல்கிக் கச்சேரியைப் பரிமளிக்கச் செய்தவர்கள் வயலின் வித்வான் ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளையும், மிருதங்க வித்வான் உமையாள் புரம் கோதண்டராமய்யரும் ஆவர்.

சீனிவாசய்யரின் இசையின் பெருமையை அறிந்து உணர்ந்து அவரது கீர்த்தி பெருக இரு மூர்த்திகள் பாடுபட்டனர் — அமரர் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களும், காலம் சென்ற ஆர். கே. மூர்த்தி அவர்களும்தான்!

சங்கீத கலாநிதி செம்மங்குடி சீனிவாசய்யர் சங்கீத சம்பிரதாயத்திலிருந்து இம்மியும் விலகாமல் இருப்பவர். அத்துடன் தாம் செய்யும் ஒவ்வொரு கச்சேரியிலும் நல்ல

[illegible]



சர்வஸ்ரீ அண்ணாசாமி பாகவதர், ராஜமாணிக்கம் பிள்ளை, செம்பை, செம்மங்குடி, அரியக்குடி.

''எனக்குச் செம்மங்குடி சீனிவாசய்யரை ஐம்பது வருஷங்களாகத் தெரியும். ஆமாம்! அவர் பால்ய வயதில் செம்மங்குடி நாராயணசாமி ஐயரிடமும் பிறகு மகாராஜபுரம் விசுவநாதய்யரிடமும் சங்கீதம் கற்றுக்கொண்ட நாளிலிருந்து அவர் படிப்படியாக முன்னேறிய விதத்தை நான் நன்கு அறிவேன். 1926–27ம் ஆண்டுகளில் அவர் கச்சேரிக்காக மேடை ஏறிய தருணத்தில் முதன் முதலில் செம்பையில் மாசி மாதத்தில் நான் நடத்துகிற ஏகாதசி உத்ஸவத்தில் கலந்து கொண்டு அபாரமாகப் பாடினார். விளையும் பயிர் முளையிலே பிரகாசித்தது. அதற்குப் பிறகு அவருக்கு எத்தனையோ இடங்களில் கச்சேரிகள்; அவர் புகழ் விரிந்தது. வளர்பிறை போல் அவர் சங்கீதம் வளர்ந்தது; சிஷ்ய பரம்பரையும் கிட்டியது. சங்கீத கலாநிதி செம்மங்குடி சீனிவாசய்யருக்கு ஜூலை 23ந் தேதி சஷ்டியப்தபூர்த்தி மகோத்சவம் சிறப்பாக நடைபெறப் போவது அறிந்து மகிழ்ச்சி. அன்று குருவாயூரப்பன் சந்நிதியில் இருக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியிருப்பதால் குருவாயூரப்பன் அவருக்குப் பூரண அருள் புரிய நேரடியாகப் பிரார்த்தித்துக் கொள்வேன்.''




சின்னஞ்சிறு
சிங்காரப் பைக்குள்
வைத்திட,
சின்னஞ்சிறு டார்ச்
இதோ!
எவரெடி
கீலெட்
அழகும் கவர்ச்சியும் மிக்க கீலெட் சிகப்பு, மஞ்சள், வெள்ளை ஆகிய பலவண்ண முன் பகுதிகளுடன் வருகிறது. உங்கள் பைக்கு ஒன்றை வாங்குங்கள்.
திட்டமான தேவைகளுக்கென்று தயாரிக்கப்படும் பல விசேஷ எவரெடி டார்ச் மாதிரிகளில் கீலெட் ஒன்று. பல அளவுகளில், பல மாதிரிகளில், பல விலைகளில், உள்ள பற்பல வகைகளிலிருந்து தேர்ந்தெடுங்கள்.
தயாரிப்போர்:
UNION CARBIDE
யூனியன் கார்பைட்
இந்தியாவிலேயே மிக அதிக அநுபவம்பெற்ற டார்ச் தயாரிப்பாளர்கள்
பிரகாசமான ஒளி, நம்பகமுள்ள சக்தி-அது
'எவரெடி' யாகத்தான் இருக்கும்!
UC-4178

பெரியது கேட்கின்....

அனுபவம் புதுமை

ஔவைப் பாட்டியைப் பார்த்து வடிவேலன், ''பெரியது எது?'' என்று கேட்கு முன் அம்மூதாட்டி, அமெரிக்காவுக்குச் சென்று திரும்பியிருந்திருப்பாளேயானால், ''பெரிது பெரிது சகலமும் அமெரிக்காவில் பெரிது'' என்று பொருள்படப் பாடியிருப்பார்.

அமெரிக்கச் சாலை பெரிது; கார் பெரிது. மரங்கள் வானை அளாவும்; கட்டிடங்கள் விண்ணை முட்ட முயலும். விமானங்கள், விமானக் கூடங்கள், ஹோட்டல்கள், தொழிற் சாலைகள், எல்லாமே பெரிது, பெரிது, அதனினும் பெரிதுதான்! ஏன், அந்நாடே மிகப் பெரிது; அதில் வாழும் மக்களின் மனமும் பெரிது, விசாலமானது!

இதயம் பெரிதாயிருப்பதுடன் இருதயமும் பெரிதாயிருக்கிறது பலருக்கு. இதிலேதான் சங்கடம்!

செல்வம் கொழிக்கும் அந்தச் சீமையிலே பலர் சுகபோக வாழ்க்கை நடத்துகிறார்கள். தேவையான அளவு தேகாப்பியாசம் இன்றி அதே சமயம் அபரிமிதமான ஊட்டமுள்ள உணவு வகைகளை உட்கொண்டு ஊதிப் போகிறார்கள். இருதய நோய்க்கு எளிதாக ஆளாகி விடுகிறார்கள்.

வேறு பலருக்கு இன்னொரு மாதிரியான பிரச்னை. பரபரப்பான இந்த யுகத்தில், அமெரிக்காவில் பலர் சற்று நேரம் கூட அமெரிக்கையாக உட்கார்ந்திருக்க முடியாமல் துருதுருவென்று அங்குமிங்கும் உடலாலும் மனத்தாலும் அலைபாய்ந்து கொண்டிருப்பார்கள். அவசரம், அவசரம் என்று அல்லல்பட்டு, நிரம்ப மனக் கிலேசத்துக்கும், படபடப்புக்கும் ஆளாகிறார்கள். விளைவு நரம்புத் தளர்ச்சி, மிகையான ரத்த அழுத்தம், இருதய நோய்.




இரண்டு ஆண்டுகளே வாழக்கூடிய சிறுவன் புரூஸ் நீண்ட ஆயுளைப் பெற்றது ஓர் அற்புதம்.

ரேடியோவில் ஞாயிறு காலை பேசுகிற பாதிரிமார்கள், அமெரிக்கர்களை ஆண்டவனைப் பற்றி நினைக்கச் சொல்லும் முன்பாக அமைதியின் அவசியத்தையும் வலியுறுத்துகிறார்கள். ''சதா சர்வ காலமும் நரம்புகளைச் சுண்டி இழுக்கிற பரபரப்பான வாழ்க்கையை விட்டொழியுங்கள்! மனத்தை ரசனையில் ஈடுபடுத்துங்கள்; இன்று காலை மலர்ந்த பூவின் அழகைப் பாருங்கள்; பட்சியின் கானத்தைக் கேட்டு மகிழுங்கள்; இயற்கைச் செல்வங்களின் சௌந்தர்யத்தில் மனத்தை லயிக்க விடுங்கள்; அந்த நிம்மதியினூடே இறைவனைக் காணப் பழகுங்கள்'' என்று உபதேசம் செய்கிறார்கள்.

அம்மை, காலரா போன்ற தொத்து வியாதிகளை அடியோடு அமெரிக்கர் ஒழித்துத் தான் விட்டார்கள் என்றாலும் நவீன யுகத்



இருதய சிகிச்சை அளிக்கப்பட வேண்டிய முறைகளை விளக்கும் டாக்டர்.



இருதய ஆபரேஷன் நடக்கிறது. கீழே: மருத்துவத்துறையில் இன்று இதுபோன்ற எலெக்ட்ரானிக் சாதனங்கள் நிரம்பத் துணை புரிகின்றன


துக்கு ஏற்பப் புதுவிதமான வியாதிகள் தோன்றி வருகின்றன அங்கே. இருதய நோய், குடல் புண் இவை சகஜம் என்றால் மன நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் ஏராளம்.

உல்லாச புரியான மியாமியில் அழகிய கடற்கரையையும், அறிவின் நிலைக்களனான சர்வகலாசாலையையும் அதிசயத்தில் ஆழ்த்தும் மீன்கள் காட்சிச் சாலையையும் பார்த்ததுடன் அங்குள்ள இருதய நோய் சிகிச்சை நிலையத்தையும் காணும் வாய்ப்புக் கிட்டியது எனக்கு.

இருதய சிகிச்சை நிலையங்களுள் உலகில் சிறந்த ஒன்றான அங்கு, நோயாளிகளுக்குக் கிடைக்கும் நவீன சிகிச்சை முறைகளைப் பற்றிக் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டி யிருந்தது; ஆனால் பார்வையாலேயே புரிந்து கொள்ளக்கூடிய விஷயங்களும் இருந்தன.

முதலில் என் கவனத்தைக் கவர்ந்தது......அல்ல; கண்களைப் பறித்தது அங்கு நிலவிய தூய்மை! திரும்பிய பக்கமெல்லாம் அத்தனை பளபளப்பு, பிரகாசம்! ஒரு தூசு துரும்பு தேடிப் பார்த்தாலும் கிடைக்காது. சுவர்களெல்லாம் ஓர் அழுக்கு, கறல் ஏதுமின்றி ஒளிர்ந்தன. பினைல் நாற்றம் மருந்துக்குக்கூட இல்லை. 'அடடா! நமக்கு ஏதாவது உடம்புக்கு வந்து இங்கே ஒரு வாரம் தங்குகிற வாய்ப்பைப் பெற மாட்டோமா' என்று ஏங்கவே வைத்துவிடுகிற சூழ்நிலை!

எல்லாருமே பூட்ஸ் அணிந்து விரைபவர்கள்தான்; ஆனால் ராணுவ பாணியில் பலமான சத்தம் கேட்கிறமாதிரி யாரும் நடக்கவில்லை. இரைந்து பேசுகிறவர் ஒருவரைக்கூட காண முடியவில்லை. கடமையில் கண்ணுயிராமல், அரட்டை அடித்துக் கொண்டிருக்கிற ஒரு பணியாளரைக் கூடப் பார்க்க முடியவில்லை. நோயாளிகளிலும் யாரும் 'ஆ, ஊ' என்று



கி. ராஜேந்திரன்

கூச்சல் போட்டுக் காபரா செய்யவில்லை. பெரிய பெரிய நோயினையும் இலேசாகத் தாங்கி அமைதி குலையாமலிருந்தார்கள், நல்ல படியாக நம்மைக் கவனிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு.

''நோயாளிகளில் உங்களுக்கு அதிகமாகத் தொந்தரவு கொடுப்பவர் யார்?'' என்று ஒரு நர்ஸைக் கேட்டேன்.

''இப்போது யாருமில்லை; ஆனால் சுமார் ஒரு மாதத்துக்கு முன் ஒருவன் இருந்தான். அவனைப் படுக்கையில் பேசாமல் படுக்கச் செய்வதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது! என்ன சொன்னாலும் கேட்க மாட்டான். ஒரு புன்னகையால் என்னைச் சொக்க வைத்துவிட்டுத் தன்பாட்டுக்கு என்னிடம் விளையாட ஆரம்பித்து விடுவான்... என்ன ஒரு மாதிரி பார்க்கிறீர்கள்! அவனுக்கு வயது ஐந்து!''

நான் சிரித்தேன்.

''உஷ்! உரக்கச் சிரிக்காதீர்கள்!'' என்று எச்சரித்துவிட்டு நர்ஸ் மேலும் கிசுகிசுத்தாள்: ''இருதயத்திலிருந்து நல்லரத்தத்தை எடுத்துக் கொண்டு வரும் 'அயோர்ட்டா' என்னும் பெரிய ரத்தக் குழாய் ஓரிடத்தில் சுருங்கிக் குறுகிப் போயிருந்தது அந்தச் சிறுவனுக்கு. 'இன்னும் இரண்டு வருஷங்கள்தான் இவன் வாழ முடியும்' என்று சிகாகோவில் ஒரு டாக்டர் சொன்னதை ஒட்டுக் கேட்டவன் அவன். அவன் மனம் என்ன பாடு பட்டிருக்கும்! உடம்பின் மேல் பகுதியில் ரத்த அழுத்தம் மிகுதி அவனுக்கு. உடலின் கீழ்ப் பாகத்தில் ரத்தத் துடிப்பே இல்லை என்று சொல்லுமளவுக்கு மிகக் குறைவான அழுத்தம். பிறவியிலேயே ஏற்படும் இந்தக் கோளாறு உள்ளவர்கள் திடுதிப்பென்று ஒரு நாள் இறந்து போவார்கள். சிறுவன் புரூஸ் இங்கு வந்து சேர்ந்ததும் அவனுக்குச் சஸ்திர சிகிச்சை செய்தார்கள். நிபுணர்கள் ரத்தக் குழாயில் குறுகிப் போயிருந்த பகுதியை வெட்டி எடுத்து விட்டு வெட்டப்பட்ட இரு முனைகளையும் சேர்த்து வைத்துத் தைத்து விட்டார்கள்.

''சஸ்திர சிகிச்சை முடிந்து ஐந்தாவது நாள் புரூஸ் கட்டிலை விட்டு இறங்கி நான்கு நடைபாதைகள் சந்திக்கும் இந்தப் பகுதிக்கு வந்துவிட்டான். நாற்சந்தியில் ஆஸ்பத்திரி வாகனங்கள் ஒன்றோடொன்று மோதிக் கொள்ளாதிருக்க போலீஸ் உத்தியோகம் பார்க்க ஆரம்பித்து விட்டான்!''

அந்த நர்ஸின் புன்னகையுடன் கூடவே இனிய நினைவில் கண்களும் கலங்குவதைக் கவனித்தேன் நான்.

அந்த மருத்துவ நிலையத்தைச் சேர்ந்த ஓர் உயர் அதிகாரி அங்குள்ள நவீன வசதிகளை எனக்கு விளக்கிக் கூற ஆரம்பித்தார்.

முன்னாட்களில் சர்ஜன்கள் நோயுற்ற இருதயத்தைப் பற்றி அறிந்துகொள்ள இரண்டே வழிகள்தான் இருந்தன. ஒன்று 'ஸ்டெத்தாஸ்கோப்பு'. காதில் அதை மாட்டிக் கொண்டு இருதய ஒலியைக்கேட்டுக் கோளாறுகளை அறிய முயலுவார்கள். அல்லது ஏதோ சிலந்திக் கூட்டின் படம் எழுதினாற்போன்ற எக்ஸ்ரே நிழற் படத்தைக் கொண்டு நோயினைப் புரிந்துகொள்ள முயலுவார்கள்.

ஆனால் இப்போதெல்லாம் நோயாளியின் இருதயம் ஒவ்வொரு தடவை சுருங்கி விரிவதையும் சினிமாப் படம் போல ஸர்ஜன் டெலிவிஷன் திரையில் காண முடியும்! இதற்காக இருதயத்தின் எந்த அறையைக் கண்காணிக்க விரும்புகிறார்களோ, அதனுள்ளே ரசாயனத் திரவம் ஒன்றைச் செலுத்திவிட்டுப் பிறகு விசேஷ டெலிவிஷன் காமிராவினால் படம் பிடிக்கிறார்கள். இருதயத்தின் நான்கு அறைகளையும், அந்த அறைகளுக்கு இடையே உள்ள 'வால்வு'களையும், அவற்றின் தசைநார்கள் அமைந்துள்ள விதத்தையும், இருதயத்துக்கே ரத்தம் பாய்ச்சி ஊட்டமளிக்கும் கரோனரி ஆர்ட்டரி எனும் ரத்தக் குழாயையும், இவையெல்லாம் இயங்கும் விதத்தையும், இருதயத்தின் அறைகளுக்குள்ளே மாறி மாறி இரத்தம் பாயும் போக்கையும் துல்லியமாக டெலிவிஷன் திரையில் பார்க்க முடியும். நானே பார்க்கவும் செய்தேன்.

'அவனைக் கண்டதும் அவள் இருதயம் படபடவென்று அடித்துக்கொண்டது' என்று சுலபமாகக் கதையில் எழுதிவிடுகிறோமே, அப்படிப் படபடவென்று அடித்துக் கொள்ளும் போது என்னவெல்லாம் நடக்கிறது: ஒரு முஷ்டியின் அளவே உள்ள இருதயத்தில் என்பதை அறிந்து வியந்தேன். ஆனால் என் அருகே இருந்த டாக்டரோ அந்த இருதயத்தின் ஓர் அறையிலிருந்து இன்னொரு அறைக்கு ரத்தம் பாயும்போது ஏற்பட்ட கோளாறைக் கண்டார். இரு அறைகளுக்கும் இடையே, ஒரு பக்கம் மட்டுமே திறந்து கொள்ள வேண்டிய கதவு போல் அமைந்த 'வால்வு' சரியாக இயங்காததை எனக்குச் சுட்டிக் காண்பித்தார்.

''இதைச் சரி செய்ய என்ன நடவடிக்கை எடுப்பீர்கள்?'' என்று கேட்டேன்.


''நாளைக்கு இந்த நோயாளிக்குச் சஸ்திர சிகிச்சை செய்து பழுதடைந்த இந்த வால்வை எடுத்துவிட்டு பிளாஸ்டிக்கினாலான இன்னொரு வால்வைப் பொருத்தி விடுவோம்'' என்றார் ஸர்ஜன்.

பிளாஸ்டிக் வால்வு மட்டுமல்ல, ஒரு ரத்தக் குழாயின் பழுதடைந்த பகுதிக்குப் பதிலாக பிளாஸ்டிக் ரத்தக் குழாயைக் கூட வைத்துத் தைத்துவிடமுடியுமென அறிந்துகொண்டேன்.

இருதயத்தில் சஸ்திர சிகிச்சைக்கு உட்படுபவர்கள் செத்துப் பிழைக்கிறார்கள் என்பது நூறுக்கு நூறு உண்மை. இருதயத் துடிப்பும் சுவாசமும் நின்றுவிட்டால் அத்தியாயம் முடிந்ததாகத்தானே கருதுவோம்? இருதயத்தில் ஆபரேஷன் நடக்கும்போது அதன் துடிப்பு நின்றுவிடுகிறது. நுரையீரல்களின் வேலையையும், இருதயத்தின் பணியையும் 'இருதய நுரையீரல் இயந்திரம்' ஒன்று மேற்கொள்ளுகிறது. உடல் முழுவதற்கும் ரத்த ஓட்டம் நிற்காதிருக்கவும் கெட்ட ரத்தத்தைத் தூய்மையாக்கவும் இந்த இயந்திரம் பயனாகிறது. 1950 முதலே இந்த இயந்திரத்தின் உதவியுடன் இருதய ஆபரேஷன்கள் செய்து வந்திருக்கிறார்கள், மியாமி இருதய சிகிச்சை நிலையத்தில்.

இதற்குள்ளாக நான் அமெரிக்காவில் எதைக் கண்டும் அதிசயப்பட முடியாத

உங்கள் மகனின் கனவை நனவாக்குங்கள்



இவன் பெரியவனானதும் யாராகவிருப்பான்? என்ஜினீயரா? கட்டடக் கலைஞரா? டாக்டரா? அல்லது வக்கீலா? இவர்களில் யாராகவிருக்க இவன் விரும்பினாலும், அதற்கு, பணம் செலவாகும் — ஏராளமாகத்தான். இவனது வருங்கால வாழ்வு வளம் பெறுவதற்காக நீங்கள் பணம் சேமித்து வருகிறீர்களா? வட்டி பெற்று பணம் பெருகிக்கொண்டே வரும் யுகோ பாங்க்கில் சேமித்து வாருங்கள்.

தி யூனைடெட் கமர்ஷியல் பாங்க் லிட்.

நீங்கள் பணம் சேமிக்கலாம், யுகோ பாங்க் உங்களுக்கு உதவி செய்ய முடியும்.

தலைமை ஆபீஸ்: கல்கத்தா

ASF/UCO

மனப் பக்குவத்தை அடைந்திருந்தேன் என்று சொல்ல வேண்டும். ஏனென்றால் அதிசயப்படுவதற்கு அங்கே அத்தனை விஷயங்கள் இருந்தன. அதிசயப்பட்டுப் பட்டு அலுத்துப் போன என்னையே அதிசயத்தில் ஆழ்த்தியது இந்த ஆஸ்பத்திரியில் இருந்த இன்னோர் இயந்திரம். நமக்குப் பெரிதாக உடம்புக்கு ஏதேனும் வந்தால் ரத்தப் பரிசோதனை செய்து கொள்ளுகிறோம். பரிசோதனையின் முடிவுகள் டாக்டருக்குப் பல விஷயங்களை அறிவுறுத்துகின்றன. காலையில் ரத்தப் பரிசோதனைக்குக் கொடுத்தால் மறுநாள் வரச் சொல்வார் அந்த டாக்டர். அல்லது ரொம்ப அவசரக் கேஸானால் 'மாலை வாருங்கள்' என்பார். ஆனால் மியாமி இருதய நோய் சிகிச்சை நிலையத்தில் ஓர் இயந்திரம் ஒரே நிமிஷத்தில் ஒரு நோயாளியின் ரத்தத்தில் பன்னிரண்டு விதமான வெவ்வேறு பரிசோதனைகளை நடத்தி உடனுக்குடன் சரியான முடிவுகளைக் கொடுத்தது! 'ஸீக்குவென்ஷியல் மல்டிபிள் அனலைஸர்' என்பது இதன் பெயர்.

இருதயநோய் கண்டு மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கும் நோயாளிகளைப் படுக்க வைத்திருக்கும் பிரத்தியேகமான அறைக்கு என்னை அழைத்துப் போனார்கள். இத்தகைய நோயாளிகளின் இருதயத் துடிப்பையும், இரத்த அழுத்தத்தையும் இருபத்தி நான்கு மணி நேரமும் அதன் ஒவ்வொரு விநாடியும் கண்காணித்துக் கொண்டே இருந்தன இயந்திரங்கள். அவர்களின் இருதயத் துடிப்புகள் அடுத்தடுத்து தெளிந்து மறையும் ஒளிக் கோடுகளாக டெலிவிஷன் திரைகளில் சதா தெரிந்து கொண்டே இருந்தன. இந்த டெலிவிஷன் திரைகளை வைத்த கண் வாங்காமல் கவனித்துக் கொண்டிருந்தனர் நர்ஸ்கள். இவ்வளவும் போதாதென்று அந்த நர்ஸ்கள் இலவலேசமும் கவனக்குறைவாக இருந்து விட்டால் என்ன பண்ணுவது என்பதற்காக ஓர் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதாவது இருதயத் துடிப்பில் ஒரு சிறு மாறுதல் ஏற்பட்டாலும் அதே கணத்தில் இயந்திரம் தானாகவே அலாரத்தை ஒலிக்கச் செய்யும். கூடவே அந்த மாறுதலான இருதயத் துடிப்பை வரைபடமாகவும் எழுதிக் காட்டும். டாக்டர்கள் ஓடி வருவார்கள். வரை படத்தைப் பார்த்துத் தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள்.

இந்த எலெக்ட்ரானிக் சாதனங்கள் மிக நுணுக்கமான கருவிகள். அந்தக் கருவிகள் புறச் சூழ்நிலையால் பாதிக்கப்படாமல் காப்பாற்றுவதே விஞ்ஞான ரீதியான காரியம். உதாரணமாக இந்த ஆஸ்பத்திரியில் ஒவ்வொரு நோயாளியின் படுக்கைக்கு மேலேயும் ஒரு கலர் டெலிவிஷன் உண்டு. விரும்பிய போது டெலிவிஷன் நிகழ்ச்சிகளைப் பொழுது போக்காகப் பார்ப்பார்கள். அந்த டெலிவிஷன்கள் இயங்குவதால் இந்த அறையில் உள்ள நுணுக்கமான எலக்ட்ரானிக் சாதனங்கள் பாதிக்கப்படும். ஆகவே ஆபத்தான நிலையில் இருக்கும் நோயாளிகளைக் கவனிக்கவென்று அமைக்கப்பட்ட இந்த அறையினை எலெக்ட்ரானிக் அலைகள் ஏதும் உள்ளே நுழைய முடியாதபடி உருவாக்க வேண்டியிருந்தது. இந்தச் சாதனையே ஒரு விஞ்ஞான அற்புதமாகும்.

''அதோ படுக்கையில் இருக்கிறாரே. அவர் நாளை வீட்டுக்குத் திரும்புகிறார். அவரது இருதயத்தைத் துடிக்க வைப்பது என்ன தெரியுமா? ஓர் எலெக்ட்ரானிக் இயந்திரம்தான்'' என்றார் டாக்டர்.

''அந்த இயந்திரம் எங்கே?''

''அது அவர் உடலுக்குள்ளேயே இருக்கிறது! ஒரு பாக்கெட் கடிகாரம் அளவினதான எலெக்ட்ரானிக் சாதனத்தை அவர் உடலுக்குள் பொருத்தி யிருக்கிறோம். அது. இயல்பான, இருதயம் நிமிஷத்துக்கு எத்தனை தடவை அடித்துக் கொள்ள வேண்டுமோ அத்தனை தடவைகள் மின் அதிர்ச்சியை அவரது இருதயத்துக்குச் செலுத்துகிறது. அதனால் இருதயமும் இயங்குகிறது. அவரது இருதயத்தின் தசைநார்களுக்கு இரத்தம் கொண்டு சென்று ஊட்டமளிக்கும் ரத்தக் குழாய் (கொரோனரி ஆர்ட்டரி) பழுதுபட்டுப் போயிற்று. அதனால் இருதயம் சரிவர இயங்க முடியவில்லை. இந்த எலெக்ட்ரானிக் சாதனத்தை அவர் உடலுக்குள் நாங்கள் பொருத்தியிராவிட்டால் அவர் இறந்து போய் இன்று ஒரு மாதமாகி யிருக்கும்.''

''டாக்டர்! நீங்கள் நிகழ்த்தும் அதிசயங்களுக்கு ஓர் எல்லையே இருக்காதோ?'' என்றேன்.


''விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு ஓய்வோ வரம்போ கிடையாதுதான்'' என்றார் அவர். ''இதைவிடப் பெரிய அற்புதங்கள் நிகழவிருக்கின்றன. வெகு சீக்கிரமே வேறு நோய்களின் காரணமாக இறந்து போனவர்களின் இருதயத்தை எடுத்துப் பழுதான இருதயம் உடையவர்களுக்குப் பொருத்தும் சாதனையை டாக்டர்கள் நிகழ்த்துவார்கள் ● அதற்கும் மேலே செயற்கை இருதயத்தையே உருவாக்கி மனிதனுக்குள் இயங்கச் செய்வார்கள்.''

இருதய நோய் காரணமாகக் கைகால்களில் சுவாதீனமிழந்தவர்களுக்கு, அவற்றில் புத்துணர்ச்சி உண்டாக்கத் தரப்படும் சிகிச்சை முறைகள், பயிற்சிகள் இவற்றைப் பார்த்து விட்டு விடைபெற்றேன்.

அந்த நிலையத்தின் வாசலுக்கு வந்தபோது இதுவரை நான் கவனிக்கத் தவறிய பல செப்புப் பட்டயங்கள் இப்போது என் கவனத்தைக் கவர்ந்தன. அவை சுவரில் பதிக்கப் பெற்றிருந்தன. அருகே சென்று உற்றுப் பார்த்தேன், படித்தேன். அத்தனையும் அந்த நிலையம் உருவாகப் பெருமளவுக்கு நன்கொடை அளித்தவர்களின் பெயர்கள்! இத்தனை நவீன வசதிகளையும், நூதனமான கருவிகளையும் கொண்ட மாபெரும் நிறுவனம் இருதய சிகிச்சைக்கு உலகப் பிரசித்தி பெற்ற நிலையம், தனி மனிதர்களின் தாராள மனப்பான்மையால் உருவானதா?

அமெரிக்கர் பலரின் இருதயம் பழுதுபட்டிருக்கலாம்; ஆனால் அமெரிக்காவின் இதயம் நல்ல ஆரோக்கியத்துடன்தான் இருக்கிறது என்பதை அந்தச் செப்புப் பட்டயங்கள் எனக்கு உணர்த்தின.

● இந்த அற்புதத்தை மருத்துவ உலகம் சாதித்து விட்டது.






டென்னிஸ் வாழ்க்கை

வாழ்க்கையை எத்தனையோ விஷயங்களுடன் ஒப்பிட்டுச் சொல்வார்கள் இலக்கிய ஆசிரியர்கள். ஆனால் ஸ்ரீமதி கிங் டென்னிஸ் ஆட்டத்தை வாழ்க்கைக்கு ஒப்பிடுகிறார்! 1966, 67 ஆண்டுகளில் விம்பிள்டன் வீராங்கனைப் பட்டம் பெற்ற பில்லி ஜீன் கிங் இந்த வருடமும் விம்பிள்டன் இறுதி ஆட்டத்தில் மகத்தான வெற்றி பெற்றிருக்கிறார்.

படத்தில் வலதுபுரம் ஸ்ரீமதி கிங்.

பில்லி ஜீனுக்குப் பத்து வயதான போது பதினொன்று, பதினைந்து வயதுப் பெண்களோடு 'சாப்ட் பால்' (Soft ball) விளையாடுவாள். அவள் குழு லாங்க்பீச் 'ஸாப்ட் பால்' போட்டியில் வென்று வாகை சூடியது. நெருப்பணைக்கும் படையைச் சேர்ந்த அவளது தந்தை பில் மோபிட் பாஸ்கெட் பால், பேஸ் பால், ஓட்டப் பந்தயம் ஆகியவற்றில் விற்பன்னர். அவளது அன்னை நீச்சல் அடிப்பதில் கெட்டிக்காரி. மகளிடம் தந்தை, ''நான் இப்போது டென்னிஸ் ஆட்டமும் ஆடுகிறேன்'' என்றாராம். ''அப்பா டென்னிஸ் என்றால் என்ன?'' என்று பத்து வயதுச் சிறுமி பில்லி ஜீன் வியப்போடு வினவினாள். டென்னிஸில் ஓடியாடிப் பந்தை அடிக்க முடியும் என்பதைத் தெரிந்து கொண்டதும் அந்த விளையாட்டை ஆட விரும்பினாள் பில்லி ஜீன். டென்னிஸ் மட்டை வாங்குவதற்காகக் கடுமையான வேலைகளைச் செய்து பொருள் ஈட்டினாள். கிடைத்த சில்லறையை ஒரு 'கண்ணாடிக் கோப்பையில் போட்டு வந்தாள். சிறுகச் சிறுக எட்டு டாலர் சேர்ந்ததும் டென்னிஸ் விளையாட்டில் கலந்து கொண்டாள். டென்னிஸ் 'புரொபஷனல்' கிளாட் வாக்கர் வாரத்தில் ஐந்து நாட்கள் லாங்பீச்சிலுள்ள ஐந்து பொதுப் பூங்காக்களில் இலவசமாக டென்னிஸ் கற்றுக் கொடுத்து வந்தார். அந்த அந்த வட்டாரத்தைச் சேர்ந்தவர்களுக்கு இது வசதியாக இருந்தது. ஆனால் பில்லி ஜீன் ஒவ்வொரு பூங்காவுக்குமே விடாது சென்று விடுவாள். டென்னிஸ் பயிற்சி பெற! பயிற்சி முடிந்த பிறகு ஜீன் ஒரு வாளி நிறையப் பந்துகளை வைத்துக் கொண்டு வலைக்கு மேலாக அடித்துப் பழகுவாள். கால்கள் வலுப் பெறுவதற்காக மூன்றரை மைல்கள் தன் பள்ளிக்கு நடந்தே சென்றாள். முதன் முதலில் போட்டிகளில் கலந்து கொண்ட போது பின்பக்கம் ஓடுவதில் சிரமப்பட்டுத் தோற்றுப்போய் வந்தாள். இதைப் பற்றி ஜீன் சொல்லுகிறாள்: ''பல ஆட்டங்களில் தோற்றுப் போனதன் மூலமாகத்தான் நான் டென்னிஸ் ஆட்டத்தின் சகல நுணுக்கங்களையும்



''ரேடியோவில் பாடகர், பக்கவாத்தியக்காரர்களின் பெயர்களோடு தங்கள் பெயரும் அறிவிக்கப்படணும்னு தம்புரா போடறவா 'ஸ்ட்ரைக்' பண்றா!''

கற்றேன். இக்காலப் பெண்களுக்குத் தோற்றுப்போக மனசு வராது. ஆனால் நீண்ட நாட்களுக்குப் பிறகு பெரிய சாதனைகளைப் புரிய வேண்டுமானால் ஆரம்பகட்டத்தில் பலதடவைகளில் தோல்வி அடையவும் வேண்டும்.''

1959ம் வருஷம் விம்பிள்டன் வீராங்கனை மரியா புயுனோவுடன் ஆடினாள் ஜீன். பிரமாதமாக ஆடித் தோற்றுப் போனாள். அவளது ஆட்டத்தைக் கண்ட டென்னிஸ் பயிற்சியாளர் பிராங்க் பெரன்னன், ''வரும் காலத்தில் நீ தலைசிறந்து விளங்குவாய்!'' என்று ஆசீர்வதித்து, நைலான் நூல் பின்னிய மட்டைகளைப் பரிசாக வழங்கினார். அச்சமயத்தில் நைலான் நூல் பின்னிய டென்னிஸ் மட்டையை விலைக்கு வாங்குவது ஜீனுக்கு இயலாத காரியம்!

1961ம் ஆண்டில் விம்பிள்டன் சென்று கரேனோடு சேர்ந்து ஆடி இரட்டையர் ஆட்டத்தில் ஜயக் கொடி நாட்டினாள். ஜீனுக்குப் பதினேழு வயது; கரேனுக்குப் பதினெட்டு வயது. இத்தனை இளம் வயதில் டென்னிஸில் ஒரு மாபெரும் வெற்றியை அடைந்தவர்கள் வேறு யாருமே கிடையாது. 1963ம் ஆண்டில் ஜீன் கல்லூரியில் படிப்பதை நிறுத்திக் கொண்டாள். டென்னிஸில் அவளுக்கு இடைவிடாத பயிற்சியும் இல்லை. ஆனாலும் விம்பிள்டனில் மூன்று வீராங்கனைகளான மரியா புயுனோ, ஆன் ஜோன்ஸ், லெஸ்லி டர்னர் ஆகியவர்களை வென்று புகழ் பெற்றார். இறுதி ஆட்டத்தில் மார்கரெட் ஸ்மித்திடம் தோல்வி அடைந்தார். மார்கரெட் ஸ்மித் ஜீனிடம், ''நீ டென்னிஸ் பயிற்சியைத் தொடர்ந்து ஏற்றுக் கொள்ளாமல் இருக்கிறாய். பயிற்சி செய்தால் நிச்சயம் விம்பிள்டனில் வெற்றி பெறுவாய்!'' என்று கூறினாள்.

ஆனால் அன்று ஜீனுடைய உள்ளத்தை டென்னிஸை விட முக்கியமானதாக அவள் கருதிய வேறு ஒரு விஷயம் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. அதுதான் காதல்! லாரி கிங்கை நூலகம் ஒன்றில் சந்தித்த ஜீன் அவரைக் காதலித்து மணந்தும் கொண்டு விட்டாள்! ஆஸ்திரேலியாவுக்கு ஜீன் தம்பதியினர் சென்றனர். அவள் ரோனிடம் டென்னிஸ் பயிற்சி பெறத் தொடங்கினாள்.

1967ல் விம்பிள்டன் போட்டியில் ஸ்ரீமதி ஜீன் கிங் தனியர், இரட்டையர், மிக்ஸட் போட்டிகள் மூன்றிலும் வென்று மும்முடி அணிந்த விம்பிள்டன் வீராங்கனையானார்.

ஸ்ரீமதி கிங் மைதானத்தில் வெளிப்படையாகத் தன் அபிப்பிராயங்களைக் கூறி, சர்ச்சைகளை எழுப்பிவிடுவாள். ஒருதடவை எல்லைக் கோட்டு நீதிபதி (Line Judge) தூரத்தில் அமர்ந்து முடிவு கூறியதும் அவர் அருகே ஓடிப் போய், ''இத்தனை தூரத்தில் அமர்ந்து கொண்டு உங்களால் எப்படிச் சரியான முடிவெடுக்க முடியும்?'' என்று இரைந்தாள் ஸ்ரீமதி கிங்.

''நான் முப்பது வருஷங்களாக லைன் ம்பயராக இருக்கிறேன்!'' என்று அந்த மனிதர் பதில் அளித்தார். ஸ்ரீமதி கிங் ஆட்டத்துக்குத் திரும்பிவிட்டாள். மறு ஆட்டம் தொடங்குவதற்குச் சற்று முன் யாரும் கவனிக்காதபோது லைன் ம்பயர் தம் நாற்காலியைக் கோட்டின் பக்கம் தூக்கிப் போட்டுக் கொண்டு விட்டார்!

பில்லி ஜீன் கிங் ஆட்டம் நடந்துகொண்டிருக்கும்போது தன் தவறுகளைத் தானே வெளிப்படையாகக் கண்டித்துக் கொள்வாள்! ''எருமை அடி!'' ''யோசித்து ஆடு!'' என்றெல்லாம் இரைந்து சொல்லிக் கொள்வாள். பலருக்கு இது வேடிக்கையாகவும் விநோதமாகவும் இருக்கும்! சில வருஷங்களுக்கு முன் அமெரிக்க டென்னிஸ் கழகம் நடு மைதானத்தில் இவள் இப்படி உளறுவதற்காகக் கண்டனம் தெரிவித்துத் தண்டனை வழங்கவும் முன்வந்தது.

சட்ட மாணவரான அவள் கணவர் லாரிகிங்குக்கு டென்னிஸ் ஆடத் தெரிந்தாலும் அவர் அவளோடு ஆடமாட்டார். ஒருமுறை ஸ்ரீமதி கிங் டென்னிஸ் போட்டியில் ஈடுபட்டிருந்தபோது அவர் அவள் ஆட்டத்தைப் பற்றி நேர்முக வர்ணனை விமர்சனம் செய்து அதை டேப் ரிகார்டரில் பதிவு செய்துகொண்டார். அவளுக்குப் பெருமை சேர்ப்பதற்காக அவர் இப்படிச் செய்யவில்லை. தம் கவலையை, நடுக்கத்தைக் குறைத்துக் கொள்ளவே இச்செயலில் ஈடுபட்டார்! இன்றும் சில சந்தர்ப்பங்களில் மனைவி ஆடிக் கொண்டிருக்கையில் நிறையத் தின்பண்டங்களை வாங்கி வைத்துக்கொண்டு அவற்றை மளமளவென்று மென்று தின்றபடியே காலத்தை ஓட்டுவார் கிங். மனக் கிலேசத்தைக் குறைக்கத்தான் இந்த ஏற்பாடும்.

''டென்னிஸ் பந்தயம் என்பது வாழ்க்கை மாதிரி. வாழ்க்கையில் மேடு பள்ளங்கள் இருக்கும். தளர்ந்து போய் எங்கே இந்தப் பந்தயத்தில் ஜெயிக்கப் போகிறோம் என்று சோர்வடையாமல் இருந்தால் எதிர்பாராத விதமாக ஒரு வெற்றி கிட்டும். அதைத் தொடர்ந்து படிப்படியாக அந்தப் பந்தயத்தில் வெற்றி பெறலாம். வேறு ஒரு சந்தர்ப்பத்தில் வெற்றி முகத்தில் இருக்கும்போது எதிர்பாராத விதமாய்த் தோல்வி வந்தடையும். ஆம், டென்னிஸ் ஆட்டம் வாழ்க்கையைப் போலவேதான்!'' என்கிறார் ஸ்ரீமதி கிங்.


— குண்டுமணி

உங்களுக்கான குளுமையான நறுமணத்தின் "முத்திரை"

எக்லா உன்னதமான புதிய டால்க்

நிரந்தரமான நறுமணம்...எக்லாவின் புத்துணர்ச்சி அளிக்கும் உயர்ந்த தன்மை! உபயோகித்துப் பாருங்கள்! இதன் ஆனந்தமான புத்துணர்ச்சி உங்கள் உடம்பு முழுவதும் பரவி இருப்பதை உணருங்கள். இது தான் குளுமையான நறுமணத்தின் முத்திரை. நாள் முழுவதும் நீங்கள் நிகரற்ற அழகுடன் விளங்க தயாரிக்கப்பட்டது. இன்றே எக்லா வாங்குங்கள், தினமும் உபயோகியுங்கள்.





கால்கேட்டின் உன்னதமான தயாரிப்பு

EC.G.4TAM

மகாபாரதம்

ராஜாஜி

துரியோதனன் இவ்வாறு கேட்டுக் கொண்டதன் நோக்கம் அதிதி பூஜையைத் திருப்தியான முறையில் செய்யச் சக்தியில்லாமல் பாண்டவர்கள் முனிவருடைய கோபத்துக்கு இரையாகிச் சாபத்தை அடைவார்கள் என்கிற கெட்ட எண்ணம். முனிவரிடம் வரம் பெற்று ஏதாவது தான் நன்மை அடைவதற்குப் பதிலாகத் தனக்கு வேண்டாதவர்களுக்குத் தீமை விளைவிப்பதையே பெரிதாகத் துரியோதனன் எண்ணினான். இதுவே தீயவர்கள் சுபாவம்.

துரியோதனன் கேட்டுக் கொண்டபடியே துருவாசர் சிஷ்யர்களுடன் வனத்திலிருந்த யுதிஷ்டிரனிடம் சென்றார். தன் தம்பிமார்களுடன் தருமபுத்திரன் முனிவரை எதிர் கொண்டழைத்து உபசரித்தான். பிறகு, "ஆற்றில் குளித்து விட்டு வருகிறோம். சாப்பாடு தயாராக இருக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டு முனிவரும் சிஷ்யர்களும் அவசரமாக ஸ்நானத்துக்குச் சென்றார்கள்.

வனவாச ஆரம்பத்தில் யுதிஷ்டிரன் செய்த தவத்தினால் சூரிய பகவான் பிரத்யட்சமாகி ஓர் அட்சய பாத்திரத்தைப் பாண்டவர்களுக்குத் தந்தான். "இதைப் பெற்றுக் கொள். பன்னிரண்டு வருஷம் இதன் மூலம் உனக்கு அன்னம் தருவேன். தினமும் திரௌபதி இந்தப் பாத்திரத்தைக் கொண்டு எவ்வளவு பேருக்கு அன்னம் அளிக்க விரும்புகிறாளோ, அதுவரையில் அன்னம் வளரும். அனைவருக்கும் உணவு அளித்துவிட்டுத் திரௌபதி புசித்தபின் அதன் சக்தி அன்றைக்கு மறைந்து விடும்" என்று சூரிய பகவான் வரம் கொடுத்திருந்தான்.

இதன்படி தினமும் பிராமணர்களும் அதிதிகளும் புசிப்பார்கள். பிறகு தம்பிகள் உண்டபின் தருமபுத்திரன் போஜனம் செய்வான். அதன் பின் கடைசியாகத் திரௌபதி உண்பாள். துருவாசர் வந்த சமயம் எல்லோரும் போஜனம் முடித்துவிட்டுத் திரௌபதியும் சாப்பிட்டு முடித்திருந்தபடியால் அட்சய பாத்திரத்தின் சக்தி அன்று தீர்ந்து போயிருந்தது.

முனிவரும் சிஷ்யர்களும் குளித்துவிட்டு வருவார்களே, என்ன செய்வது என்று பெரும் கவலையுடன் ஒரு வழியும் தோன்றாமல் திரௌபதி பகவானைத் துதித்தாள். "பிரபுவே! சரணமடைந்தவர்களைக் காப்பவனே! கதியற்றவர்களுக்குக் கதியைக் கொடுப்பவனே! துருவாசருடைய கோபத்துக்கு ஆளாகாதபடி என்னைக் கரையேற்ற வேண்டும்" என்று இறைஞ்சினாள்.

உடனே திரௌபதியின் சங்கடத்தைத் தீர்க்க வாசுதேவன் [வனத்தில்



சமையற்கட்டிலிருந்த திரௌபதியிடம் சென்றான். ''மிக்கப் பசியாக வந்திருக்கிறேன். சீக்கிரம் அன்னம் கொண்டு வா. பிறகு எல்லாக் காரியமும்'' என்றான்.

திரௌபதி, ''ஐயோ! இதென்ன பரீட்சை! கண்ணனே, நான் போஜனம் செய்துவிட்டேன். சூரியனால் தரப்பட்ட பாத்திரத்தின் சக்தி இன்று முடிந்து விட்டது. துருவாசர் இச்சமயம் வந்திருக்கிறார். நான் என்ன செய்வேன்? முனிவருடன் சீடர்களும் குளித்துவிட்டு வந்துவிடுவார்கள். போதாததற்கு நீரும் இப்போது வந்து பசி என்கிறீர்!'' என்று சொல்லித் தத்தளித்தாள்.

''நான் பசியால் வருந்துகிறேன். பரிகாசத்துக்குச் சமயமல்ல. பாத்திரத்தைக் காட்டு, பார்க்கலாம்'' என்றான் கண்ணன். திரௌபதி எடுத்துக் காட்டினாள். அதன் விளிம்பில் கொஞ்சம் கீரையும் ஒரு சோற்றுப் பருக்கையும் ஒட்டிக் கொண்டிருந்தன. அதைக் கண்ணன் கிறி எடுத்து, ''இது விசுவரூபனாகிய ஹரிக்கு உணவாகி அவன் பசி தீர்ந்து ப்ரீதி அடைவானாக!'' என்று மனத்தில் சொல்லிச் சோற்றுப் பருக்கையை வாயில் போட்டுக் கொண்டான்.



திரௌபதி வெட்கமும் கவலையும் கொண்டு, ''ஐயோ! நான் பாத்திரத்தை நன்றாக அலம்பாததால் அதில் ஒட்டிக் கொண்டிருந்த சோற்றுப் பருக்கையை எடுத்து வாசுதேவன் உண்டானே'' என்று எண்ணி வருத்தப்பட்டாள்.

கண்ணன் வெளியே போய் பீமசேனனைப் பார்த்து, ''சீக்கிரம் ஆற்றுக்குச் சென்று முனிவர்களைப் போஜனத்துக்கு அழைத்து வா!'' என்று சொல்லியனுப்பினான்.

பீமசேனன் விரைந்து சென்று ஆற்றில் துருவாசர் முதலிய ரிஷிகள் இருந்த இடத்துக்குப் போனான். அவர்கள் அனைவரும் போஜனம் செய்து திருப்தி அடைந்தவர்கள்போல் ஏப்பம் விட்டுக் கொண்டிருந்தார்கள். ''தரும புத்திரனை அன்னம் தயார் செய்யச் சொல்லி வந்தோமே! எங்களுக்கு வயிறு நிறைந்து பொறுக்க முடியாமல் இருக்கிறதே!'' என்று சீடர்கள் துருவாசருக்குச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். பிறகு துருவாசரும் பீமசேனனிடம் ''நாங்கள் சாப்பிட்டாயிற்று. எங்களுடைய தவற்றை மன்னிக்க வேண்டும் என்று தரும புத்திரனுக்குச் சொல்'' என்று கேட்டுக் கொண்டு அனைவரும் மறைந்தனர்.

அகில விசுவமும் கண்ணனுக்குள் அடங்கியிருந்தபடியால் அவன் உண்ட ஒரு சோற்றுப் பருக்கை ரிஷிகளுக்கெல்லாம் பசியாற்றி விட்டது.

42. நச்சுப் பொய்கை

பாண்டவர்களுடைய பன்னிரண்டு வருஷ வனவாசம் முடியும் காலம் நெருங்கிற்று.

ஒரு நாள் வனத்தில் வசித்து வந்த ஓர் ஏழைப் பிராமணனுடைய

அரணிக் கட்டையின் மேல் ஒரு மான் உடலை உராய்ந்து விட்டுத் திரும்பிச் செல்லும்போது அரணிக்கட்டை அதன் கொம்பில் மாட்டிக் கொண்டது.

அரணி என்பது தீக்குச்சி இல்லாத அந்நாட்களில் நெருப்பு உண்டாக்குவதற்காக ஆசிரமங்களில் வசிப்பவர்கள் வைத்துக்கொண்டிருந்த கடைக்கோலும் கீழ்க்கட்டையுமான ஓர் எந்திரம்.

கொம்பில் அரணிக் கட்டை மாட்டிக் கொண்டதும் மான் மிரண்டு வேகமாக ஓடிற்று. பிராமணன், ''ஐயோ! என் அரணியைத் தூக்கிக் கொண்டு போய்விட்டதே! அக்கினி ஹோத்திரத்திற்கு நான் என்ன செய்வேன்?'' என்று கத்திக் கொண்டு பக்கத்தில் குடிசையில் வசித்து வந்த பாண்டவர்களிடம் ஓடிப் போய் முறையிட்டான்.

பாண்டவர்கள் மானைப் பிடிக்க ஓடினார்கள். அரணியைத் தூக்கிக் கொண்டு போன மான் மாய மான். அது துள்ளிக் குதித்து வேகமாகச் சென்று பாண்டவர்களைக் காட்டில் வெகு தூரத்தில் இட்டுக் கொண்டு போய் மறைந்து விட்டது.

பாண்டவர்கள் மிகக் களைப்படைந்து ஓர் ஆலமரத்தடியில் உட்கார்ந்தார்கள். எல்லாரும் பெருந் தாகத்தால் வருந்தினார்கள். நகுலன் யுதிஷ்டிரனைப் பார்த்து, ''அந்தப் பிராமணனுக்காக இந்த அற்பக் காரியத்தைக் கூட நம்மால் செய்து முடிக்க இயலாமல் போய்விட்டதே! நாம் என்ன தாழ்ச்சியை அடைந்து விட்டோம்'' என்றான்.

இவ்வாறு நகுலன் வருத்தப்பட்ட போது, பீமன், ''திரௌபதியைச் சபைக்கு இழுத்து வந்தார்களே. அப்போது நாம் அந்த நீசர்களைக் கொன்றிருக்க வேண்டும். அது செய்யாதபடியால் அல்லவா நாம் இந்தச் சங்கடங்களை அடைந்தோம்?'' என்று சொல்லி அர்ச்சுனனை வருத்தத்தோடு பார்த்தான்.

அருச்சுனனும், ''ஆம்! அந்தத் தேரோட்டி மகன் சொன்ன கடுஞ் சொற்களைக் கேட்டபின்னும் நான் சும்மா நின்றேன். அதனால் இந்த நிலைமையில் இருக்கிறோம்'' என்றான்.

எல்லாரும் களைப்பினால் பொறுமையும் தைரியமும் இழந்திருப்பதைக் கண்ட யுதிஷ்டிரனுக்கு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. பொறுக்க முடியாத தாகம் வாட்டிற்று. நகுலனைப் பார்த்து, ''தம்பி! அந்த மரத்தின் மேல் ஏறிச் சமீபத்தில் எங்காவது ஜலம் இருக்கிற குளமாவது ஆறுவது தென்படுகிறதா பார்!'' என்றான்.

நகுலன் மரத்தின்மேல் ஏறிப் பார்த்துவிட்டு இறங்கி வந்து ''கொஞ்ச தூரத்தில் ஜலத்தை அடுத்து வளரும் செடி வகைகளும் கொக்குகளும் தென்படுகின்றன. அந்த இடத்தில் கட்டாயமாக ஜலம் இருக்கும்'' என்றான்.

''போய்ப் பார்த்து, அவ்விடத்தில் ஜலம் கிடைத்தால் சீக்கிரம் எடுத்துக் கொண்டு வா!'' என்று யுதிஷ்டிரன் சொல்ல நகுலன் விரைவாகப் போனான்.

போன இடத்தில் எதிர்பார்த்தபடி ஒரு பொய்கையைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி யடைந்தான். தன் தாகத்தையும் தீர்த்துக் கொண்டு அம்புத் தூணியிலும் தண்ணீர் நிரப்பிக்கொள்ளலாம் என்று நகுலன் பொய்கையில் இறங்கினான். நிர்மலமான ஜலத்தில் கையைத் தோய்த்ததும் ஓர் அசரீரிப் பேச்சு ஆகாயத்தில் உண்டாயிற்று.

''சாகசம் செய்யாதே! இது என் வசமுள்ள குளம். மாத்ரீ புத்திரனே! என் கேள்விக்கு விடை கூறிவிட்டுப் பிறகு தண்ணீரைக் குடி!'' என்றது.

நகுலன் திடுக்கிட்டான். ஆனால், தாகத்தின் வேகத்தினால் அதைக் கவனியாமல் ஜலத்தை எடுத்துக் குடித்தான். குடித்து விட்டுக் கரை ஏறினதும் மயக்கம் உண்டாகிக் கீழே விழுந்தான்.

போனவன் திரும்பி வரவில்லையே என்று தரும புத்திரன், சகதேவனை அனுப்பினான். சகதேவன் பொய்கையண்டை சேர்ந்ததும் அங்கே பூமியில் படுத்துக் கிடந்த சகோதரனைக் கண்டான். அவனை யாரோ கொன்று விட்டார்கள் என்று ஊகித்துக் கொண்டே தாகம் பொறுக்காமல் தண்ணீரண்டை சென்றான்.

அசரீரி முன்போலவே, ''சகதேவா! இது என் பொய்கை. என்னுடைய கேள்விக்கு விடை சொன்ன பிறகே தாகம் தீர்த்துக் கொள்ளலாம்!'' என்றது.

நகுலனைப் போலவே தாகம் மேலிட்ட சகதேவனும் அசரீரி எச்சரிக்கையைக் கவனிக்காமல் தண்ணீரைக் கண்டதும் எடுத்துக் குடித்தான். அவனும் உடனே இறந்து கீழே விழுந்தான்.

சகதேவனும் திரும்பி வராததைக் கண்ட யுதிஷ்டிரன், அருச்சுனனைப் பார்த்து, ''ஜலத்துக்காகப் போனவர்கள் வெகு நேரமாகியும் என்ன காரணமோ திரும்பி வரவில்லை. நீ போய் அவர்களுக்கு ஏதேனும் ஆபத்து நேரிட்டதா, பார். ஜலமும் கொண்டு வா!'' என்று சொல்லி அனுப்பினான்.

அருச்சுனன் வேகமாகச் சென்றான். குளத்தண்டை தம்பிகள் இருவரும் செத்துக் கிடப்பதைப் பார்த்தான். திடுக்கிட்டு இதற்குக் காரணம் யாராக இருக்கலாம் என்று யோசித்துக்

கொண்டே அவனும் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளப் பொய்கையில் இறங்கினன். அப்போது, ''நான் கேட்கும் வினக்களுக்கு விடை சொல்லிவிட்டுப் பிறகு தாகம் தீர்த்துக் கொள்வாய். இது என் வசமுள்ள பொய்கை. மீறினுயால் நீயும் தம்பிகளைப் போலவே மாள்வாய்!'' என்றது அசரீரி.

அருச்சுனனுக்குக் கோபம் மேலிட்டது. ''நீ யார்? கண்ணுக்கெதிரில் நின்று தடு. இதோ இந்தப் பாணங்களால் உன்னைக் கொல்வேன்'' என்று சொல்லிச் சத்தத்தைக் கொண்டே குறி பார்த்துப் பாணங்களை விட்டான். அசரீரி அம்புகளை அலட்சியம் செய்து ''உன்னுடைய பாணங்கள் என்னைத் தீண்டா. என்னுடைய கேள்விகளுக்கு விடை சொல்லிவிட்டுத் தாகம் தீர்த்துக் கொள். அவ்வாறு செய்யாமல் தண்ணீரைப் பருகினல் இறந்து போவாய்'' என்றது.

செலுத்திய பாணங்கள் வீணுனதைக் கண்டு அருச்சுனன் கோபத்தோடு கடும் யுத்தம் புரிவதற்கு ஆயத்தமானுன். பெரிய யுத்தத்தில் இறங்குவதற்கு முன் தாகத்தைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று பொய்கையில் இறங்கித் தண்ணீர் குடித்தான். குடிக்கவே, அவனும் இறந்தான்.

''அப்பா! பீமசேனு! சத்துருக்களை சம்ஹாரம் செய்பவனே! அருச்சுனனும் திரும்பவில்லை. நீ போய்ச் சகோதரர்கள் என்னவானுர்கள் என்பதைப் பார்த்துவிட்டு, தண்ணீரும் கொண்டு வா! காலம் நமக்கு விரோதமாக இருக்கிறது. உனக்கு மங்களம்! எனக்குத் தாகம் பொறுக்க முடியவில்லை'' என்றுன் யுதிஷ்டிரன். பீமன் வேகமாகப் போனுன்.

பொய்கையண்டை மூன்று சகோதரர்களும் உயிர் துறந்தவர்களாக விழுந்து கிடப்பதைப் பார்த்துப் பீமனுக்குத் தாங்க முடியாத துக்கம் மேலிட்டது. ''இது யட்சர்களுடைய வேலையாகத்தான் இருக்க வேண்டும். அவர்களைப் போர் புரிந்து வீழ்த்துவேன். அதற்குள் தண்ணீர் குடித்து என் தாகத்தைத் தீர்த்துக் கொள்வேன்'' என்று எண்ணிப் பொய்கையில் இறங்கப் போனுன்.

''அப்பா, பீமசேனு! சாகஸம் செய்யாதே! என் வினக்களுக்குப் பதில் சொல்லிவிட்டுத்தான் குளத்தில் இறங்க வேண்டும். நான் சொன்னதை மீறித் தண்ணீர் குடித்தாயானுல் சாவாய்!'' என்றது அசரீரி.

''நீ யாரடா என்னைத் தடுக்க?'' என்று சொல்லிக் கொண்டே பீமன் நச்சுத் தண்ணீரைக் குடித்து விட்டுச் சகோதரர்களைப் போல் அவனும் கீழே விழுந்தான்.

''ஒரு நாளும் நடவாத விஷயமாக இருக்கிறதே! நெடுநேரமாகியும் போன சகோதரர்கள் யாரும் திரும்பாமல் இருப்பதற்கு என்ன காரணம்? ஏதேனும் சாபத்தை அடைந்து விட்டார்களோ? ஜலத்தைக் காணுமல் காட்டில் திரிந்து கொண்டிருக்கிருர்களோ? நானே போய்த்தான் பார்க்க வேண்டும்'' என்பதாக யுதிஷ்டிரன் நிச்சயித்து வனத்திற்குள் சகோதரர்களைத் தேடிக் கொண்டு போனுன்.


ஜன சஞ்சார மில்லாததும், புள்ளி மான்களும், பன்றிகளும், பறவைகளும் நிறைந்திருந்ததுமான நச்சுப் பொய்கை வனத்தண்டை தரும புத்திரன் போனுன். அழகான பச்சைப் புல்; அதன் மேல் விழாத் தீர்ந்த இந்திர துவஜங்களைப் போல் சகோதரர் நால்வரும் வீழ்ந்து கிடப்பதைக் கண்டு ஆச்சரியமும் துக்கமும் அடைந்தான். சோகத்தைத் தாங்க முடியாமல் கண்ணீர் விட்டான்.

''அப்பா! பீமனே! உன் சபதம் எல்லாம் வீணுயிற்றே! வனவாசம் முடியப் போகும் சமயத்தில் இறந்து விட்டாயே! தெய்வங்கள் சொன்ன வாக்கெல்லாம் பொய்யாகி விட்டதே!'' என்று உயிரற்று வீழ்ந்து கிடக்கும் பீமனையும், அருச்சுனனையும் தழுவிப் புலம்பினுன்.

''எந்தப் பகைவன் உங்கள் அனைவரையும் கொல்லும் சாமர்த்தியம் படைத்தான்!'' என்று மீண்டும் சகோதரர்களைப் பார்த்துக் குழந்தை போல் அழுதான். ''உயிரற்றுக் கிடக்கும் இந்த நகுல சகதேவர்களைப் பார்த்தும் என்னுடைய எஃகு இதயம் வெடிக்காமல் இருக்கிறதே! நான் இந்த உலகத்தில் இனி என்ன செய்வதற்காக உயிருடன் இருக்க வேண்டும்?'' என்று நொந்து கொண்டான்.

பிறகு நன்ருகக் கவனித்துப் பார்த்து, ''இது ஏதோ மாயமாகத் தோன்றுகிறது. இவர்களுடைய உடல்களில் காயம் ஏதும் இல்லை. உறங்குபவர்களைப் போல் முகத்தில் எவ்வித மாறுபாடும் இல்லாமல் கிடக்கிருர்கள். விரோதிகளுடைய காலடிகள் கூட மண்ணில் காணப்படவில்லை. இது துரியோதனனுடைய சதியாகவே இருக்கலாம். ஜலத்தில் விஷம் கலந்திருக்கலாம்'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டே தாகத்திஞல் ஏவப்பட்டுப் பொய்கையில் இறங்கினுன். உடனே அசரீரி பேச ஆரம்பித்தது.

(தொடரும்)



ஆழ்கடலுக்குள் ஒரு கப்பல்

[இம்மாதம் விசாகப்பட்டினம் துறை முகத்துக்கு வந்து சேரும் பாரதக் கப்பற் படையின் முதல் நீர்மூழ்கிக் கப்பல் ருஷ்யாவிடமிருந்து வாங்கப்பட்டது. நீண்ட கடற்கரையை யுடைய பாரதத் தின் பாதுகாப்புக்குக் கடற்படை வலிமை மிக்கதாய் இருக்க வேண்டியதன் அவசி யத்தை அதிகம் வலியுறுத்தத் தேவை யில்லை. பாரதத்தின் முதல் நீர்மூழ்கிக் கப்பலை வாழ்த்தி வரவேற்கும் முகமாக இக் கட்டுரையை இங்கு அளிக்கிறோம். நீர்மூழ்கிக் கப்பல்கள் இயங்கும் விதம், அவற்றின் பயன் முதலான தகவல்களை அளிக்கிறது கட்டுரை.]

நீர்மூழ்கிக் கப்பல்கள் கண்டுபிடிக்கப்பட்டு நீண்ட காலம் ஆகிவிட்டிருந்த போதிலும் முதல் உலக மகாயுத்தத்தின்போதுதான் நீர் மூழ்கிக் கப்பல்கள் பெருமளவில் போரில் பங்கு கொண்டன. ஒளிந்திருந்து அழிக்கும் திறன் படைத்த ஒரு கப்பலின் மதிப்பு அப் போது நன்றாக உணரப்பட்டது. உலக யுத்தங் களின்போது கடலில் நிகழ்ந்துள்ள சேதங் களில் 75 சதவிதம் நீர்மூழ்கிக் கப்பல்களால் நேர்ந்தவையே எனக் கணக்கிட்டிருக் கின்றனர்.


இரண்டாவது உலகப் போரில்தான் இதன் அழிக்கும் சக்தியையும், கடற்படைக்கு இது எவ்வளவு இன்றியமையாதது என்பதையும் வல்லரசுகள் நன்கு உணர்ந்தன. அதன் பய னாக நீர்மூழ்கிக் கப்பல்களின் தொகையும் பெருகலாயிற்று.

நீர்மூழ்கிக் கப்பல் எவ்வாறு இயங்குகிறது? இதன் அடிவாரத்தில் 'பலாஸ்ட்' என்ற பகுதி உண்டு. இதனுள் கடல் நீரை நிரப்ப வும் வெளியேற்றவும் விசைகள் இருக்கின் றன. கடல் நீர் உள்ளே புகுந்து கனம் அதி கரிக்கும்போது கப்பல் கடலுக்குள் மூழ்கு கிறது. நீர் வெளியேற்றப்பட்டால் கப்பல் மேலே வருகிறது. எந்த அளவுக்கு நீரை உள்ளே விட வேண்டும் என்பதை நிர்ண யிப்பவர் 'டைவிங் ஆபீஸர்'. கப்பலில் உள்ள மனிதர்களின், ஏற்றப்பட்டுள்ள சாமான் களின் எடைக்கு ஏற்பக் கணக்கிட்டுக் கடல் நீரை குறிப்பிட்ட அளவுக்கு உள்ளே வர அனுமதிக்கிறார். கணக்குப் பிசகினால் ஆபத் தாக முடியும். அளவுக்கு அதிகமாகக் கடல் நீர் உட்புகுந்து கப்பல் அதிக ஆழத்துக்குப் போய்விடும். அங்கே நீரின் அபரிமிதமான அழுத்தம் கப்பலை நசுக்கியே விடும்!

நீர்மூழ்கிக் கப்பலுக்கு இரட்டைச்சுவர்கள் உண்டு. உட்புறச்சுவர் ஆழ்கடலில் நிலவும் நீரின் அழுத்தத்துக்கு ஈடு கொடுக்குமாறு

இடது பக்கம்: ஆமை எனப் பெயர்பெற்ற ஆரம்ப கால நீர்மூழ்கிக் கப்பல்.


கீழே: நீர்மூழ்கிக் கப்பல் படிப்படியாக நீருக்குள் தாழ்கின்ற விதத்தைக் காட்டும் சித்திரம்.




உறுதியாக அமைக்கப்பட்டுள்ளது. வெளிச் சுவர் அத்தனை உறுதியாக இருக்க வேண்டிய தில்லை. ஏனெனில் இரு சுவர்களுக்கும் இடையே கடல் நீர் உட்புகுந்து இருப்பதால் ஆழ்கடலின் அழுத்தத்தை அது சமன்படுத்தி விடுகிறது.

நீர்மூழ்கிக் கப்பல் எல்லாத் திசைகளிலும் திரும்பும் வகையில் அமைக்கப்பட்டிருப்ப துடன் அதன் முன் முனை அல்லது 'மூக்கு' மேல் நோக்கி இருக்குமாறோ அல்லது கீழ்

ஒரு பிரிட்டிஷ் நீர்மூழ்கிக் கப்பலின் உள் தோற்றம். ▶





அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலின் மேல் தளத்தில் மாலுமிகளும் தளபதிகளும்.


நோக்கி இருக்குமாறே செய்யவும் விசைகள் உண்டு.

கடலில் மிதந்து செல்லும்போது டீஸல் எண்ணெயிலும், கடலுக்கு அடியில் செல்லுகையில் பாட்டரிகளின் உதவியாலும் நீர் மூழ்கிக் கப்பல்கள் இயங்குகின்றன. பாட்டரியின் சக்தி குன்றிவிட்டால் மேல் மட்டத்துக்கு இவை வரும்போது மீண்டும் பாட்டரிகள் 'சார்ஜ்' செய்யப்பட்டு விடும். பொதுவாக இரவு வேளைகளில் இவை கடலின் மேல் மட்டத்தில் மிதக்கும். பகல் வேளைகளில் பிற கப்பல்கள் இவற்றைக் கண்டு பிடிக்க முடியாவண்ணம் நீருக்குள் மூழ்கி ஒளிந்து கொண்டு விடும். நீர் மட்டத்துக்கு மேல் எழும்பி நிற்கும் பெரிஸ்கோப் என்ற கருவியின் 'உதவியால், நீருக்குள் இருக்கும்போதே அண்மையில் உள்ள கப்பல்களை இவை கண்டுபிடித்துவிட முடியும். பல மாதங்கள் தொடர்ந்து இவை நீர் மட்டத்துக்கு அடியிலேயே மூழ்கிச் சென்று வேவு பார்க்கும் வேலையில் ஈடுபட இயலும்.

இரண்டாவது உலகப் போரில் ஈடுபட்டிருந்த நீர் மூழ்கிக் கப்பல்கள் பெரும்பாலும் 15, 20 மைல் வேகம் செல்லக் கூடியவையே. ஆனால் போர்க் கப்பல்கள் இவைகளை விட அதிக வேகத்தில் செல்லக் கூடியவை. எனவே நீர்மூழ்கிகளைத் துரத்திச் சென்று போர்க் கப்பல்கள் அழித்து விடுவதும் எளிது. நீர் மூழ்கிக் கப்பல்களில் பணியாற்றும் கடற்படை வீரர்கள், அதிகாரிகள் இவர்களுக்கு ஆபத்து அதிகம் என்றே கூற வேண்டும். பிரயாணிகள் சாமான்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களைப் போல் இவை மிகப் பெரியனவாக இரா. எனவே இட நெருக்கடியும் அதிகம் தான். இந்த நிலையிலும் இவை கடலுக் கடியில் ஒளிந்து புரியும் சாகசங்கள் வியக்கத்தக்கவை. கடந்த உலகப் போரில் ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று ஸ்காட்லாந்துத் துறைமுகத்தில், பலத்த பந்தோபஸ்துகளை மீறித் துறைமுகத்தினுள் நுழைந்து அங்கிருந்த பிரிட்டிஷ் கப்பல்களுக்குச் சேதம் விளைவித்துவிட்டுத் தப்பி ஓடிவிட்டதாம். மின்சாரம் பாயும் கம்பிகளால் துறைமுகத்தைச் சுற்றிலும் கடலுக் கடியில் வேலி போட்டது போல் பாதுகாப்பு செய்யப் பட்டிருக்கும். அங்கங்கே கரங்க வெடிகளும் (Mines) உண்டு. குறிப்பிட்ட இடத்தில் சில சமிக்ஞைகளின் பேரில் நேச நாட்டுக் கப்பல்களுக்கு மட்டும் பிரவேசிக்க வழி விடப்படும். இவ்வளவு தடைகளுக்கும் டிமிக்கி கொடுத்துவிட்டு எதிரிக் கப்பல்களுக்குச் சேதம் விளைவித்து வெற்றிகரமாகத் திரும்பிய அந்த நீர்மூழ்கிக் கப்பலின் அதிகாரிக்கு இரும்புச் சிலுவை (Iron cross) அணிவித்துக் கௌரவித்தாராம் ஹிட்லர்.

அணுவின் சக்தியைப் பல துறைகளிலும் பயன்படுத்தத் தொடங்கிய பிறகு அணு சக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்கள் தோன்றின. முதன் முதலாக உருவான அணுசக்தி நீர் மூழ்கிக் கப்பல் 'நாட்டிலஸ்' அமெரிக்காவைச் சார்ந்தது. சாதாரண நீர்மூழ்கிக் கப்பல்களைவிட அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிகளுக்கு வேகம் மிகவும் அதிகம். பல ஆயிரம் மைல்கள் தொடர்ந்து இவை இயங்கும் வல்லமை பெற்றவை. உலகிலேயே மிகப் பெரியது எனக் கருதப்படும் 'ட்ரைடன்' (Triton) என்ற அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் மணிக்குச் சுமார் 40 மைல் வேகம் போகக் கூடியது. இதற்கு ஒரு தடவை எரிபொருள் அளித்தால் போதும். சுமார் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் மைல்கள் பிர

அணுசக்தியால் இயங்கும் அமெரிக்க நீர் மூழ்கிக் கப்பல்



யாணம் செய்யும். 156 கடற்படை அலு வலர்களும் 14 அதிகாரிகளும் கொண்ட இந்த நீர்மூழ்கிக் கப்பல் அமெரிக்காவுக்குச் சொந்தமானது. இன்று ருஷ்யா, அமெரிக்கா ஆகிய இரு வல்லரசுகளிடமும் அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக்கப்பல்கள் உள்ளன. அணு சக்தியை விட்டு ஆதிகாலத்துக்குப் போனால் அன்றைய நீர்மூழ்கிக் கப்பலுக்கு 'ஆமை' என்று பொருத்தமான பெயர் உள்ளதைக் காண்போம்! இது 1776ல் ஓர் அமெரிக்கரால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த ஆமை அமெரிக்கப் புரட்சிப்போரில் பங்கு பற்றி இருக்கிறது. யுத்தத்தில் பங்கு பற்றிய முதல் நீர்மூழ்கிக் கப்பல் இந்த 'ஆமை'யே! —பாணன்

விமரிசனத்தில் வால்மீகி!

''**வா**ல்மீகியா? இதென்னய்யா வேஷம்?''

''வேஷமில்லே ஐயனே! பூலோகத்திலே, என்னையும் கதாநாயகனாக்கி நாடகம் ஒன்று போட்டா. அதைப் பார்த்துட்டு வரேன்.''

''பார்த்துட்டு வரீரா? அல்லது நடிச்சுட்டு வரீரா?''

''நடிச்சுட்டு வரதா? என் வேஷம் போட்ட வருக்கே அதிலே நடிப்புக்கு வாய்ப்பு இல்லையே, ஐயனே!''

''என்ன, கதாநாயகனுக்கே வேலை இல்லையா? நாடகத் துறையிலே இது ஒரு புது உத்தியா யிருக்கும் போலிருக்கே! நாடகம் எப்படி இருந்தது?''

''பூலோகத்திலே, அதுவும் சிறப்பாகத் தமிழ் நாட்டிலே நடக்கும் நாடகங்களெல்லாம் இப்பொழுது நகைச்சுவையையே பிரதானமாகக் கொண்டுள்ளன. தற்கால உலகப் போக்கை நையாண்டி செய்தால் பார்ப்பவர்களும் சந்தோஷப் படுகிறார்கள்; நடிப்பவர்களும் அதிகச் சிரமமின்றி 'அப்ளாஸ்' பெறுகிறார்கள். இந்தச் சூட்சுமத்தைத் தெரிந்து கொண்ட திருவல்லிக்கேணி பைன் ஆர்ட்ஸ் குழுவினர், ஆனந்த விகடனில் மெரீனா எழுதிய 'வடபழநியில் வால்மீகி'யைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அதோடு நகைச்சுவைக்கு முக்கியத்வம் கொடுக்கும் முனைப்பில் கதாநாயகன் வால்மீகியைப் பின்னுக்குத் தள்ளி விட்டிருக்கிறார்கள். பாவம், நடிகர் வால்மீகி!''

''சமூகத்தின் எந்த எந்த அம்சங்களை நையாண்டி செய்தார்கள்?''

''கதைப் பிரவசனம் செய்வோர், சினிமாப் படம் எடுப்போர், சமூக சேவகிகள், அமெச்சூர் நாடகக் குழுவினர் ஆகியோர். இவர்களை யெல்லாம் நையாண்டி செய்யும்போது திரும்பத் திரும்ப என் ராம கதைதான் அகப்பட்டுக் கொண்டு போராடுகிறது. அதனால் நாடகம் வளர வளர ரசிகர்களுக்கு 'போர்' ஆகிவிடுகிறது. இருந்தாலும் என் மனத்துக்கு ஒரு நிம்மதி என்ன, தெரியுமா? தெரிந்தோ தெரியாமலோ என் ஐயன் ராமன் பெயரைக் கதாபாத்திரங்கள் பலரும் சொல்கிறார்கள். உண்மையான மனத்தோடு பக்தி புரியும் பால்கார அய்யாக்கண்ணு உயர்ந்து நிற்கிறான். அவன் பாத்திரமேற்று நடித்த திரு என். ஆர். விஜயராகவன் சிறந்து விளங்கும் இரகசியமும் இதற்குள்தான் அடங்கியிருக்கிறது.

''அடுத்து உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவராக நடிக்கும் ஆர். கே. சர்மாவைக் கூற வேண்டும். தமது அநாயாசமான நடிப்பின் மூலம் ஸ்ரீ பூர்ணம் விசுவநாதன் ஆர். கே. சர்மாவுக்கு உயிரூட்டி விடுகிறார்; புகழ் சேர்த்து விடுகிறார். அடடா! அந்த 'ஜாக்பாட்'டில் அவருக்கு இருக்கும் ஈடுபாட்டை உணர்த்துகிற காட்சியில் சக்கைப் போடு போட்டு விட்டார்.

''அவலை நினைத்து உரலை இடிப்பவர் கோகுல கிருஷ்ண பாகவதர். ஸ்ரீ ஏ. வி. ஸ்ரீதரன் நடிப்பிலே விசுவநாதனுக்கு இணையாக நிற்க முடியாமல் போனாலும் சோடையில்லை.

''பாகவதர் மனைவியாக வரும் கௌசல்யா வாய்ப்பேச்சுக்கு இவ்வளவு வேகம் கூடாது என்பதை மறக்காமலிருந்திருந்தால் சோபித்திருப்பார்.

''சினிமா படாதிபதிகள் கதைகளை எப்படிக் கொலை செய்கிறார்கள் என்பதை விளக்க இந்நாடகத்தில் ஒரு படாதிபதியை விட்டு ராமாயணத்தை இஷ்டத்துக்கு மாற்றி அதீத கற்பனையில் இறங்கச் செய்கிறார்கள்.. நையாண்டி இந்த இடத்தில் மிகையாகப் போய்க் கசப்புத் தட்டுகிறது.

''ஆங்கில வார்த்தைகளுக்குப் புது அர்த்தம் உதிர்க்கிறார் இந்நாடகத்திலே ஓர் ஆசாமி. பழைய உத்தியானாலும் கடைசி வரை இவரது பேச்சும் நடிப்பும் ரசிக்கும்படி இருந்தது. மொத்தத்தில்...''

''அது சரி, மொத்தத்தில் போடாமல் எந்த விமரிசனம் இந்தக் காலத்தில் முற்றுப் பெறுகிறது?''

''வேண்டாம் சுவாமி; இப்படியே ஒரு மொத்தமாக முடித்து விடுகிறேன்!''



இனிக்கும் நினைவுகள்

16. பரிசளிப்பு விழா



கோமகள்

பாரதியின் பேச்சுக்குப் பணிகிறவள் போல் சீலியா தொடர்ந்தாள் :

''உலகத்தை யார் ஏற்கச் சொல்கிறார்கள் ? நல்லதோ, கெட்டதோ உலகம் வெகுசீக்கிரம் ஒன்றை ஏற்க வேண்டுமானால் அப்படிச் செய்யவல்லது ஒன்றே ஒன்றுதான். அதுதான் பொதுவுடைமை. அந்தத் தத்துவம் மனிதனைக் கொட்டிக் கொட்டித் தன்னை ஏற்க வைக்கிறது. அப்புறம் அதை அவன் ஏற்கும்போது அங்கு மனிதன் இருப்பதில்லை......''

''சபாஷ் ! அதனால்.....?''

''உண்மையான ஒரு தத்துவம் சாரமிருந்திருக்குமானால், மனித மனத்தின் வேர்கள் அதைத் தானே செவ்வனே உறிஞ்சிக் கொள்ளும்....''

''பேஷ்! எனவே தவறு எது என்பதையும், விளையும் சாதக பாதகங்களைக் கொண்டு அறிந்து கொள்கிறோம். இல்லையா ?''

''ஆமாம்.''

'' அதனால்தான் சொல்கிறேன்..... தினப் பத்திரிகைகள் தாங்கி வரும் சாவுகளில் பாதி காதல் தோல்வி என்பதை மறந்து விடாதே.''

''சீ ! என்னைக் கோழை என்று கருதுகிறாய் ?''

'' இல்லை. நீ தைரியசாலிதான். அதற்காக முன்ஜாக்கிரதை உள்ளவள் என்று சொல்ல முடியுமா? ஒன்றின் முடிவுக்குப் பின் வருந்துவதைவிட, முடிவையும் முன்பே யோசித்துத் தக்க முறையில் நடப்பது சாலச் சிறந்த தில்லையா ?''

''இந்தப் பேச்சு இப்படியே சுற்றிச் சுற்றிப் 'போர்' அடிக்கவில்லை ?''

இப்படிச் சீலியா கேட்ட பொழுது மணி நான்கு அடித்தது. சீலியா பரபரப்படைந்தாள். மாற்று உடை தரித்து முகப் பூச்சையும் முடித்துக் கொண்டாள். டிபன் சாப்பிடப் பாரதியோடு அவள் புறப்படவில்லை. ''இன்று என்னோடு டிபன் சாப்பிட வர உனக்குப் பிடிக்குமா?'' பாரதியின் கேள்வியைச் சீலியா உணராமல், ''இத்தனை நேரம் அவர் வந்திருக்க வேண்டுமே!'' என்று தனக்குத் தானே முணுமுணுத்துக் கொண்டாள்.

இதற்குள் பையன் அறை வாயிலருகே வந்து, ''அம்மா....!'' என்று அழைத்தான். அவனைப் பேச்சை முடிக்க விடாமல், ''சரி, சரி! இதோ வந்து விட்டேன், நீ போ!'' என்றாள்.

அடுத்த கணமே வெட்கத்தோடு சீலியா பாரதியின் அருகே சென்று, ''வரட்டுமா ?'' என்றாள்.

''வேறு ஒன்றும் வெளி புரோகிராம் இல்லையே. இங்கேயே வாசல்புறம் தோட்டத்தில்தானே பேசிக் கொண்டிருக்கப் போகிறாய்? அதற்கு ஏன் இத்தனை குழைவும், சொல்லிக் கொள்ளலும்? சரி ! போய் வா, உனக்கும் சேர்த்து நானே படிக்கிறேன்.''

''எனக்கும் சேர்த்து நீ படிக்கலாம். ஆனால்....?'' என்றவள் அவள் காதோரம் குனிந்து, ''உனக்கும் சேர்த்து நான் இந்தச் சந்தோஷத்தை அநுபவிக்க முடியாது!'' என்றாள் கிண்டலாக.

''சீ, போக்கிரி ! இந்த அவதி எனக்கும் வர வேண்டும் என்கிறாயா?'' என்று

கூறிப் பாரதி சட்டென்று அவளுக்கு விடை கொடுத்து அனுப்பினாள்.

இரவு இருண்டுவிட்டது. மின்விளக்கைப் பொருத்திவிட்ட பாரதி படுக்கைமீதிருந்த புத்தகங்களை எடுத்து மேசைமீது அடுக்கிவிட்டு, சீலியாவின் கசங்கிக் கிடந்த படுக்கையைச் சீர்ப்படுத்தினாள். தலையணையைத் தூக்கியதுமே ஓர் அழகான வாழ்த்து அட்டை காணப் பட்டது. பாரதி வியந்தாள். சீலியா தலை யணைக்குள் வைத்துப் பாதுகாக்கும் அளவுக்கு இந்த வாழ்த்து அட்டைக்கு என்ன யோக்கி யதை இருக்கிறது! பாரதியின் கைகளுக்குள் பிடிபட்ட வாழ்த்து அட்டையில் வசந்தனின் கையெழுத்து சிரித்தது.

''அன்புக்கிசைந்த சீலியாவுக்கு நல் வாழ்த் துக்கள்.''

பரவாயில்லை! வாசகங்கள் கண்ணியமான முறையிலேயே உள்ளன. 'அன்புக்குகந்த' என்று எழுதுவதின் மூலம் தன்னையே உயர்த்திக் கொள்ளாமல், 'அன்புக்கிசைந்த' என்றெழுதிச் சம நோக்கு காண்கிறாரே! அந்த வாழ்த்து அட்டையை எடுத்துத் தன் புத்தகத்தினுள் வைத்துக் கொண்டாள் பாரதி.

கேஸ் ரெக்கார்டு எழுதியவாறே பாரதி உட்கார்ந்திருந்தபோது சீலியா அறைக் கதவைத் திறந்தாள். அவள் கைகளில் ஒரு பெட்டி முளைத்திருந்தது.



''என்னடி இவளே! போகும்போது இல்லாத வஸ்து ஒன்றை வரும்போது சுமந்து வரும் மர்மமென்ன? எதையும் 'சென்சார்' செய்யாமல் உள்ளே அநுமதிக்கப் போவதில்லை... இங்கே கொண்டா முதலில்.....''

''இந்தா, உனக்குத் தெரியாத மர்மமா?'' கையிலிருந்த அட்டைப் பெட்டியைப் பிரித்தாள். கையடக்கமான பகவத்கீதை, அடையாளப் பட்டு நூலோடு மினுமினுத்தது.

''கௌரவமான பரிசுதான். இந்தப் பரிசு கொடுப்பதின் மூலம் உன்னை அவமதித்துவிடாமல் கௌரவப்படுத்தியுள்ளார்......''

சீலியாவின் முகம் குறுநகையாய் மலர்ந்தது.

தன் படுக்கைக்கு வந்து தலையணையை எடுத்துப் பார்த்தவள் திடுக்கிட்டாள். பாரதியைப் பார்த்து, ''பாரதி! நீதானே படுக்கையைச் சீர்ப்படுத்தினாய்?'' என்றாள்.


''ஆமாம். ஏன்?''

''தலையணைக்கருகில் ஒன்றுமேயில்லையா....?''

''எனக்குத் தெரிந்தவரையில் ஒன்றுமில்லை. ஏன், என்ன வைத்திருந்தாய்?''

சீலியா இதற்குப் பதில் கூறவில்லை. எழுந்து கட்டிலுக்குக் கீழேயும், சாளரத்தின் மூலையிலும், குப்பைக் கூடையிலும் தேடினாள். கடைசியாக மேசை மீதிருந்த பெரிய புத்தகங்கள் அமைதியின்மையால் உருண்டு புரண்டன. ஆனால் என்ன பயன்? அலுப்போடும், சலிப்போடும் திரும்பி வந்து கட்டில்மீது அமர்ந்தாள்.





''என்ன சீலியா தேடுகிறாய் ?'' எதிர்க்கட்டில் குரல் கொடுத்தது.

''ஒன்றுமில்லை.''

''ஒன்றுமா இல்லை ?'' என்ற குரலை அடுத்து எதிர்க்கட்டிலிலிருந்து 'குபீ' ரெனப் பறந்து வந்து சீலியாவின் மடி மீது 'பொத்'தென விழுந்தது. அவள் விழுந்து விழுந்து தேடிய வாழ்த்து அட்டை.

'' ஓ ! எத்தனை நாட்களாக இந்த ஆராய்ச்சி ?'' என்றவாறே சீலியா அதை எடுத்துத் தலையணையடியில் வைத்துக் கொண்டாள்.

''அது தலைக்குக் கீழ் இருந்தால் தான் தூக்கம் வருமோ ?''

''அப்படித்தான் வைத்துக் கொள்ளேன்.''

''வைத்துக் கொள்வதென்ன ?.... உண்மை அதுதானே! பசப்பு வேறு?... கிடக்கட்டும். தூண்டித் துருவிக் கேட்டேன், என்னிடம் இந்த விஷயம் விடுபட்டதேன் ?''

'' விடுபட்டு விட்டது அவ்வளவு தான். அதற்காக நீ விட்டு விட்டாயா என்ன? ஆராய்ந்துதான் கண்டுபிடித்து விட்டாயே !''

''இதுபோல் இன்னும் ஏதேனும் விடுபட்டிருந்தால் கூறிவிடேன்.''

''ஒன்றுமில்லை'' என்று பேச்சை முடித்துவிட்டு மின்விளக்கைப் 'பட்' டென அணைத்துவிட்டாள் சீலியா.

அறை எங்கும் இருள். மனமெங்கும் ஒளி.

''சீலியா !''

''உம்.''

''இந்த வாழ்த்து அட்டைக்கு இத்தனை மரியாதை ஏன்?''

''ஒவ்வோர் அறிமுகமும் ஒரு புது கிளுகிளுக்கும் அநுபவமில்லையா ?''

''அப்படியா ?''

''முதன் முதலில் எழுத்து உருவத்தில் வரும் கடிதம் இதுதானே ?''

''கடிதத்துக்கு வேறு ஏங்கிக் கிடக்கிறாய் என்று சொல்.''

''அப்படியா, சொன்னேன்? இனி எத்தனை கடிதம் வந்தாலும் இந்த முதல் வாழ்த்து அட்டைக்கு உரிய கௌரவமே வேறில்லையா ?''

''ஓகோ, ஒன்று செய்யேன் சீலியா! இந்த வாழ்த்து அட்டைக்கு ஒரு கண்ணாடி போட்டு, மேசையின்மீது வைத்து உன் அன்பைப் பகிரங்கமாகப் பறை சாற்றேன்!''

''நீ அந்த உதவியைச் செய்யேன்!''

''ஓ! மைகாட். அத்தனைக்குத் துணிந்து விட்டாயா?''

''இதில் துணிவதற்கு என்ன உள்ளது? உன்னிடம் மனப்பூர்வமாக என் ஆசைகளையும், சபலங்களையும் ஒத்துக் கொள்கிறேன். என் இதயத்தைத் திறந்து காட்டுகிறேன். நீயோ பேசுவதெல்லாம் ஒரே கேலி, ஒரே பரிகாசம். என் உணர்ச்சிகளை நீ இத்தனைக்குத் தான் மதிக்கிறாய் என்று புரிந்து கொள்கிறேன்..... அதற்காக வருத்தப் படுவதைத் தவிர வேறு வழி எனக்கேது?'' அவள் குரலின் சோகம் பாரதியைக் குலுக்கியது.

''சீலியா ! என்னமது ? ஐயோ, என் வேடிக்கைகள் உனக்கு இத்தனை குத்தலாக இருக்குமெனத் தெரிந்தால் இப்படியெல்லாம் பேசவேமாட்டேன்.'' பாரதி எழுந்து வந்து சீலியாவின் கட்டிலில் உட்கார்ந்தாள். அந்த மெல்லிய இருளில் தன் தோழியின் முகத்தைத் திருப்பிய பாரதி திடுக்கிட்டாள். சீலியாவின் கண்ணிமைகள் நனைந்து, கன்னங்கள் நனைந்திருந்தன. அவள் அழுகிறாளா?

'' சீலியா ! இதென்ன சின்னக் குழந்தைபோல். என் வெறும் கேலி உன்னை இத்தனைக்குப் புண்படுத்திவிட்டதா ? எழுந்திரேன்.... இதென்ன புதிய வழக்கம்....?''

பாரதி சீலியாவின் கட்டிலருகே தொங்கிக் கிடந்த 'பெட் ஸ்விச்சை' அழுத்தினாள். குபீரென அந்த அறையினுள் ஒளித் திரள் குவிந்தது. சீலியா முகத்தைத் திருப்பிக் கொண்டாள். பாரதி அந்த முகத்தைத் தன்பால் திருப்பினாள். ''உம்! என் மேலேயா இப்படிக் கோபிக்கிறாய்?''

''கோபமில்லை.''

''இன்னொரு தரம் சொல்.''

''கோபமே இல்லை. ஏதோ மனத்தில் வருத்தம் சூழ்ந்து விட்டது.''

''உன் மனத்தில் பலஹீனம் பெருகி விட்டதை அது காட்டுகிறது. நீ நம்பிக்கைகளை இழந்து வருகிறாய்.''

''எல்லாம் உன் பேச்சால்...தான்!''


''என் பேச்சாலா? ரொம்பவும் வருந்துகிறேன், சீலியா ! என்னை மன்னித்துவிடு. ஏதோ வேடிக்கைக்குப் பேசினேன்.''

''உன்னை எனக்குத் தெரியாதா, பாரதி ? ஏதோ என் மனமருள். எப்படியோ பேசிவிட்டேன். என்ன வீரம் பேசினாலும் கடைசியில் பெண் பெண்தானே? நீ போய்ப் படுத்துக் கொள், பாரதி.''

''கோபமில்லையே....!'' தயங்கினாள் பாரதி.

''அப்படி ஒன்றுமில்லை.''

பாரதி மின்விளக்கை நிறுத்திவிட்டுத் தன் கட்டிலில் வந்து படுத்தாள்.



சீலியாவை வருத்திவிட்டோமே என்ற வருத்தமே அவளேவருத்தியது.

அன்னே! அது மகத்தான வடிவம்! அதன் தத்துவமே விண்ணளவு உயர்ந்தது. அதை நாம் போற்ற வேண்டுமானல் அதை ஆராதிப்பது தவிர வேறு வழியில்லை. தாயின் நிழலில் எத்தனை குளிர்ச்சி! தன் இரத்தத்தைக் கூட்டி, தன் உணர்வில் ஊற வைத்து, தன் எண்ணங்களால் எழுதித் தன் வேதனையின் இன்னல்களை அநுபவித்துப் பெற்ற அன்னை. இத்தனை உடல் நலன் குன்றியும்கூட இன்னும் பிறரைப் பற்றிய கவலை. மற்றவர்களுக்குத் தன்னல் கடுகளவுசுகம் கிடைப்பதானலும், மலையளவு துயரத்தை ஏற்கத்தயாராகும் உள்ளம். ஆனல் அந்த உள்ளத்துக்கே வெவ்வேறு இனத்தைச் சேர்ந்த இரு ஆண் பெண் பழகுவதும், பேசுவதும் நியாயமெனப்படவில்லை யென்றல்....? வசந்தன் மீது செல்லம்மாவுக்கு உண்டான கசப்பு பயமாக மாறிவிட்டது. அதுவே அப்போது அவளை அலைக்கழிக்கும் துயரமாக மாறிவிட்டது. ஒரு நாள் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு இதைக் கேட்டேவிடுவது என்று காத்திருந்தபோது வசந்தனேடு திவாகரனும் வந்துவிட்டான். எனவே, அன்றும் கேட்க முடியாமல் போய் விட்டது. இப்படியே இதை விட்டு விட்டால், தான் கண்டிக்காததையே வசந்தன் சம்மதமாக ஏற்றுக் கொள்ளத் துணிந்து விட்டால் என்ன ஆகும்?

வசந்தனிடம் எப்படி எப்படியெல்லாம் பேசி வழிக்குக் கொண்டு வர வேண்டும் என்று திட்டம் வகுத்துக் கொண்டாள் செல்லம்மா. என்ன இருந்தாலும் தோளுக்கு மிஞ்சிய ஆடவன் அல்லவா? பயமுறுத்த முடியுமா? கண்டிக்கத்தான் முடியுமா? நயத்தாலேயே வழிக்குக் கொண்டுவர வேண்டியதுதான். என்ன இருந்தாலும் குடும்பத்தின் மேலும், குறிப்பாகத் தாயின்மீதும் அதிக பாசம் கொண்டவன். வேருெரு பெண்ணை வேண்டாமென்றல் அதை ஒரு பொருட்டாக மதிக்க மாட்டான். பாசத்தை மறந்து பிறர்மீது அன்பு பற்றுமளவுக்கு வசந்தனுக்குப் பிடிவாதம் வந்துவிடப் போவ

கல்லூரி மாணவர்களுக்கு

கல்கி பத்திரிகை தனது இருபத்தேழாண்டு இலக்கியப் பணியைப் பூர்த்திசெய்து இருபத்தெட்டாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கவிருக்கிறது. இந்த நன்னுளை யொட்டி இதோ கல்லூரி மாணவ, மாணவியரின் இலக்கிய உணர்வு வளர உதவும் வகையில் ஒரு போட்டி.

ஆகஸ்டு 4-ந் தேதி இதழ் முதல் டிசம்பர் இறுதி இதழ் வரையில் கல்கிப் பத்திரிகையில் இடம் பெறும் எல்லாச் சிறப்புச் சிறுகதைகளையும் ஆழ்ந்து படித்துப் பாருங்கள். அவற்றில் சிறந்ததென நீங்கள் கருதும் ஏதேனும் ஒரு சிறப்புச் சிறுகதை குறித்து கல்கியில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாத வகையில், இலக்கியத் திறனய்வு செய்து எமக்கு 1969 ஜனவரி 15-ந் தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வையுங்கள். சிறந்த இலக்கியத் திறனய்வுக் கட்டுரைகளுக்கு முதல், இரண்டாவது, மூன்றுவது பரிசுகள் உண்டு. முதல் பரிசு: அடுத்த கல்லூரி ஆண்டுக்கான முழு சம்பளத் தொகை. இரண்டாம் பரிசு: இரண்டு 'டர்ம்' (Term) களுக்கான சம்பளத் தொகை. மூன்றுவது பரிசு: ஒரு 'டர்ம்' சம்பளத் தொகை. பரிசுத் தொகை கல்லூரி முதல்வருக்கு அனுப்பி வைக்கப்படும்.

திறனய்வுக்குச் சிறப்புச் சிறுகதைகளேமட்டும் எடுத்துக்கொள்ளுங்கள். உறையின் மீது 'இலக்கியத் திறனய்வுக் கட்டுரை' என்று குறிப்பிட்டு, ஆசிரியர், கல்கி, சென்னை—10 என்ற விலாசத்துக்கு அனுப்பவும். அடுத்த ஆண்டு கல்லூரிப் படிப்பைத் தொடர நினைப்பவர்கள் மட்டுமே இப்போட்டியில் கலந்துகொள்ளவும். கடிதப் போக்குவரத்துக் கிடையாது. கட்டுரைகளைத் திருப்பி அனுப்புவதற்கில்லை. கல்கி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

தில்லை. ஆனாலும் உள்ளே எரியும் ஆத்ம விளக்காக ஒளிரும் மனத்தில் முதன் முதல் கிளர்ச்சி உருவாகியிருந்தால் அது ஓர் அழகிய வைரம் போல் ஜொலிப்படங்காமல் கிடக்குமே !... கொஞ்ச நாட்களாகவே வசந்தன் ஒரு புது மலர்ச்சியில் மீள முடியாமல் சிக்கித் திணறுவதுபோல் அகமலர்ந்திருந்தான். அதற்குக் காரணம்கூட அன்று வந்த பெண்தானோ ?...

மணி ஏழரை யிருக்கும். அந்த வார்டு நர்ஸ் செல்லம்மாவை போனுக்கு அழைத்தாள். அவசரமாக ஓடிக் குழலை வாங்கிக் கொண்ட செல்லம்மா எதிர் முனையில் வசந்தனின் குரல் கேட்டுக் கொஞ்சம் சமாதானம் அடைந்தாள்.

''அம்மா ! நன்றாக இருக்கிறாயா?''

''உனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லையேடா ? இன்று நீ ஏன் வரவில்லை?''

''ஒன்றுமில்லை, அம்மா ! 'காப்பியம்' பரிசுப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு நாளைக் காலையில் அவர்கள் காரியாலயத்திலேயே பரிசளிப்பு விழா நடத்தப் போகிறார்கள். முந்தா நாள் உன்னைப் பார்க்க வரும்போது சொல்ல மறந்து விட்டேன். சாயந்திரம் கடைக்குப் போய்க் கொஞ்சம் நல்ல உடைகள் எடுத்துக் கொண்டேன். திவாகர் பணம் கொடுத்தான். நாளை மாலை கட்டாயம் உன்னைப் பார்க்க வருவேன், அம்மா.''

''நாளை இரவு மீனாட்சிசுந்தரம் வீட்டில் உங்களுக்கெல்லாம் விருந்து என்று சொன்னாரே !''

''உனக்கு எப்படித் தெரியும், அம்மா? அவர் மறுபடியும் வந்தாரா?''

''ஆமாம்.''

''ஆனாலும் அவர் வீட்டு விருந்துக்கு நான் போக வேண்டிய அவசியம் இல்லை, அம்மா ! நாளை மாலை வந்து உன்னைப் பார்க்கிறேன்.....''

''டேய், வசந்த் ! சொல்றதைக் கேளுடா. மீனாட்சிசுந்தரம் உன் மேல் ரொம்பப் பிரியமாக இருக்கிறார். அவர் விரும்புகிறபடி நடந்து கொள். அவர் மனத்தைப் புண்படுத்திவிடாதே. இரவு விருந்துக்கு அவரது வீட்டுக்குப் போய்விட்டே வா....''


''அம்மாடி! என் அம்மாவுக்குத் தான் பிறர் மனம் புண்பட்டுவிடுமே என்று எத்தனை கவலை? சரியம்மா !''

மணி ஒன்பது. 'காப்பியம்' காரியாலயம் ஏகச் சுறுசுறுப்பாக இயங்கியது. 'காப்பியம்' ஆசிரியர் குழுவைச் சேர்ந்த நிர்மலன் வந்தவர்களை வாசலிலேயே வரவேற்றார். மீனாட்சிசுந்தரம் வந்த காரை அடுத்து ராகவனின் காரும் உள் நுழைந்தது. சீலியாவும் ராகவனும் கதவைத் திறந்து கொண்டு இறங்கி வந்தார்கள்.

(தொடரும்)







இலங்கைக் காட்சி! 14

கண்டிய நடனம்

கண்டிய நடனம் என்பது இலங்கையின் தேசிய நடனமாகும். புராதன கண்டிய நடனம் இலங்கையின் கலாசாரத்தைப் பிரதிபலிப்பது. பாரதத்தில் பரதம், கதகளி, மணிபுரி போன்ற நடனங்கள் பிரசித்தி பெற்றிருப்பது போல இலங்கைக்குக் கண்டிய நடனம். சமயத் திருவிழா முதல் எந்த மங்கள காரியத்தை ஆரம்பிக்கும்போதும் இந்தக் கண்டிய நடனம் ஆடப்படும். இசை ஒலி தவறாமல் தாளத்தோடு நிலத்திலிருந்து மூன்றடிக்கு மேல் கூடத் துள்ளிக் குதித்து ஆடப்படும் இந்த நடனத்தைக் காண்பவர் மெய்மறந்து ரசிப்பதுண்டு. புகழ் பெற்ற இந்த நடனத்தை மேல்நாட்டவர்கள் கூட விரும்பிப் பயில்கிறார்கள். —கே.வி.எஸ். மோகன்




ஓநாய்க் கோட்டை
கதை வாண்டுமாமா சித்திரம் ரமணி
ஆனந்தன் தன் கணவன் என்பதை உணர்ந்து கொள்ள முடியாததோர் நிலையில் ரூபமதியை நினைவிழக்கச் செய்திருந்தார்கள்...
28
ரூபமதி, வீண் குழப்பம் வேண்டாம். மங்களாபுரத்துப் பட்டமகிஷி நீ. இந்தத் தனிய புரிக்கு ராணியல்லவா வந்துவிட்டாய் என்னுடன்.
நான் யார் என்பதைப் புரிய வைக்கிறேன். என் சக்தியைப் பார் இதோ...!
ஓநாய்த் தேவா.. உன் மகிமையை — இந்த மடையர்களுக்கு உணர்த்து. உன் அருள் பெற்ற என்னால் ஆகாதது எதுவுமில்லை என்பதை இவர்களுக்கு நிரூபித்துக் காட்டு.
கண்மூடிக் கை உயர்த்தி அருள் வேண்டியவள் விழிகளை விரிய வைத்துத் தன் கைகளைக் கந்தன் பக்கம் நீட்டினாள். அடுத்த வினாடி...
ஆ..! என் அருமை நண்பா, கந்தா! நமக்கு இது என்ன சோதனை? இவள் உண்மையில் என் மனைவி இல்லையா?
நான் தான் வரும்போதே எச்சரித்தேனே ஆனந்தா. அதிர்ச்சிகளைத் தாங்க வேண்டி இருக்குமென்று. அவள் உன் மனைவிதான். ஆனால் அவள் நினைவுகளை மாற்றி இருக்கிறார்கள்.
என்ன நடந்தது? ஏன் எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது?
ஒன்றுமில்லை. எல்லாம் பிறகு சொல்லுகிறேன்.
ம்.. போதுமா? இப்போதாவது புரிகிறதா? என்னையும் என் சக்தியையும். இவனை விட்டுப் போதும். இதோ உன் நண்பனைப் பணியும்படி ஆக்குகிறேன்.
ஏன் ரூபமதி மயங்கி விட்டாள்? இதெல்லாம் என்ன மர்மம்?
ஓநாய்த் தேவன் ராணியாரின் மீது அருளாக வந்து தன் மகிமையைக் காட்டியதால், ராணியார் களைப்படைந்து மயங்கி விட்டார்கள். இனி உங்களோடு ஏதும் பேச மாட்டார்கள். ராணியிடமிருந்து கட்டளை பிறக்கும் வரை, வீரர்களே இவர்களைக் கொண்டு போய்த் தனியறையில் அடைத்து



மனைவியின் மாற்ற நிலையில் மனம் கலங்கிப் போயிருந்த ஆனந்தருக்குத் நாமகேது உண்மையை விளக்குகிறான்.
ஒநாய் மனிதர்களிடமுள்ள எத்தனையோ மர்மங்களில் இதுவும் ஒன்று. ஒநாய்த் தேவனின் விழிகளிலிருந்து வரும் ஒளியில் குளித்தால் தங்கள் நினைவை இழந்து புதிய நினைவுகளோடு வாழ்வார்களாம். அவர்களுக்குத் தேவனின் அருளும் அரிய பல சக்திகளும் கை வரப் பெறுமாம். தெளிவுபடுத்துகிறேன். உன் மனைவியை ஒநாய்த் தலைவன் அந்த ஒளியிலே தூக்கச் செய்து மயக்கியிருக்கிறான். கந்தனை ஒநாயாக மாற்றியதை அம்மாதிரி அற்புதங்களை நிகழ்த்தும் போது அவன் தன் சக்தியை இழக்கிறான். நினைவும் இழக்கிறான். மறுபடியும் அந்தக் கொடியவர்கள் அவனை அந்த மாய ஒளியிலே குளிப்பாட்டி நினைவை மயக்கித் தங்கள் இஷ்டப்படி ஆட்டி வைப்பார்கள். சுயமதியை இப்போது அவர்கள் அப்படித்தான் கொண்டு போவார்கள். இனி, மேலும் அந்த ஒநாய்த் தேவனின் சிலையை அழித்தால் தான் உன் மனைவிக்கு நினைவு திரும்பும்..........
என்ன கொடுமை! அந்தக் குருமான் சிலை எங்கே இருக்கிறது?
காவலாளிகளைத் தந்திரமாக மாய்த்து விட்டு மூவரும் கோட்டைக் காவல்களைக் கடந்து அந்தக் குளிய புரியிலிருந்து வெளியேறி ஒநாய்த் தேவன் கோயிலை நாடிச் செல்கிறார்கள்...
அந்தக் கோயிலை அடைவது சுலபமல்ல. பயங்கரமான மலைப் பாதை. அதை ஒரு கோர மிருகம் காவல் காக்கிறது. ஒநாய்த் தேவனின் அருள் பெற்றவர்களுக்குத் தான் அது பணிந்து வழி விடுமாம்.
நாம் அதைப் பணிய வைப்போம்.
மலைப் பாதை போகப் போகக் கடினமாக இருந்தது...
கொடியவர்கள் வசிக்கும் இடம் என்பதை இந்தப் பாதையே நிரூபிக்கிறது..
அது என்ன இடி யோசை? வானத்திலும் மேகங்களைக் காணோம்....
இனிமேல்தான் எச்சரிக்கை தேவை. அந்தக் குகைக்குள் நுழைந்துதான் மறுபக்கத்தை அடைந்தாக வேணும்.
மறுபடியும் இடி முழக்கம்? மலைச் சுவர்களில் பட்டு எதிரொலிக்கும் இந்தச் சத்தத்தைக் கேட்கவே வெறுப்பாக இருக்கிறது.
கந்தா, நீ கேட்பது இடி யோசையல்ல. அதோ பார்...
நான் குறிப்பிட்ட அந்தக் கொடிய மிருகம் அதுதான்.
எத்தனை பயங்கரம்!
ஆ.. ஆ.. கா..ர்..ம்..ம்...
கோயிலைக் காக்கும் கொடிய மிருகமோ?
ஆனந்தா, நீ நினைப்பது போல அதை அடிப்பது எளிதல்ல
ஆனந்தா விலகிக் கொள்..
அதைக் கொல்ல வெறும் உடல் வலிமை மட்டும் போதாது..
கொள்ளியாய்த் தன் கூரும் கொடிய பற்களும் கோரமான தாக்குதல்... அப்பப்பா! வெறுப்பும் பீதியும் உண்டாகிறது.

சுத்தமான
மனம் கவரும் வெண்மைக்கு






சிங்கம் மார்க்
விக்டோரியா
ப்ளூ ஓ ஓ பி (OOB)
(மிகச் சிறந்த நீலம்)

சிறிதளவே விக்டோரியா ப்ளூ ஓ ஓ பி உபயோகித்ததில் உங்கள் ஆடைகளுக்குத்தான் என்ன வெண்மை! ஆடைகளை பளபளப்பான வெண்மையாக்குகிறது. உங்களுடைய சட்டைகள், வேஷ்டிகள், விரிப்புகள் முதலியவைகளை அதிக வெண்மையுடன் வைக்க இதுவே சிறந்த சிக்கனமான முறை.

VAPI:UP:8/68

தயாரிப்பாளர்கள்: அல்ட்ராமரீன் & பிக்மெண்ட்ஸ் லிமிடெட், அம்பத்தூர், மதராஸ் 53

ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள்: கெம்டைஸ் ட்ரேடிங் கம்பெனி, 318, லிங்கச் செட்டித் தெரு, மதராஸ் 1



அநுபமா (ஹிந்தி)

அறத்துக்கும் மறத்துக்கும் சார்பான அன்பு பின்னிப் பிணைக்கும் கதை அநுபமா. பெயருக்கேற்பப் பொருள் பொதிந்து இணையற்று விளங்குகிறது.

திரையுலகத்தில் எத்தனையோ கதைகள் வந்து போகின்றன, உள்ளத்தைத் தொடாமல். அதற்கு விதிவிலக்கு அநுபமா. இதயத்தில் என்றென்றும் நிலைத்து நிற்கக்கூடிய திரையோவியமாகத் திகழ்கிறது; அமரகாவியமாக விளங்குகிறது.

இக்கதையில் வரும் பாத்திரங்கள் யாரும் சமுதாயத்துக்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல. அந்தப் பாத்திரமேற்று நடித்திருப்பவர்களோ தாங்கள் ஏற்ற பாத்திரங்களாகவே வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள்.

உமா இப்படத்தின் கதாநாயகி. பிறந்த பொழுதே தாயை விழுங்கி விட்டாள் என்பதற்காக, அவள் தந்தை பாவம், அவளை எப்படி யெல்லாம் வெறுக்கிறார் !

அப்படி வெறுக்கப்படுகிறவள் பேசா மடந்தையாக வாழ்கிறாள். ஆனால் உணர்ச்சிப் பிழம்பாகத் திகழ்கிறாள். இப்பாத்திரமேற்றிருக்கும் ஷர்மிளா டாகுர் தமது உணர்ச்சி மிகுந்த நடிப்பினால், பார்ப்பவர்களின் உள்ளங்களை நெகிழ வைத்து விடுகிறார். உமா பெற்ற தந்தையின் மனத்தையே மாற்றித் தன் மனத்துக்குப் பிடித்த மணாளனைக் கரம் பற்றும் இடம் மிக அபாரம்.

அசோக்காக வரும் தர்மேந்திராவும் ஈடு கொடுத்து நடித்து நற்பெயர் எடுக்கிறார்.

அநீதாவாக நடிக்கும் சசிகலா தமது வழக்கமான கவட்டை விட்டுச் சிறப்பாக நடித்துப் பாத்திரத்துக்கு இணையத் தமக்கு நடிக்க வரும் என்பதை எடுத்துக் காட்டுகிறார்.

டேவிட், துர்க்கா கோட்டே போன்ற நடிகர்கள் அனைவருமே நன்றாக ஒத்துழைத்திருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாகத் திரைக் கதையைக் கொண்டு சென்றிருக்கும் முறை, ஸ்ரீ ராஜேந்திரசிங் பேதியின் உணர்ச்சி கொந்தளிக்கும் உயிருள்ள உரையாடல்கள், செவிக்கினிய கருத்துச் செறிந்த பாடல்கள், அவற்றைப் பரிமளிக்கச் செய்யும் ஸ்ரீ ஹேமந்த குமாரின் இசை எல்லாமே இப்படத்தின் வெற்றிக்கு உறுதுணையாக நிற்கின்றன. சிறிதும் விரசம் தட்டாத இந்தியப் பண்பு நிறைந்த இப்படத்தைப் பார்ப்பவர்கள் 'அப்பா! இப்போதாவது ஒரு நல்ல படம் பார்க்க முடிந்ததே' என்று மன நிறைவு பெறுவார்கள். இப்படத்துக்கு வெள்ளிப் பதக்கம் என்ன, தங்கப் பதக்கமே கூடப் பரிசளித்திருக்கலாம் என்று சிபாரிசு செய்திருப்பார்கள்.

பிற நாட்டினரும் பார்த்துப் பரவசமடையக் கூடிய இத்தகைய படங்கள் இன்னும் ஏராளமாக வர வேண்டும்; பாரதப் பண்புக்குப் பெருமை தேடித் தரவேண்டும் என்றும் ஆசைப்படுகிறோம்.

பொன்னிவனத்துப் பூங்குயில்


கொத்தமங்கலம் சுப்பு

31. மலைக்கோட்டை மணிமகுடம்

உடனே உருவிய வாளுடன் படை வீரர்கள் மகாராணி தேவியாருக்குப் பாதுகாப்பாகத் திரைக்குமுன் வேலி போல் சுற்றிக் கொண்டார்கள்.

ஆம், எங்கே, அடி உதை என்று கேட்டாலும் அக்காலத்தில் முதலில் அச்சம் வருவது அரசர்களுக்குத்தான்.

கருட மண்டபத்தின் முன்னே ஆரியப் பட்டாள் வாசலிலே கயிறுகளால் கட்டப் பட்டுப் பாண்டிச்சேரி துரை இழுத்து வரப்பட்டான். அவனுக்கு இருபுறமும்



கோயில் மெய்க்காவலர்கள் நால்வர் வந்தனர்.

அவன் பரிதாபமாகத் துபாஷ் முத்துவைப் பார்த்தான். ஆனால் முத்துவோ அப்போதுதான் ரொம்ப அக்கறையாகத் தூணில் உள்ள சிற்பங்களை யெல்லாம் பார்த்தான்.

இந்தப் பத்து விநாடிக்குள் துரையின் மனம் படாதபாடு பட்டது. 'இந்த மீசைக்காரர் நால்வரும் இரும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டு இருக்கிறார்களே! என்ன செய்வார்களோ? இந்தியர்கள் காட்டுமிராண்டிகள், பாம்பாட்டிகள், கயிற்றில் ஏறி விளையாடும் கழைக்கூத்தாடிகள் என்றெல்லாம் நம் நாட்டில் கேள்விப் பட்டிருக்கிறோமே. நம்மை ஒற்றன் என்று கருதிக் கொன்று விடுவார்களோ?' என்று நடுங்கிக் கொண்டே வந்தான். இதற்குள் அமைச்சரே அங்கு வந்து விட்டார். துரையைக் காலடியில் தள்ளினார்கள். கயிற்றை அவிழ்த்தார்கள். கயிறுபட்ட இடமெல்லாம் இரத்தம் பீறிட்டுச் சிவப்பாக இருந்தது.

"நான் திருடனல்ல திருடனல்ல" என்று அவன் கத்தினான். அது அமைச்சருக்குப் புரியவில்லை.

"இவன் நம் கோயிலைச் சித்திரம் தீட்டித் திட்டாக்கி விட்டான். இவனைக் கொல்லுங்கள்; கழுவில் ஏற்றுங்கள்" என்று இரைந்தார்கள் கூட்டத்திலிருந்தவர்கள். அப்பொழுது ஒன்றும் தெரியாதவன் போல், "என்னையா கூட்டம் இங்கே? ஏன் சத்தம் போடறீங்க?" என்று அதிகாரத்தோடு அவர்களைவிட அதிகமாகச் சத்தம் போட்டுக் கொண்டு, தன் இரு கைகளாலும் கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தான் முத்து.

'இரைந்து பேசத் தெரிந்தவன் எல்லோரையும் விடப் பெரியவன்' என்று அக்காலத்திலும் நம்பினார்கள். ஆதலால் இவ்வளவு அதிகாரத்தோடு வருபவன் பெரியவனாக இல்லாமல் இருப்பானா என்று அமைச்சர்கூட எண்ணினார்.

"ஏய், யூ ஹூ?" என்று அந்நிய மொழியில் துரையைப் பார்த்துக் கேட்டான் முத்து.

''அடப் பாவி, உனக்குத் தெரியாதா?'' என்று ஏக்கத்துடன் பார்த்தான் துரை. ஆனால் நம் ஆள் ஒருவன் ஆங்கிலேயனிடமே ஆங்கிலம் பேசுவதைப் பார்த்து அங்கிருந்த அத்தனை பேரும் வியந்தார்கள். முத்துவை ஏற இறங்கப் பார்த்தார்கள். இடம் கண்டால் முத்து விடுவானா? எல்லோரையும் அமர்த்தலாக ஒருமுறை நோக்கினான். உடனே அப்போதுதான் அமைச்சரைப் பார்த்தது போல், புன்சிரிப்புடன், ''அமைச்சர் சின்னபெருமாள் அவர்களுக்கு வணக்கம்'' என்று இலேசாக ஒரு சல்யூட் செய்தான். அந்தத் தைரியத்தைக் கண்டு அங்கிருந்த அத்தனை பேரும் கும்பிட்டார்கள்.

துரை, ''நோ, நோ!'' என்றான்.

''அவனுக்கு ஜாதியே கிடையாதாம்.''

''ஜாதி இல்லாமல் எப்படிப் பிறந்தான்? இவன் நாஸ்திகனா? அல்லது முகலாயனா?'' என்றான் ஒருவன்.

முகலாயர் என்றதுமே கூட்டத்தினர் முகமே வெறுப்பாகியது. துரையோ முத்துவைக் காட்டி, ''எஸ், எஸ், மை லாயர்!'' என்றான்.

''அப்படியானால் நீயும் முகலாயனா?'' என்று கூட்டம் முத்துவின் மேல் பாய்ந்தது.



மிக அடக்கத்துடன் ''இவன் என்ன ஜாதி என்று கேளுங்கள்'' என்றார் அமைச்சர்.


''ஏய், நீ முதலியாரா? பிள்ளையா? ஐயரா? ஐயங்காரா? அர்ச்சகரா? குருக்களா?'' என்று பதினெட்டு ஜாதிகளையும் அதன் பல்லாயிரம் உட்பிரிவுகளையும் அடுக்கினான் முத்து.

வசீகரத்தையும், பெருமிதத்தையும் கொடுக்கும் நறுமணம் உங்களுக்கு பாமாலிவ் லவண்டர் டால்க் உபயோகிப்பதால்.

உங்களுக்கு மிகவும் பிடித்தமான ஸெண்டுகள்—உங்களுக்காகவே மீண்டும் உருவாக்கப்பட்டிருக்கின்றன!

ஒரு காலத்தில் உலக அழகுக் கேந்திரங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவையும், உங்களுக்கு மிகவும் பிடித்தமானவையுமான ஸெண்டுகளின்றி இனி நீங்கள் தவிக்கவேண்டாம்... இன்று பாமாலிவ் லவண்டர் டால்க் மட்டுமே அளிக்கும் வசீகர நறுமணத்தினாலும், பெருமிதத்தினாலும் உங்கள் உடலைச் சொகுசாகப் பராமரிக்க முடியும். பாமாலிவ் லவண்டரை உங்கள் உடம்பு முழுவதும் தூவிக் கொண்டு, சூழ்ந்து நிற்கும் அதன் இனிய வசீகர நறுமணத்தினால் களிப்படையுங்கள்.

எப்பொழுதும் புத்துணர்ச்சியுடனும் நறுமணம் சூழ்ந்த அழகுடனுமிருக்க பாமாலிவ் லவண்டர் டால்க்.








மற்றும் பாமாலிவ் டால்க் டீலக்ஸ் —
மயக்கும் 17 ஸெண்டுகளின் அற்புதமான கலவை

PT.C.S TAM.

"நான் முகலாயர் இல்லை. நான் இடையர் தெருவில் வசிப்பவன். இந்த வட்டாரத்திலேயே இங்கிலீஷ் தெரிந்தவன் நான் ஒருத்தன்தான். என் பெயர் துபாஷ் முத்து" என்று சொல்லித் தன் தலையிலிருந்த தலைப்பாகையைச் சரிசெய்து கடுக்கனைத் துடைத்துக் கொண்டான் முத்து.

"பிறகு நீ நாஸ்திகனா?" என்று துரையிடம் ஒரு கேள்வியைப் போட்டான்.

"நோ...நோ... நான் நம்பிக்கை உடையவன். கிருஸ்துவை நம்புபவன்" என்றான் துரை.



"நீங்கள் இனிமேல் சிலப்பதிகாரத்தைப் படிக்கமாட்டீர்களா, ஏன்?"

"டாக்டர் என்னைக் காரம் சேர்க்கக் கூடாது என்று சொல்லிவிட்டார்!"

அப்போது, சட்டத்தில் கோக்கப்பட்ட மெல்லிய பட்டுத் திரை ஒன்றை நாற்புறமும் பணிப் பெண்கள் தாங்கி வர அதன் நடுவே மகாராணியாரும், மகள் நீலமயிலும் வந்தனர்.

"அங்கே என்ன சத்தம்?" என்று மகாராணியின் குரல் கேட்டது. எல்லாரும் திரும்பினார்கள். அரசியாரின் அழகைத் திரையால் மறைக்க முடியுமா? பட்டில் எழுதிய சித்திரம் போல் அவர்கள் நிற்பதைக் கண்ட பாண்டிச்சேரி துரை உடனே முழந்தாள் படியிட்டு வணங்கினான்..... "மேன்மை தங்கிய மகாராணி அவர்களே! பாண்டிச்சேரி சித்திரக்காரனாகிய என் வணக்கத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். நான் நாயகர் மன்னர்களின் கலைத் திறனைப் பார்த்து மகிழ்ந்து படம் வரைந்தேனேயன்றி வேறு ஒரு குற்றமும் அறியேன்" என்றான். மகாராணியார் அவனை நிமிர்ந்து பாராமலே, "அவர் என்ன பகருகின்றார்?" என்று கேட்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாது என்ற எண்ணத்தில் முத்து தன் கைச்சரக்கை அள்ளிவிடப் போகும் போது ரங்கநாதனே தடுத்து அவனைக் காப்பாற்றியது போல, மகாராணியின் அருகில் இருந்த நீலமயில், பாண்டிச்சேரி துரை ஆங்கிலத்தில் சொல்லியதை வடுகில் மொழிபெயர்த்துத் தாயிடம் கூறினாள்.

'உங்களைப் போல் அழகியை உலகத்தில் கண்டதில்லை என்று அவன் சொல்கிறான் என்று புளுகுவதாக இருந்தோமே, நாம் சொல்லி இருந்தால் என்ன ஆகியிருக்கும்' என்று எண்ணிய முத்து தனக்குள் ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டான்.

"தம்பி, அவரை விடுதலை செய். அயல் நாட்டவர்கள் இங்கு வருவதையும், தங்கள் மத நம்பிக்கையை அவர்கள் பிரசாரம் செய்வதையும் நமது நாயக அரசு என்றுமே மதித்து வந்திருக்கிறது" என உத்தரவிட்டார்கள் மகாராணி.

மறுமுறையும் வணங்கிவிட்டுத் தப்பினோம், பிழைத்தோம் என்று துரையும் முத்துவும் வெளியே ஓடினார்கள். கூட்டம் கலைந்தது.

அவர்கள் வெளியே ஓடும்போது பிராகாரத்தில் உள்ள பட்டியல் கல் தளவரிசைகள் மேல் படபடவென்று குதிரைகளின் காற் குளம்புகள் ஒலி செய்தன. இரு வீரர்கள் வெகு வேகமாகப் பரியை விட்டு இறங்காமலேயே மண்டபங்களுக்குப் பாய்ந்து பாய்ந்து வந்தனர்.

ரங்கவிலாச மண்டபத்தின் உயர்ந்த கற்றூண்களுக்கு இடையே அப்பரிகள் விரைந்து வருவதையும் அதன் மேல் வேலேந்திய வீரர்கள் வீற்றிருப்பதையும் பார்க்கும்போது சிற்பங்கள் உயிர் பெற்று வருவதுபோன்ற பிரமை உண்டாகியது.

ஆனை மண்டபம் வந்தவுடன் புரவிகளை நிறுத்தி இறங்கக்கூட நேரமற்றவர்களைப்போல், கடிவாளத்தை மேலே போட்டுவிட்டுத் தாவிக் குதித்து உள்ளே ஓடினார்கள்.

மகாராணி மீனாட்சிதேவியார் திருக்கரத்தில் அவ்வீரர்கள் கொண்டு வந்த ஓலைச் சுருள் இருந்தது. அவர் முகத்தில் பெரும் அதிர்ச்சி காணப்பட்டது.

"பரமனாச்சாரியாரே! உங்களிடம் ஓலை எழுத்தாணி இருக்கிறதா?" என்று கேட்டார் ராணிமா தேவியார்.

அவர் கொடுத்தவுடன், அவற்றில் நீலமயிலையைக் கொண்டு அவசரமாக ஒரு நிருபம் வரைந்தார். அதில் தம் கை விரலில் உள்ள கண்டபேரண்ட மோதிரத்தால் நீலமயிலின் அஞ்சன மையைக் கொண்டு ஓர் இலச்சினை பதிக்கச் செய்தார்கள்.

அது அஞ்சன மையோ? அல்லது அவரது எழில் விழி நீலமோ?

"வீரா! இதைப் பரிசல் போட்டி நடக்கும் இடத்துக்குக் கொண்டு செல்" என்று உத்தரவிட்டாள்.

திருவரங்கத்தருகே கொள்ளிடத்தில் எதிர்த்து வரும் நீரில் பரிசல் போட்டி மூன்று நாட்களாக நடைபெற்று வந்தது. 'திருச்சி நாயக்க வீரர்களுக்கும் தஞ்சை மராட்டிய வீரர்களுக்கும் நடக்கும் விசேடப் போட்டி ஆதலால் கூட்டம் ஏராளமாகக் கூடியிருந்தது. போட்டியில் நீதிபதிகளாகத் தஞ்சைத் தளவாய் பேஷ்வா அனந்தராவ் அவர்களும் நாயகப் பிரதானி பெத்த பெருமாள் அவர்களும் பட்டு மேற்கட்டியின் கீழ் அமர்ந்திருந்தனர். போட்டியின் முடிவில் மகாராணியாரே நேரில் வந்து, தங்கத் தோடாவும், வெள்ளித் துடுப்பும் பரிசளிப்பதாக ஏற்பாடு.

குதிரை வீரர்கள் இருவரும் பரிசல் றையை நோக்கிப் பறந்தனர்.

அணிமதில்சூழ் திருவரங்கத்தில் எம்பெருமான் திருமதில்கள் எட்டு நாழிகை வழி' என்பர். திருவானைக்காவலிலே திசையை மறைக்கும் 'திருநீறிட்டான் மதில்' என்பர். திருச்சிராப்பள்ளி மாநகரைச் சுற்றி நாற்புறங்களிலும் அரைக் காத நீளத்துக்கு அணிமதில் அழகு செய்துகொண்டு நின்றது. விசுவநாத நாயகரால் சோழப் பேரரசர்களின் கோட்டையை அடி ஒற்றி எழுப்பப்பட்ட வானளாவிய அக்கோட்டை வாயில்களின் மேல் பறந்த நாயக அரசின் கொடிகள் பல நாட்டினரை, ''வாருங்கள். வந்து பாருங்கள்'' என வானில் நின்று அழைத்தன. காவிரி நீரால் நிரப்பப்பட்டுக் கோட்டையைச் சுற்றி இருந்த அகழிகளில் இது பாண்டி நாட்டு அரசியின் கோட்டை என்று கூறுவது போல் மகர மீன்கள் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தன. முதலைகள் மீன்களுக்கு அஞ்சி ஆழத்தில் கிடந்தன. இருபுறமும் மதிலும் இடையே இருபது முழம் அகலம் உள்ள அலங்கம். எண்டிசையும் வானளாவிய காவற் கோபுரங்கள், சிந்தாமணி தலைவாசல், தஞ்சை வாசல், தெற்கு தலைவாசலாகிய ராமசாமி வாசல் என்று பல வாயில்களும் கொண்ட மலைக்கோயிலுக்கு ஒரு மாலைபோல் விளங்கியது. ஓங்கு மலைமேலிருந்து ஊர் காக்கும் தெய்வமாகிய மலை மீதில் உச்சிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் ஓர் உயர்ந்த மணிமண்டபத்தில் இரு வீரர்கள் நின்று சீனிக் கண்ணாடியால் ஊரின் நாற்புறத்திலும் வேவு பார்த்துக்கொண்டிருந்தார்கள். திடீரென்று அவர்களில் ஒரு வீரன் அதிர்ச்சியுடன் ''அதோ!'' என்று தெற்கு நோக்கிக் கைகாட்டிக் கூவினான்.

அடுத்த கணமே மணிகளை முழங்கினான் மற்றொரு வீரன். இந்த எச்சரிக்கையைக் கேட்டதும் ஸ்ரீரங்கத்திலிருந்து மகாராணியின் வருகைக்காக அகழியின் மீது போடப்பட்டிருந்த பலகை வாராவதி மேலே ஏற்றப்பட்டது. மணிகளும் மத்தக ஈட்டிகளும் பொருத்தப்பட்டிருந்த சிந்தாமணி வாசல் கதவுகள் பேரிரைச்சலுடன் சாத்தப்பட்டன. அப்பொழுது தெற்குத் தலைவாசலில் காவல் புரிந்த வீரர்களின் மேல் எங்கிருந்தோ பல வளை தடிகள் வானத்தில் சக்ராயுதங்கள் படையெடுத்ததைப் போலச் சுற்றிக் கொண்டே வந்து பரபரவென்று பலர் கழுத்துக்களை அறுத்தெறிந்தன. கோட்டைக்குள்ளிருந்த படைகள் அத்திசையை நோக்கி ஓடி வரும்போதே கொல்லப்பட்டன. வீரர்களின் சீரணி உடையை அணியாமல் வெறும் முன்டாக தலைப்பாகையுடன் நூற்றுக்கணக்கான ஆட்கள் ''கூ'' என்று கத்திக்கொண்டே கோட்டைக்கு வெளியே இருந்து அம்புகள் போல் விரைந்து வந்தார்கள். அவர்கள் கைகளில் வேல் கம்பு, கத்தி, அரிவாள், கோடரி, உலக்கை ஆகியவைதான் ஆயுதங்களாக விளங்கின. அரைக் கணத்தில் அகழியை நீந்திக் கரை ஏறினார்கள். ஏணியைத் தேடாமல் ஒருவர் தோள்மேல் ஒருவராக வீரர்கள் ஏறி ஏணி போல் நிற்க அவர்கள் மீது மற்றவர்கள் ஏறி அலங்கத்தை அடைந்து கோட்டைக்குள்ளே குதித்தார்கள். படைக்கும் அவர்களுக்கும் நடந்த போரில், காவற் படைகள் தோற்று ஓடின. கோட்டையின் கதவு உட்புறமிருந்து திறக்கப்பட்டது. இரு பழைய பல்லக்குகள் புகுந்தன. சிங்காரத் தோப்பின் நடுவே உள்ள மங்கம்மாள் அரண்மனையின் ஆஸ்தான மண்டபத்தில் வேத கோஷம் முழங்கியது. நாதஸ்வரக்காரர்கள் ஊதினார்கள். நகாராவை அடித்தார் ஒருவர். அரண்மனை பொக்கிஷ ஆலையில் பல்லக்கில் வந்த அதிகாரிகளில் ஒருவர் ''அதோ! அந்தப் பேழையை உடை'' என்று உத்தரவிட்டார். தங்கத்தால் செய்து இரத்தினங்கள் இழைக்கப்பட்ட அழகு மணிப் பெட்டகம் ஒன்றைத் தலை வரை தூக்கிக் கீழே போட்டு உடைத்தான் ஒருவன். தேங்காய்க்குள்ளிருந்து வெண்முளை சிதறியது போல ஒரு மணி மகுடம் பெட்டியிலிருந்து வெளியே வந்தது. ஆரவாரத்துடன் அதைத் தூக்கிக் கொண்டது அக்கூட்டம். ஆஸ்தான மண்டபத்தின் கோபுரத்தின் கீழ் அறுகோண வடிவமுள்ள உயர்ந்த பீடத்தின் மேல் அமைக்கப்பட்டிருந்த நாயகர் மன்னர்களின் அரியணையில், திருமலை நாயக ஐயனும், சொக்கநாத நாயகனும், மகாராணி மங்கம்மாவும் அமர்ந்து ஆட்சி செய்த சிங்க ஆச

ஒவல்டின்

புரதச்
பொருள், வைட்டமின்கள்,
ஃபாஸ்பேட்டைடுகள், எருகட்டிய
புத்தம்புதிய பால், முதிர்ந்த
பார்லி மால்ட் ஆகியவை
வளப்பமாக அடங்கியது.

உடல்நலமும், வலிமையும், தெம்பும்
உருப்பெற இவை யாவும் உங்களுக்குத் தேவை



உடல்நலமும், வலிமையும், தெம்பும் உருப்பெற உங்களுக்கு இன்றியமையாத எல்லா ஊட்டப்பொருள்களும் செறிந்தது ஒவல்டின். பாலுடன் ஒவல்டின் சேர்க்கும்போது, நீங்கள் சேர்ப்பது இன்சுவை மட்டுமல்ல—உடல்நலம், வலிமை, தெம்பு.

அருந்துங்கள்
இன்சுவைமிக்க **ஒவல்டின்**
இன்றும்.. நாளையும்... என்றும்!



ASP/J/22/Tam.

ஒவல்டினைப் பாரதத்தில் [illegible] இண்டஸ்ட்ரீஸ் லிட். நிறுவனம்,
[illegible] வாண்டர் லிமிடெட்டின் [illegible] பெற்றுத் தயாரிக்கிறது.
[illegible] விநியோகஸ்தர்கள்: வோல்டாஸ் லிமிடெட்


நீங்கள் என்றும்
அழகுடன் திகழ



heros' TI-12 B TAM

டால்ப்ரோ காஸ்மெடிக்ஸ் இந்திய
சோதனை நிலைக்கு ஏற்றவை

நீங்கள் பரவசமூட்டும் புது அநுபவத்தைப் பெற டால்ப்ரோ
□ கோல்ட் க்ரீம் □ வானிஷிங் க்ரீம்
□ ஆல்பைன் ஸ்னோ □ ஒயிட்டெனிங் க்ரீம்,
டால்ப்ரோ டீப் க்ளென்ஸிங் மில்க், டால்ப்ரோ
ஹேர் டார்க்கனர், டால்ப்ரோ ஹேர் க்ரீம், டால்ப்ரோ
பெர்ல்ஷீன் லிக்விட், ஃபவுண்டேஷன்.



டால்ப்ரோ
இன்டர்நேஷனல்


4. வில்லன் ரோடு, பல்லார்ட் எஸ்டேட், பம்பாய்-1

னத்தில் ஒரு சிறு பையனை உட்கார்த்தி வைத்தார்கள் அக்கூட்டத்தினர். அவனுக்கு அவசரம் அவசரமாகப் பாலும் பழமும் கொடுத்தார் ஒருவர். அவன் தலையில் அட்சதையைத் தூவிப் பல்லாண்டு பாடினார் மற்றொருவர்.

''பங்காரு திருமலை நாயக்கர் அவர்களே! உங்கள் திருமகன் விஜயகுமார நாயகரின் தலையில் உங்கள் கையால் மகுடத்தைச் சூட்டுங்கள்'' என்றார் அந்த அதிகாரிகளில் ஒருவர். பங்காரு திருமலை தமது கைகளால் மகுடத்தை இறுகப் பற்றிக் கொண்டார். அவர் கைகள் நடுங்கின. கெட்டி மேளம் முழங்கியது. அங்கிருந்த ஜனங்கள் செய்த கரகோஷ ஆர்ப்பாட்டத்தின் நடுவே பையனின் தலை மீது கிரீடத்தைச் சூட்டப் போகும் பொழுது எங்கிருந்தோ ஒரு வீர வாள் சீறி வந்து அவரது வலக்கரத்தைத் துண்டித்தது. அந்தோ! கிரீடம் நாயக்க வம்சத்தின் மணிமுடி தரையில் உருண்டது. வாள் வந்த திக்கை நோக்கி எல்லோரும் திரும்பினர். ''துரோகிகளே! அப்படியே எல்லோரும் அசையாமல் நில்லுங்கள்!'' என்று பெண் சிங்கத்தின் கர்ஜனை போல் கூறிக் கொண்டே உள்ளே மகாராணி மீனாட்சி நுழைந்தாள். அவளது செக்கச் சிவந்த கண்கள் தீப்பொறியைக் கக்கின. வாத்திய கோஷங்கள் நின்றன. மகாராணி தேவியார் சிம்மாசனத்தின் அருகில் சென்று தன் இடக் கரத்தால் அந்தப் பையனை இழுத்து ஓர் புறத்தே தள்ளினார்கள். அரியணையில் அமர்ந்தார்கள். ''வருக, வருக'' என்று யாரையோ அழைத்தார்கள். தஞ்சை தளகர்த்தர் பேஷ்வா ஆனந்தராவ் மிடுக்குடன் உள்ளே வந்தார். உருவிய வாளைக் கையில் பிடித்தபடி மகாராணிக்கு வணக்கம் செலுத்தினார். அவரது வாளில் இருந்து இரத்தம் ஒழுகியது. அதே நேரத்தில் பிரதானி பெத்த பெருமாளின் தலைமையில் தஞ்சைப் படைகளும், திருச்சி நாயகர் படைகளும் கலகம் செய்த பங்காரு திருமலை நாயகரின் படைகளை ஊர் முழுவதும் தேடிக் கொன்று குவித்தன. கலகக்காரர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டார்கள்.

ஸ்ரீ ரங்க விலாச மஹாலில் நாயக்கர் தர்பார் கூடியிருந்தது. பேஷ்வா அனந்தராவ் அவர்களும் மற்றும் பல பாளையத் தலைவர்களும் வந்திருந்தார்கள். மகாராணி மீனாட்சி தேவி பேச எழுந்தார் :

''பிரதானிகளே, தளகர்த்தர்களே, பிரஜைகளே! விஜயநகர சாம்ராஜ்யத்தின் பிரதிநிதியாக மதுரைச் சீமையைப் பரிபாலித்து வரும் ராணி மீனாட்சியாகிய நாம், ,'முதற்கண், தக்க தருணத்தில் உதவிசெய்து, திருச்சிக் கோட்டையையும், மணிமகுடத்தையும் காப்பாற்றித் தந்தமைக்குத் தஞ்சை அரசர் துக்கோஜி மன்னர் அவர்களுக்கு நமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.



தஞ்சை வீரப் படையினரின் பாக்கு வெற்றிலைக்காக நமது திருக்காட்டுப் பள்ளி நாட்டை தஞ்சை அரசுக்கே அளிக்கிறோம். கல்லணையை உடைத்தால் திருவையாறு மூழ்கிவிடும். அடைத்தாலோ திருவரங்கம் மூழ்கிவிடும். ஆதலால் இனி கல்லணையின் காவலில் இரு வல்லரசுகளும் ஈடுபட்டுக் காவிரித் தாயைக் காப்பாற்றி வரத் திருக்காட்டுப்பள்ளி, தஞ்சை அரசரின் பொறுப்பில் இருப்பது மிகவும் பொருத்தமானது என நம்புகிறோம்'' என்று கூறி நாயக்கமாதேவி தம் வலப்புறம் திரும்பினாள். பிரதானி பெத்த பெருமாள் ஒரு தங்கத் தாம்பாளத்தில் நிரம்பக் கோட்டை வெற்றிலையும், கொட்டைப் பாக்கும் வைத்து அரசியிடம் கொடுத்தார். அரசியார் அதில் ஒரு சிறு கரண்டியால் காவிரி நீரை வார்த்து அந்தத் தண்ணீரை வெற்றிலைக் காம்பின் வழியே தரையில் ஊற்றினார். அப்போது திருச்சி மக்கள் பலரது கண்ணீர் தரையில் சிந்தியது. உட்பகை வந்தால் வீடும் நாடும் இப்படித்தான் சிதறும் என்று பேசிக் கொண்டார்கள்.

இதன் பின் ராணியார் முதல் நாள் கைது செய்யப்பட்ட அமைச்சர்கள் பக்கம் திரும்பி, ''நமது எதிரில் துரோகிகளாய் இன்று நிற்கும் அமைச்சர்கள் இருவரும் உங்களுக்குப் புதியவர்களல்ல. உங்கள் மகாராஜா இறந்தவுடன், இவர்கள் இருவரும் நாம் அரசியாவதை விரும்பவில்லை. அதோடு உக்கிராணத்தையும், கருவூலத்தையும் நம்மிடம் ஒப்படைக்கவும் மறுத்தார்கள். ஏராளமான பணத்தையும் அபகரித்து விட்டார்கள். அதற்காக இவர்களது இல்லங்களை நமது புதிய அமைச்சர் முற்றுகையிட்டபோது மாளிகையைச் சுற்றிப் பசு மந்தைகளை நிறுத்தி அவைகளுக்கிடையே கருமருந்தைப் பரப்பி நெருப்பு வைத்துவிடுவதாகவும், பிரும்மஹத்தியும், பசுக்களைக் கொன்ற பாவமும் ராணியையே சாரும் என்று பிடிவாதம் செய்தார்கள். அப்படியிருந்தும் நாம் அவர்களை மன்னித்து மதுரைக்குப் போய் விடும்படி கூறினோம். அந்த நன்றியின் பயனே இந்த நன்றி மறந்த செயல்.

''நமக்கு ஒரு விதத்தில் மாமனார் முறை உடையவர் பங்காரு திருமலை நாயக்கர். இதுவரை அம்மைய நாயக்கனூரில் அடங்கிக் கிடந்தார். ஆலமரத்தடியில் படுத்திருந்த அவரை அரைத் தூக்கத்திலிருந்து எழுப்பி அவர் மகன் விஜயகுமாருக்கு மதுரைப் பட்டத்தைக் கட்டி விடுவதாக ஆசை வார்த்தை கூறி. இதற்குத் துணையாகச் சிலரையும் சேர்த்துக் கொண்டு நம்மீது படை எடுத்து வருவதாக ஒற்றர் மூலம் அறிந்தோம்.

''இதற்காகவே சில நாட்களுக்கு முன் கோயிலடி அப்பக்குடத்தான் சன்னதியில் நாமும் நமது மதிப்புக்குரிய தஞ்சை மன்னரும் சந்திப்புச் செய்து கொண்டோம். அதன் பயனாக ஏற்பட்டதே பரிசில் போட்டி.'' கூட்டத்திலிருந்து மகாராணியாரின் சாமர்த்தியத்தை மெச்சிக் கரகோஷம் கிளம்பியது. ''போட்டிக்கு ஏற்பாடு செய்து, அப்போட்டியில் கலந்துகொள்வதன் மூலம் ஆயிரக்கணக்கான வீரர்களை எச்சரிக்கையுடன் இருக்கும்படி செய்தோம். அது சமயத்துக்கு உதவி செய்தது.''

''மகாராணியார் வாழ்க வாழ்க'' என்ற குரல் மண்டபம் முழுவதும் எதிரொலி செய்தது.

''மகாராணி ராஜகோபுரத்தைக் கட்டப் போகிறாள்; ராஜ காரியத்தைக் கவனிப்பதில்லை என்ற பழிச் சொல் பரவ இடம் கொடுத்தோம்.

''அவர்கள் வந்து இரவில் படையுடன் அங்கு பொன்மலைக்கு மேற்கே காசாமலைக்குக் கிழக்கே காக்காத் தோப்பில் மறைந்திருப்பதாகவும், ராமசாமிவாசல் வழியே உள்ளே நுழையப் போவதாகவும் ஒற்றர்கள் புரவியுடன் வந்து என்னிடம் தெரிவித்தார்கள். இதன்பின் நடந்ததை நீங்கள் அறிவீர்கள்'' என்று சொல்லிவிட்டுத் துயரம் தோய்ந்த முகத்துடன் ராணி நெடு நேரம் நின்றாள்.

''தஞ்சை வாயிலைக் காத்தவர்களில் பலர் தலையை இழந்தனர். சிந்தாமணித் தலைவாசலில் சிரங்கள் உருண்டன. பிரதான வாசலில் பலர் பரமனுலகம் சென்றனர். நகர மக்கள் நடுங்கிக் கொண்டே இருந்தனர். இத்தனைக்கும் காரணமாகிய இரு அமைச்சர்களையும் நாம் சிரச்சேதம் செய்ய உத்தரவு இடுகிறோம்.

''எய்தவன் இருக்க அம்பை நோவதில் பயனில்லை. ஆதலால் பங்காரு திருமலை நாயக்கரையும் அவர் மைந்தனையும் அவமானப்படுத்துவதே போதும் என்று கருதுகிறோம். அவர்கள் கைவிலங்குடன் கோட்டையைச் சுற்றி அழைத்துச் செல்லப்படுவார்கள். தொண்டைமான் எல்லையில் விடுவிக்கப்படுவார்கள்'' என்று சொல்லி வரும்போதே அரசியின் நெஞ்சம் விம்மியது. தாய்க் குலத்தின் கருணை அவளைத் தாக்கியது. தண்டனை விதித்ததில் தவித்தாள் அந்தத் தாய். திடீரென்று அரியணையிலேயே மூர்ச்சையாகி விழுந்தாள். (தொடரும்)


யாவற்றிலும்
முதன்மை
1st
★ கச்சிதமான நயம்
★ ஒப்பற்ற சுவை
★ முரமுரப்பான புதுமை
★ ஈடிணையற்ற போஷாக்கு யாவற்றிலும் முதன்மை—
பார்லே க்ளுகோ
பிஸ்கட்டுகள்
PARLE Gluco
பார்லே க்ளுகோ இந்தியாவிலேயே உன்னத
விற்பனையுள்ள பிஸ்கட்டாக விளங்குவதில் வியப்பில்லை !



விஞ்ஞானிகள் வரிசை



உணவும் நோயும்

நமது உணவில் புரதச் சத்து குறைவாக இருப்பதால் என்னவெல்லாம் நோய்கள் ஏற்படுகின்றன என்பதை ஆராய்வதில் முனைந்தவர் பேராசிரியர் வி. ராமலிங்கசுவாமி.

டாக்டர் ராமலிங்கசுவாமி அவர்கள் பிறந்தது சிகாகுளத்தில். வைத்தியப் படிப்புப் படித்தது ஆந்திர சர்வகலாசாலையில். சர்வகலாசாலையினின்று மிகச் சிறப்புடன் வெளியேறிய அவர், நேராக வைத்தியத் தொழிலில் இறங்கியிருக்கலாம். அவர் நிலையில், யாருமே அப்படித்தான் செய்வார்கள். ஏனெனில், வெகு விரைவில் அவர் ஏராளமாகப் பணம் குவிக்கலாமே! ஆனால் அவர் மனம் டாக்டர் தொழிலிலிறங்கிப் பணம் திரட்ட எண்ணவில்லை. மேலும் ஆராய்ச்சி புரிய வேண்டும் என்றுதான் அவர் நாட்டம் சென்றது. அதன் விளைவாக அவர் 1947ல் நேரே கூனூருக்கு உணவுச் சத்து ஆராய்ச்சிக் கழகத்துக்கு வந்து சேர்ந்தார்.

நமது உணவில் எத்தனையோ குறைபாடுகள்! வைட்டமின்கள் குறைவு; உலோக சத்துக்கள் குறைவு. இவை ஒவ்வொன்றின் குறை காரணமாக ஒவ்வொரு வகை நோய் ஏற்படுகிறது. பரவலாக — ஏழை பணக்காரர் என்ற பாகுபாடின்றி எல்லாத் தரப்புக் குழந்தைகளிடமும் காணப்படுவது, புரதச் சத்துக் குறைவே என்ற கருத்தை வெளியிட்டவர் டாக்டர் ராமலிங்கசுவாமி. அதிலிருந்து தேச மக்களிடை குறைந்துள்ள புரதச் சத்து நிரக்க வேண்டும் என்ற விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது.

கூனூரில் ஒன்றரை ஆண்டுகளாக, ஆராய்ச்சி புரிந்துகொண்டிருந்தபோது இந்திய சர்க்காரின் உபகாரச் சம்பளம் பெற்று இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையில் ஆராய்ச்சிபுரிய வாய்ப்புக் கிடைத்தது. அங்கு மூன்று ஆண்டுகள் பணிபுரிந்து டாக்டர் பட்டம் பெற்று இந்தியாவுக்கு வந்தார். வந்ததும், மீண்டும் கூனூருக்குச் சென்று தமது ஆராய்ச்சிகளைத் தொடர்ந்தார்.

இந்தத் தடவை அவரது ஆராய்ச்சி, அடிப்படை விஷயத்துக்கே சென்றது. அதாவது மனிதர்களுக்கு வரும் நோய்களை மிருகங்களுக்கு உண்டாக்கி, ஆராய்ந்து தாம் காணும் முடிவுகளை வெளியிடவிருந்தார். இந்த வேலை பாதி நடந்து கொண்டிருக்கும் போதே, இந்திய வைத்திய ஆராய்ச்சிக் கழகம், டாக்டர் ராமலிங்கசுவாமி அவர்களை, இந்திய வைத்தியக் கல்லூரிகளில், பட்டம் பெற்ற மாணவர்கள் மேற்கொண்டு ஆராய்ச்சி புரிய விரும்பினால் அதற்குத் தகுந்த தேசிய ஆராய்ச்சிப் பணித் திட்டம் வகுக்குமாறு பணித்தார்கள். இது முழுக்க முழுக்க நிர்வாகப் பணியாகும். ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டிருந்த ஒருவரை அதனைப் பாதியில் அப்படியே நிறுத்திவிட்டு, நிர்வாகப் பணி ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்தும் ஒரே ஒரு நிர்வாகம், இந்திய அரசாங்கம்தான். இப்பணியை இரண்டு ஆண்டுகள் செய்துவிட்டு அகில இந்திய வைத்திய சாஸ்திர ஆராய்ச்சிக் கழகம் தில்லியில் நிறுவப்பட்டவுடன், அதில் 'பேத்தாலஜி' பேராசிரியராகச் சேர்ந்து மீண்டும் தமது ஆராய்ச்சிகளை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தார்.

டாக்டர் ராமலிங்கசுவாமி அவர்களின் ஆராய்ச்சிப் பணிகளில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது, தைராய்டு சுரப்பிகள் கெட்டு, கழுத்து வீக்கம் ஏற்படும் நோய்க்கு முக்கிய காரணம் நாம் உண்ணும் உணவிலும் அருந்தும் நீரிலும் போதிய அயோடின் சத்து இல்லாததே என்று சந்தேகமற நிரூபித்தார். இவர் இந்த முடிவை வெளியிடுவதற்கு முன் சென்ற நாற்பதாண்டுகளாக, குடிநீரில் அதிகமாகச் சுண்ணாம்புச் சத்தும், புளோரைட்டும் இருப்பதே காரணம் என்று விவாதித்து வந்தார்கள். ஆனால் டாக்டர் ராமலிங்கசுவாமி சந்தேகமற நிரூபித்ததின் விளைவாக, இந்த நோய் அதிகமாகக் காணப்படும் ஹிமாலயச் சாரலில், அதைக் கட்டுப்படுத்த தேசியஅளவில் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வளவு முக்கியமான ஆராய்ச்சிப் பணிகள் புரிந்துள்ள டாக்டர் ராமலிங்கசுவாமி அவர்கள், இளமையில் இண்டர்மீடியட் முடித்ததும் பொறி இயல் கல்விக்குப் படிக்கத்தான் விரும்பினாராம். அவர் தந்தை கூட அதைத்தான் ஆதரித்தாராம். அவரது தாத்தாதான் வைத்தியப் படிப்புக்குப் போக வேண்டும் என்று வற்புறுத்தினாராம்!

டாக்டர் ராமலிங்கசுவாமிக்கு இப்பொழுது வயது 48. அவர் மனைவி ஒரு மனோதத்துவ ஆசிரியை. அவர் மகன் வைத்தியத் துறையில் பயிலும் மாணவர்.

ஆதாரம்: 'ஹிந்து'

கரையானும் கழனியும்

கரையானும் எறும்பும் தொல்லை கொடுப்பதாக எண்ணுகிறோம். ஆனால் ஆண்டவன் படைப்பில் எதற்கும் ஒரு பயன் உண்டு.

கரையானும் எறும்பும் கழனியை வளப்படுத்தி விவசாயிக்கு உதவக்கூடும் என்று பிரிட்டிஷ் விஞ்ஞானி எம். வி. பிரையன் கூறுகிறார். இவை கடினமான கட்டைகளைக்கூடக் கடித்துத் தூளாக்கி விடக்கூடிய ஆற்றல் பெற்றவை. காம்புக் காட்டிலுள்ள கட்டைகளையும் தாவரங்களையும் அழித்து, பயிர்கள் எளிதில் சத்துக் கொள்ளக்கூடிய முறையில் மரச் சத்தை இவை தயாரித்துவிடுகின்றன. இது மண்ணுடன் கலந்து சிறந்த எருவாகப் பயன்படுகிறது.

ஆதாரம்: ''ஸயன்ஸ் ஜர்னல்''
தகவல்: மணிவாசகன்


ஆத்தாடி! பெருங் கல்லுச் சொமையைத் தூக்கிக்கினு நடந்த மாதிரி அல்ல இருக்குது! என் உடம்பே வெல வெலத்துப் போச்சே! என் காலுங்க ஏன் இப்படி 'இத்து'ப் போயிடிச்சு! உடம்பைத் தூக்க முடியாமெ காலே இளுத்துக்கிட்டு இளுத்துக்கிட்டல்லவா நடந்தேன்! நானா நடக்கவா நடந்தேன்! பலமா என் தோளைப் பிடிச்சு நடத்தியில்லே இளுத்து வந்தாங்க!

நடந்தது கூப்பிடு தூரம்கூட இருக்காது. ஆனால் எட்டு ஊரு சுத்தினாப் போலே களைப்பா இருக்குதே கருமம்! தலே மரத்துப் போயிடிச்சு! அழுத்திப் பிடிச்சாத் தேவலாம் போல இருக்கு. அதுக்குக் கையைத் தூக்கணுமே! ஊஹூம்! கையைத் தூக்கவே முடியலியே! அம்மாடி! பின்னாலே சுவரு இருக்குதோ, பொனச்சமோ? அதிலே சாய வச்சாங்க. இல்லாட்டி விளுந்திட்டிருப்பேன். வவுத்துலே என்னமோ சங்கடம் பண்ணுதே! வாந்தி வருமோ, என்னமோ? வந்தா என்ன பண்ணறது? இது எசமான் வீட்டுக் கூடமாச்சே! வெளியே போகலாமுன்னு எளுந்து நடக்க முடியாது போலிருக்கே. எப்படி நடந்து வந்தேன் இத்தனை நேரமும்? ஆமாம், யாரோ தோளைப் பிடிச்சு நடத்தி இட்டாந்தாங்க. யாரது? கிட்டுப் பய. அவனாலே தானே இவ்வளவு தூரமாச்சு. அவன்தான் ஓடியாந்தான். அந்தப் பயனைத்தான் நமக்கு என்னிக்குமே பிடிக்காதே. அவன்



மஞ்சளும் குங்குமமுமாக...

கல்யாணசுந்தரி ஜெகந்நாத்



எப்படி வந்தான்? ஏன் வந்தான்? அவனைப் பார்த்தாலே பத்திக்கிட்டு வருதே! இந்த அளவிலே அவனுக்குக் காக்கி நிஜாரும் சட்டையும் வேறு ஒரு கேடு. போலீஸ்காரன் மாதிரி. அந்தத் தண்ணி டாங்கி வேலையிலே சேர்ந்ததிலிருந்து தான் அந்தப் பய இந்த மாதிரி உடை உடுத்தறான்.

அப்பா! காத்தே இல்லே. மூச்சு முட்டுது. இங்கேயென்ன இத்தனை நெரிசல்? எத்தனை காலுங்கடா கடவுளே! காலடிச் சத்தம், பேச்சுச் சத்தம். எல்லாம் ஒரே களேபரமா இருக்குது. ஒண்ணும் விவரமே புரியலே. அந்தக் கண்ணாலக் கூட்டமெல்லாம்இங்கேஇரும்பிடுச்சபோலிருக்குதே!

எங்கேயோ யாரோ சொல்லிக்கிட்டிருக்காங்க, கூட்டத்திலிருந்து: ''எவ்வளவு அழகான பெண் அந்த மங்கி!''

நெசமா 'என்ன அழகு!' ஒரு வருசத்துக்கு முன்னாடி என் கண்ணாலத்தின்போது எப்படி இருந்தா? எவ்வளவு நல்லா இருந்தா? அன்னிக்குப் பரிசம் போட்டாங்க. மஞ்சத் துணி, தாடையிலே சந்தனம். உடம்பெல்லாம் மஞ்சள். செருகுக் கொண்டையிலே பூத்த மல்லிச்சரங்க எப்படி கம்முன்னு இருந்திச்சு! என்னைப் பார்த்து மங்கி இனி போலச் சிரிச்சா, யார் கண்ணிலேயும் படாமெ. இன்னிக்கும் அந்த அழகு கொறையலேயே. என் மங்கியை நான் உசிருக்கு உசிராத்தான் வச்சுக் கிட்டிருந்தேன்.



''கள்ளம் கபடம் இல்லாதவள்..... பாவம்.''

''அவங்க ரெண்டு பேரும் முறைப் பிள்ளைங்களாமே!''

யார் குரலோ? என்னைச் சுத்தியிருக்கிற கும்பலிலிருந்து பேச்சு வருது. அந்தக் கிட்டனுக்குக் கையெழுத்துப் போட வரும். மாமன் மகன் வேறே. அதுவே போதுமே. மங்கியைக் கண்ணாலம்கட்ட என்னென்ன பாடு பட்டான்?

''உன் அழகுக்கும், மங்கி அழகுக்கும் சரியா இருக்கும்டா. அவளை உனக்கே பேசறேன்'' இன்னு என் ஆயா ஒரே கால்லே நின்னு. அதோட அவகிட்ட எனக்கு உசிராச்சே. வேலைமேலே போயிட்டுத் திரும்பி வரும்போது குடிதண்ணிக் குளத்துப் பக்கம் பார்த்துக்கினே வருவேன். எடுத்த எடுப்பிலே, தண்ணிக்கு வந்திருக்கிற அத்தனை பேரிலேயும் அவ ஒருத்திதான் என் கண்ணிலே படுவா. அவ மட்டும் என்ன குறைச்சலாவா பார்த்தா? என் சாது மச்சான் சத்தியனையே கட்டிக்குவேன்னு எத்தனையோ பேருங்க கிட்ட, தன்னொத்த பெண்கள் கிட்டவெல்லாம் சொல்லிக்கிட்டிருந்தாளாம். இதுவரை குறைகூறும்படியா அவ நடந்துக்கலே. ஆனா அந்தக் கிட்டுப் பயதான் மடிலே கட்டின வெடி போல இருந்தான். அவனுக்குச் சைக்கிள் வேறே. அதை மிதிச்சுக்கிட்டுச் சீட்டி அடிச்சுக்கிட்டே போவான். அப்படிப் போய்க் கிட்டே, ''ஏன் புள்ளே, சுகமா?''ன்னு கேட்டா இவ ஏன் சிரிக்கணும்கிறேன்? எனக்கா, தலை கால் தெரியாத கோபம் வரும். ஆனா எப்படியோ அடக்கிக்கிடுவேன். ஒவ்வொரு நேரத்திலே இவங்க ரெண்டு பேர் போக்கையும் பார்த்தா ஆத்திலே குளத்திலே விளுந்து சாகலாமான்னுகூடத் தோணும். ஆனா ஆயா புரிஞ்சுக்கினு. ''அவங்க முறைப்பசங்கடா. பொம்பளைங்களைப் பார்த்தாப் போதும். கிட்டுப் பய பல்லைக் காட்டுவான். அவ்வளவு தான். நீ இதையெல்லாம் பாராட்டாதே''ன்னு சொல்லிக்கினே இருந்தா அவ சாகற வரையிலே. இருந்தாலும் மங்கியை எதிரிலே கண்டுட்டா அவன் ஒரு மாதிரியாத் தான் பார்ப்பான். எனக்கோ கண்ணு இருண்டுக்கிட்டு வரும். கட்டிக்கிட்டா மங்கியைத்தான் கட்டிக்குவேன்னு அவன் எத்தனை பேர்கிட்டச் சொல்லலே? அவன் சைக்கிளிலிருந்து விழுந்து படுத்த படுக்கையாய் இருந்தபோது எங்க ஆயா போய்ப் பெண் கேட்டாள். மங்கியின் அப்பன் மாறு சொல்லாமல் அவளை எனக்குக் கொடுக்க ஒடனே ஒப்புக் கொண்டான். மங்கியின் அந்த அப்பனும் இப்போ இங்கே எங்கே இருக்காரு? அவருதான் புள்ளே கிட்டே பக்கத்துச் சீமைக்குப் போயிட்டாரே! நானும் மங்கியும் திக்கில்லாமே ஆயிட்டோமே! அவளுக்கு நான், எனக்கு அவள். இத்தனை நாள் ஓடிப்போச்சு; இன்னிக்கு இப்படி ஆச்சு!

இன்னிக்கு அந்தப் பாழாய்ப் போன கல்யாணத்துக்கு அவள் ஏன் போகனும்? இது கிட்டுப் பய கல்யாணம் கூட இல்லையே! அதுவாயிருந்தாலும் ஒரு சனியன் விட்டதுன்னு இருக்கலாம்.

அவன் என்னடான்னு கோயில் காளை யாட்டம் கல்யாணமே செய்துக்கிட மாட்டேன்னு இருக்கான்! இதுவோ அவன் தங்கச்சி கல்யாணம்.

இவ கல்யாணத்துக்கு அவங்க என்ன பெரிசாச் சீர்வரிசை பண்ணிப்பிட்டாங்க? பார்க்கப் போனால் எங்கள் கல்யாணம் நல்லபடியா நடக்கக் கூடாதுன்னு அவங்க அம்மா பட்ட பாடு கொஞ்சமா, நஞ்சமா? அந்த மவராசி கண்ணிலே போய் அந்தக் கோழிக்குஞ்சு பட்டுதே. அதை என்னத்தைச் சொல்ல?

கண்ணாலம் ஆன நேரத்திலே தாம்புக் கயிறூட்டம் மஞ்சள் சரட்டைக் கட்டிக்கிட்டுப் பச்சைப் பசேல் என்ற பந்தலிலே கன அழகா என் மங்கி நின்னுக்கிட்டிருந்தது எம்மாம் சோரா யிருந்தது! அந்த நேரம் பார்த்தா, மங்கி ஆசையோடு வளர்த்த கோழிக் குஞ்சைப் பருந்து அடிச்சுக்கிட்டுப் போகனும்? சனங்க போட்ட கூச்சலிலே பருந்து கோழிக் குஞ்சைக் கீழே போட்டுட்டது. பருந்து அடிச்ச போதே அந்தக் கோழிக் குஞ்சின் பிராணன் போயிடிச்சு. கீழே விழுந்த கோழிக் குஞ்சை எப்படி விருட்டென்னு பாய்ந்து மங்கி கையிலே தூக்கிக்கிட்டா?

அது ஒரே ரத்தக் களறியாக் கிடந்தது. மங்கியின் மஞ்சள் பூசின கையெல்லாம் இரத்தக்கறையாயிடிச்சு! அவள் விழிகளிலே கோத்து நின்றது முத்தா, நீரா? வெண்ணெய்க் கட்டி போன்ற மனசு மங்கியின் மனசு. அந்த நேரத்திலே நான் மட்டும் கடவுளா யிருந்தால் அந்தக் கோழிக் குஞ்சின் உசிரைத் திரும்பக் கொடுத்திருப்பேன். அவள் நின்ற நிலையை என்னாலே பார்க்கச் சகிக்கலே! ஆண்டவன் கண்ணை மூடிக்கிட்டானே, என்னவோ! அவனுக்கு இரக்கமே பிறக்கல்லே.

அவள் நிலை பார்க்கப் பரிதாபமாக இருந்தாலும் என் மங்கியின் அழகு இருக்கே, அதை என்னென்னிக்கும் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அந்த அழகைப் பார்க்கறதுக்கு இரண்டு கண்ணு பத்தாதுன்னு கூடத் தோணிச்சு!

அவளோட ஒடல் நிறம்! — எங்க சாதியிலே யாருக்குமே கிடையாது! என்ன நிறம், என்ன நிறம்!

—இப்ப இதெல்லாம் என்ன? சுற்றிலும் ஒரே களேபரமா யிருக்கே! கூடிக் கூடி யார் யாரோ என்ன என்னவோ பேசிக்கிட்டிருக்கிறாங்க போலிருக்கே!

''ஆமாம், என்னதான் நடந்தது?''

யாரோ ஆவலோடு கேட்கிறார்கள்.

ஆமாம், என்ன நடந்தது? எனக்கு மாத்திரம் என்ன தெரியும்? நினைச்சாலே என் மனசு பாகா உருகுது! நான் மூச்சூடும் மாடா உழைச்சிட்டு, 'போய்ச் சோறு தின்னூட்டு வாரேனுங்க!'ன்னு எசமான் கிட்டச் சொல்லிவிட்டு இங்கிருந்துதான் புறப்பட்டேன். அதுவும் எப்போ? நல்லாக் கொளுத்துற வெய்யிலிலே! தலையிலே துணியைப் போட்டுக்கிட்டு ஒரு மூச்சிலே சேரிக்கு ஓடினேன்! நான் போற போதே என்ன கொண்டாட்டம் அங்கே!

பந்தக்காலில் கத்தியிருந்த கமுகு ஓலையைப் பிய்ச்சுக் குழந்தைங்க ஊதல் பண்ணி சுர்க் குச்சியாலே பிரியாமல் குத்தி மேளம் வாசிச்சிக்கிட்டிருந்தாங்க. என்ன எக்காளம், என்ன கும்மாளம்! உச்சி வெய்யில் வறுத்துக்கிட்டிருந்தது! தெருவிலே ஒரே கொட்டு முழக்கமாயிருந்தது. தாலி கட்டற வேளை நெருங்கிக்கிட்டிருந்தது. அந்தப் பக்கம், இந்தப் பக்கம் பாராமலே நான் தெருவிலே நடந்து என் குடிசையை அடைந்தேன்.

வீட்டுக்குள்ளே நுழையற போதே மங்கியின் உரத்த குரல்தான் காதிலே பாய்ந்து வந்தது, கல்யாண வீட்டிலிருந்து.

ஒரு வாரமா, 'நீ அந்தக் கண்ணாலத்துக்குப் போகவே கூடாது'ன்னு படிச்சுப் படிச்சுச் சொன்னேன், கிளிப் பிள்ளையாட்டமா. எனக்கு நேரே 'சரி, சரி'ன்னு பெருமாள் மாடு மாதிரித் தலையாட்டினாள். நானும் நம்பிட்டேன். இப்ப என்னடான்னா, அந்தக் கல்யாணத்திலே அவள் குரல்தான் ஓங்கி ஒலிக்குது. சத்தம் போட்டு வேறு பாடிக்கிட்டிருக்கா!

என்ன குரல்! குயிலாட்டம்! எத்தனை அளகாப் பாடிக்கிட்டிருக்கா! அவ பாட்டுச் செவியை நிறைக்குதே! அட கடவுளே! இதென்னா இது! அவள் பாட்டைக் கேட்டுக்கிட்டு இந்தக் கிட்டுப் பயல் ஒதிய மரமாட்டம் நின்னுகிட்டிருக்கானே!

இவனுக்கு என்ன வேலை அங்கே?

எனக்கா? ஆவேசமா வந்தது!

அவள் பாட்டு, அவள் குரல்! கேட்கக் கேட்கக் கேட்டுக்கிட்டே இருக்கலாம் போல் இருக்குது. ஆனால் அங்கே போய் எப்படி நிற்கிறது? இந்தக் கிட்டுப் பய மட்டும் அசைஞ்சு கொடுக்காமல் நின்னுக்கிட்டிருக்கான்! இவனை என்ன செய்யறது! ஆகா! என்ன இனிமையாப் பாடறா!

''மாப்பிள்ளையாம் மாப்பிள்ளை!
முறுக்குமீசை மாப்பிள்ளை!''

அட! இப்போக்கூட அந்தப் பாட்டு என் காதிலே ஒலிச்சுக்கிட்டே இருக்கு! மங்கியின் குரல்! மயக்கும் குரல்!

அந்தப் பாட்டைக் காதிலே வாங்கிக்கிட்டேதான் நான் வீட்டுக்குள்ளே நுழைந்தேன்!

அவள் வீடு திரும்பியதும் 'சமுத்தி'யா நாலு வைப்போம்னு நெனைச்சேன்!

பசி வயிற்றைப் பிசைந்தது!

தலைத் துண்டை எடுத்து உதறிக்கொண்டே உள்ளே போனேன், பாரு!

சோறும் ஆக்கலே, கறியும் ஆக்கலே. பத்துப் பாத்திரங்களெல்லாம் போட்டது போட்டபடியே கிடந்தன. அடுப்பைப் பத்த வைக்கவே யில்லை அவள்.

நான் வெயில்லே வந்தேனா? கண்ணை இருட்டிக்கிட்டு வந்தது. நிலையே தப்பி விடும்போலாகி விட்டது.

வந்த கோபத்திலே இரண்டே எட்டில் வீட்டை விட்டு வெளியே வந்தேன்.

அப்போ என்னடான்னா, மங்கி 'கிளுகிளுகிளு'ன்னு சிரிச்சுக்கிட்டு ஓடோடியும் வந்து

பாக்டம்பாஸ்

(அம்மோனியம் பாஸ்பேட் 16-20)

தழைச் சத்து 16% (Nitrogen) மணிச் சத்து 20% (Phosphoric acid)
என்ற விகிதத்தில் அமைந்த ஒரு

அதிசய கூட்டு உரம்

FACT

யானை மார்க்

ஏன் பாக்டம்பாஸ் உபயோகிக்க வேண்டும்?

(1) "ஆல்வாய் அம்மோபாஸ்" என்ற "பாக்டம்பாஸ்" உரம் ஒரே உரத்தில் இரண்டு முக்கியமான தாவர உணவுகளான தழைச் சத்தையும் (Nitrogen) மணிச் சத்தையும் (P_2O_5) 16க்கு 20 என்ற விகிதத்தில் ஒருங்கே இணைத்து பயிர்களுக்கு கொடுப்பதால் இது எல்லாப பயிர்களுக்கும் மிக ஏற்ற உரமாகும்.

(2) நிலத்தில் இவ்வுரம் முழுவதும் தண்ணீரில் கரை படும் தன்மை உடையதால் (Completely water soluble) பயிருக்கு வேண்டிய உணவுச் சத்துக்களை உடனடியாகக் கொடுத்து பயிரை நல்ல பசுமையுடன் ஆரோக்கியமாக வளரச் செய்து மகசூலை அதிகப் படுத்துகிறது. பயிரைப பூச்சி பூஞ்சான் நோய்கள் அணுகாத வாறு பலமளிக்கிறது.

(3) 75 கிலோ அம்மோனியம் சல்பேட், 125 கிலோ சூப்பர் பாஸ்பேட் இரண்டும் சேர்ந்த கலவையான 200 கிலோ உரம் கொடுக்கும் தாவர சத்துக்களை 100 கிலோ "பாக்டம்பாஸ்" ஒன்றே அளிப்பதால இது ஒரு சிக்கனமான உரமாகும் மேலும் தழைச்சத்து மணிச்சத்து இரண்டின் பலன்களையும் இது கூட்டாக ஒரே சமயத்தில் அளிக்கிறது.

(4) குருணைகளாக இருப்பதால் சீராகத் தூவுவதற்கு மிக சுலபமாகவும், காற்றடிப் பதனால் சேதப்படாமலும் இருக்கிறது.

(5) ஒவ்வொரு சிறு குருணையிலும் பயிர்களை செழித்து வளரச் செய்யும் தாவரச்சத்தும், மணிச்சத்தும் அடங்கியிருக்கிறது ஆகையால் பயிரை நன்கு வளரச் செய்து மகசூலை அதிகரிக்கிறது.

(6) குருணைகள் ஈரப்பசையை ஈர்க்காமல் இருப்பதால் நீண்டகாலம் சேமித்து வைப்பினும் கெடாமலும் கட்டிகளாக ஆகாமலும் இருக்கிறது. குருணைகளுடன் கலப்படம் செய்யமுடியாது.

(7) கிருபண வயல்களிலும், பல விவசாயிகளின் நிலங்களிலும் "பாக்டம்பாஸ்" உபயோகப்படுத்தப்பட்டு நல்ல மகசூலை வழங்கி இருப்பது பிரசித்தம்.

(8) மானாவாரிப் பயிர்களுக்கும் "பாக்டம்பாஸ்" ஒரு சிறந்த அடியுரமாகும்.

இன்றே உங்கள் பயிர்களுக்கு பாக்டம்பாஸ் உபயோகித்து பலனடையுங்கள்

பாக்ட் ...யானை மார்க் உரங்கள்

பெர்டிலைசர்ஸ் அண்டு கெமிகல்ஸ் திருவிதாங்கூர் லிமிடெட்
பதிவு காரியாலயம்: ஏலூர், உத்யோகமண்டல், P. O. கேரள ராஜ்யம்
பிராந்திய அலுவலகம்: 2வது மாடி 19, கமாண்டர்-இன்-சீப் ரோடு, எழும்பூர், சென்னை-8



மண்டலக் காரியாலயங்கள்

B-13, காலனி ரோடு,
தில்லைநகர், திருச்சி-3

பென்ஹோம் காம்பவுண்டு
275, அவனாசி ரோடு,
கோயம்புத்தூர்-18

168-B, புதுக்கோட்டை ரோடு,
தஞ்சாவூர்

1, ஆக்ஸிலியம் காலேஜ் ரோடு,
காட்பாடி எக்ஸ்டன்ஷன் P. O.
வேலூர்-6 (வ. ஆற்காடு)

12-A, ஈஸ்ட் ஸ்ட்ரீட்
பெருமாள்புரம், திருநெல்வேலி-7

தொழில்
மந்த
தொழில்
நிலையை
சமாளிக்க
தொழில்
தொழில் நுட்ப
தேவைப்படுகிறது
தொழில்

எமது தொழிலிலும் மந்த நிலை கடுமையாகத்தான் இருக்கிறது. எவரும் மந்த நிலையை எப்படி சமாளித்து நிலைபெறச் செய்கிறது என்று கவலைப்படலாம். ஆனால் இண்டியன் ஆக்ஸிஜன் ஸ்தாபனத்தில் அப்படி ஓய்ந்துவிடுவது பழக்கமில்லை. தொழிலில் மந்த நிலை என்றாலே அதை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு விடுவோம். நாங்கள் இந்நிலையை சமாளிக்கும் முறைகள் சிலவற்றைக் குறிப்பிடுவோம்.

உதாரணமாக எமது மார்க்கெடிங் பிரிவில் தென்கிழக்கு மற்றும் மேற்கு ஆசிய நாடுகளிலும் ஆப்ரிக்காவிலும் ஏற்றுமதி செய்வதை மேன்மேலும் அதிகரிக்க ஆராய்ச்சியை தொடர்ந்து நடத்தி வருகிறோம்.

எமது என்ஜினியர்களும் விஞ்ஞானிகளும் விரிவான ஆராய்ச்சியின் மூலம் சிறப்புமிக்க அநேக புதிய தயாரிப்புகளை உருவாக்கி அந்நிய செலாவணியை நிறைய சேமிக்க முயற்சித்து வருகிறார்கள். சென்ற ஆண்டில் மட்டுமே இறக்குமதி செய்யப்படவேண்டிய அநேக பொருள்களை இங்கேயே உற்பத்தி செய்து ரூ. 36 லட்சத்திற்கு அதிகமான அந்நிய செலாவணியை மிச்சமாக்கியிருக்கிறோம். தொழில் துறைகளுக்காக இந்நாட்டு மூலப் பொருள்களைக் கொண்டே இண்டியன் ஆக்ஸிஜன் முதன் முறையாகத் தயாரித்து வழங்கிய புத்தம் புதிய தயாரிப்பு வெல்டிங் வேலைக்குரிய இண்டார்க் ஐஆர் 300 செலேனியம் ரெக்டிபையர் செட், இண்டார்க் ஸப்மர்ஜ்ட் ஆர்க் வெல்டிங் வயர் மற்றும் ப்ளூனார்க்/ஸிஓ2 ஆட்டோமாடிக் ஆர்க் வெல்டிங் வேலைக்கான தொடர்ச்சியான கம்பி போன்ற எலக்ட்ரோடு முதலியவை.

இந்தியத் தொழில்களின் உற்பத்தியை அதிகரிக்கவும், தயாரிப்பு நுட்பங்களை அபிவிருத்தி செய்யவும் சிறப்பாக உதவும் வகையில் ஆக்ஸிஜன், நைட்ரோஜன் மற்றும் இதர வாயுக்களுக்கு புதிய உபயோக முறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இன்னும் அநேக துறைகளில் புதிய சிருஷ்டிகள் தொழில் திறமையை விருத்தி செய்து, தொழில் மந்தத்தின் விளைவுகளை ஜயிக்க உதவுகின்றன.

இந்தியப் பொருளாதாரத்திற்கு சேவை புரிவதில் அநேக மார்க்கங்கள் தொடர்ந்து கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. இண்டியன் ஆக்ஸிஜன் தன்னுடைய எதிர்கால வளர்ச்சியில் மட்டுமின்றி நாட்டின் எதிர்கால மேன்மையிலும் நம்பிக்கை வைத்திருக்கின்றது.

IOL இண்டியன் ஆக்ஸிஜன் லிமிடெட்

கிட்டிருந்தா: கிட்டுப் பயலும் கடகட வெனச் சிரிச்சுக்கிட்டு அவன் பின்னுடியே ஓடி வந்துண்டிருந்தான். மார்பு நிறை யச் சந்தனம் பூசியிருந்தான். சந்தனத்தி லேயே குளிச்சு வந்தவன் மாதிரி இருந் தது. எங்க சாதியிலே முறைப் பெண்ணுக முறைப் பையன்கள்மீது மஞ்ச நீரை ஊத்தித் தெப்பலா நனைச்சுடுவதுண்டு. இவனுக்கு எந்த முறைப் பெண்ணு...?

மங்கி ஓடிவர, கிட்டு ஓடிவர...

அந்தக் காட்சியைக் கண்ட நான் என் நிலை மறந்தேன். எனக்குக் கண்களை இருட்டிக் கிட்டு வந்தது. சொல்லப் போனால் எனக்குப் பித்துப் பிடிச்ச மாதிரி ஆயிடுச்சு. பக்கத் திலே வரட்டும்னு காத்துக்கிட்டிருந்தா, கையாலேயே நாலு சாத்தியிருக்கலாம்.

அத்தனைக்குப் பொறுமை இல்லை எனக்கு. வந்த கோபம் வளர்ந்ததே ஒழியத் தணிய வில்லை. கையிலே பூண் போட்ட தடி வச் சிருந்தேன். குறி வச்சுப் பலம் கொண்ட மட்டும் சுழற்றி அவன் மீது வீசினேன்.

அவ்வளவுதான்!

கண் கொட்டுகிற நேரத்துக்குள்ளே அந்தத் தடி எந்த உயிர் நிலையில் பட்டதோ, அப் படியே அடியற்ற மரமாகச் சாய்ந்துவிட் டான் மங்கி.

நான் ஓடினேன் அவள் கிட்ட. என் கண் ணுக்கு அலங்கோலமாக விழுந்து கிடந்த மங்கி தெரிந்தாள். அவள் கைகள் என் காலைப் பற்றுகிறாற்போல நீண்டு கிடந்தன. மூடிய கரம் விரிந்திருந்தது. உள்ளங் கையிலே மஞ்சள் அரிசி! ஆம், சோபன அட்சதை! கீழெல்லாம் கூட அது சிதறிக் கிடந்தது. கையெல்லாம் ஆரத்தி நீர் — செக்கச் சிவக்க! அதில் ஊறிக் கிடந்தது மஞ்சள் அரிசி!

அரிசியைத் தூவிக் கண்ணாலம் கட்டிக் கொண்டவங்களுக்கு ஆசி சொல்வதற்கு முன்பே கல்யாணச் சந்தடியிலே இந்தக் கிட் டுப் பயல் அவளைத் தூக்கிக்கிட்டு வந் திருக்கிறான்; இவ ஓடி வந்திருக்கா.

ஐயோ! பேச்சு மூச்சில்லாமல் என் மங்கி இப்படி வெய்யிலில் மயங்கிக் கிடக்காளே!

எப்படி வெய்யில் காயுது! மங்கி மேலே! நிழலுக்கு எதையாச்சும் எடுத்துப் போர்த்த லாம்னு எழுந்திருக்கவே முடியலையே!

எத்தனை தரம் சொல்லியிருக்கேன் நான் அவகிட்ட: "நீ முன்னாடி இறந்துட்டியானா, அப்பாலே என்னாலே ஒரு நிமிடம் கூட உயி ரோடு இருக்க முடியாது குட்டி! உன்னை மஞ் சக் குங்குமத்தோடு அனுப்பிச்சுட்டா, நான் குளமோ குட்டையோ பார்த்துக்குவேன்."

அப்படிச் சொன்னேனே ஒழிய அவளோட இப்போ போகக்கூட முடியாதே, கடவுளே!

கடவுளே! என் மங்கி எப்படித்தான் தனி யாப் போவாளோ! — சாதிக்காரங்க எடுத் துக்கிட்டுப் போவாங்களா? — அவள் புருஷன்- நான் குத்துக்கல்லாட்டம் இருக்கேன்! நான் இல்லாமே அவள் போய்க்கிட்டிருக் காளே! நெனைச்சா நெஞ்சு துடிக்குதே!

அந்தக் கிட்டுப் பய எல்லாத்தையும் தான் கவனிச்சிக்கிறதாச் சொன்னான்... சொன்னாப் போலே கடைசியிலே அவனே பார்த்துக் கொள்ளும்படியா ஆயிடுச்சே! என் மங்கியை வழியனுப்பக்கூட அவன்தானா?



இதென்ன தலையெழுத்தடா கடவுளே! ஆமாம், அந்தக் கிட்டுப் பய எங்கே? அவன் மறுபடியும் மங்கி கிட்டவே போயிட்டான் போலிருக்கே!

மங்கியின் மூச்சு ஒடுங்கியதும், 'எல்லாம் நான் பார்த்துக்கிறேன்டா'ன்னுனே!

மங்கி அடிபட்டு விழுந்தாளோ இல்லையோ, எல்லோரும் என்னைச் சுத்திச் சூழ்ந்துக்கிட்டாங்க. கண் இருண்டு கீழே விழுந்திடுவேனுன்னுதோணிச்சு! ஒரே தாவாத் தாவிக் கிட்டுப் பயல் தோள் பட்டையைப் பிடிச்சுக்கிட்டான். 'வாடா! எசமான் கால்லே உன்னைக் கொண்டு தள்ளறேன். அவரு உன்னைக் காப்பாத்துவாருடான்னு சொன்னுன்!

'அவன் என்ன கொலை செய்யணும்னு நினைச்சான்? அவ தலையெழுத்து அப்படி முடிஞ்சுது!' — இப்படி யாரோ பேசிக்கிறாங்க.

அது யாரு? அட லட்சுமணய்யாவா? இன்னிக் காலையிலே இவருகிட்டத்தான் எசமான் சொல்லிக்கிட்டிருந்தாரு. 'எந்தக் கொலைகாரனும் என்னைத் தொட்டதும் கிடையாது; என்னோடுபேசினதும் கிடையாது'ன்னு! அவரு சொல்லி இன்னும் பொழுது சாயலே. நான் வந்து அவரு காலைக் கட்டிக்கிட்டேன்.

ஐயோ! அவருஎன்ன நினைச்சுக்கிட்டாரோ? என்னை எவ்வளவு இளப்பமா நினைச்சாரோ? நானு பெரிய பாவியாயிட்டேண்டா கடவுளே!

என்னைச் சுத்திக் கேட்டுக்கிட்டிருந்த பேச்சரவம் என்ன இப்படித் திடீர்னு நின்னு போச்சு! பேச்சுக் குரலே கேட்கலையே! அதோ, ஏதோ சன்னமான சத்தம் வருதே! என்ன சத்தம்! எப்பவோ கேட்ட மாதிரி கூட இருக்குதே!

மெட்டி! எசமானியம்மா காலிலே போட்டிருக்கும் மெட்டி! என் கண்ணெதிரே மஞ்சள் பூசிய இரண்டு கால்கள் வந்து நிற்கின்றனவே!

'உனக்கு ஒன்னும் பயமில்லேடா, சத்தியம், பயப்படாதே! நாங்கள் எல்லாம் உன்னைக் காப்பாத்துவோம். தெரியாமல் செய்த பாவத்தைக் கடவுளே மன்னிப்பார்! அவர் மேலே பாரத்தைப் போடு; தைரியமாயிரு!''

எசமானியம்மாளின் சன்னக் குரல்! தலை தூக்க முடியலையே! அவங்க முகம் எனக்குத் தெரிய மாட்டேங்குதே! தலை தூக்கற காரியமா நான் செஞ்சது?

அதோ இன்னும் இரண்டு கால்கள்: யார் அது! பக்கத்திலே பக்கத்திலே வராப்பலே இருக்கே! காலும் கொஞ்சம் பெரிசாஇருக்கே. அம்மா காலுங்களுக்குப் பக்கத்திலே வந்து நிக்குதே! — எசமான்!

இந்த நாலு காலுகளுக்கும்தானே நானும் மங்கியும் மஞ்சள் உண்ட உடுத்தி ஒருவரோடு ஒருவர் முடி போட்டுக் கொண்டு வந்து முதன் முதலாகத் தண்டனிட்டு வணங்கினேம்!

இது நடந்து ஒராண்டு கூட முடியவில்லை.

''எலே! துரதிர்ஷ்டக்காரப் பயலே! முடிஞ்சவரையில் குறைஞ்ச தண்டனையாக் கொடுக்கும்படியாப் பார்த்துக்கிறேன். உன்னைத் தப்ப வைக்க முடியுமான்னும் பார்க்கிறேன். கோர்ட்டுச் செலவு ஆருமென்னு பார்க்கிறியா? அதுக்கும் நான் இருக்கேன், பார்த்துக்கிறேன். ஆண்டவன் ஒருவன் இருக்கான், அவனை நம்பு!''

பேசியது எசமான்?

'கடவுளை நெனைச்சுக்கோடா!' பெரியம்மா—எசமானுக்கு அம்மா — சொன்னுங்க. 'எந்த நேரத்திலே என்ன நடக்குமோ?' இதுவும் அவங்க குரல்தான்!

எல்லோருக்கும் என்மேல் எவ்வளவு இரக்கம்! உரக்கக் குரல் எழுப்பி அழுனும் போல் இருந்தது. ஆனால் தொண்டையை உருண்டையாக ஏதோ ஒன்று வந்து அடைத்தது? உருண்டை இல்லை; தாகம். அப்பா! நாக்குப் புரட்டிப் பேசவே வரமாட்டேன் என்கிறதே! தாகத்துக்குத் தண்ணீர் கேட்கலாம்னுக் கூடத் தொண்டை வரவில்லையே!

என் மங்கி! இனிமேல் என் மங்கின்னு சொல்ல எனக்கு வாய் ஏது?

'இந்தாடா. சத்தியம்! கடக் கடக் கஞ்சி! உப்புப் போட்டு நீர் மோர் கொண்டு வந்திருக்கேன். முதலில் அதைக் குடிடா. வெய்யில் களைப்புத் தீரும். ஒன்னும் பயம் இல்லேடா. உன் தலையிலே கடவுன் இப்படி எழுதினுன்!'

யார் குரல் இந்த வயசான குரல்! என் தலையை யாரோ நிமிர்த்திருங்களே! யாராயிருக்கும்? வயசான கைகள்! ஆயாவின் கையைப் போலத் தோணுதே. ஆமாம், பட்டம்மாதான்! எசமான் வீட்டு வேலைக்காரி! அந்தம்மாவுக்குத்தான் என்ன கனிவு, என் மேலே! என்னை ரொம்ப நல்லாக் கவனிச்சுக்கிட்டிருந்தாங்க! — அவுங்களுக்கு மங்கின்னுக்கூட உசிருதான்! வாயிலே ஊத்த வராங்க போலிருக்கே! வாயை வலியத் திறக்கறுங்களே! கஞ்சியை ஊத்திக்கிட்டிருக்காங்க! ஆனால் விழுங்க விழுங்க விழுங்க முடியலியே! எப்படி அடைக்குது தொண்டையை! என்ன வலி வலிக்குது!

'அம்மா!'

நல்ல புண்ணியவதி அந்தம்மா! அவங்க வயிற்றிலே பிறந்திருக்கனும்!

'அம்மா!' — வயிற்றிலே குளுகுளுன்னு இருக்குது.

என் மங்கி தனியா விழுந்து கிடக்கிறுளே! அவளை யாரு கவனிச்சுக்குவாங்க! — மெல்ல எழுந்து நாமதான் மங்கிகிட்டப் போயிட்டு வந்தா என்ன? — ஆமா — நான் நினைச்சபடி நானே அவளை வழியனுப்ப வேண்டாமா?

'ஐயோ! என்ன இவ்வளவு மயக்கமா வருது! தலையைச் சுமையாக் கனக்கிறதே! காதிலே இதென்ன, 'ஙொய்'ன்னு சத்தம்! சுற்றியும் ஒரே சத்தம்! இப்படியே கொஞ்சம் சாய்ஞ்சுக்கிறேன். கொஞ்ச நேரம்பொறுத்து மங்கிக்கிட்டப் போறேன். ஆனால் இருக்கிற இருப்பிலே நகரக்கூட முடியாது போலத் தோணுதே!'

என்ன அது!

'டக், டக்'னு சத்தம் கேட்குது! என்ன சத்தமாயிருக்கும் அது? எல்லோரும் எதுக்காக இப்படி ஊரைக் கூட்டிச் சத்தம் போடறுங்க?

''வழி விடுங்க, வழி விடுங்க!''


அப்பா! என்ன கத்துக் கத்தருங்கடா!

''வந்துட்டார்! இன்ஸ்பெக்டர் வந்துட்டார்!''

ஆ!.....

''எனக்காகவா? ஆமா, எனக்காகவேதான். என் மங்கியை விட்டுட்டு நான் போகனுமா? அட, கடவுளே!

தமிழில்: ரா. வீ.





உதிரும் கூந்தலினால்

கவலையடைகிறீர்களா?

இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்

தலை நிறைய ஆரோக்கியமான, செழிப்பான கூந்தல் இல்லையே என ஏங்கும் பல நபர்களில் நீங்களும் ஒருவராக இருக்கலாம். அதை எப்படி அடைவது என்பதை அறிந்தால் கஷ்டமே இல்லை. சரியான சாதனையினால் கூந்தல் பராமரிப்பில் தினசரி சிறிது கவனம் செலுத்தினால் மிக உபயோகமாக இருக்கும். மனத்தினால் நினைத்த மாத்திரம் நல்ல செழிப்பான, பளபளப்பான கூந்தல் வளராது. **எப்டோ (EPDO) உடனே உபயோகியுங்கள்.**

பம்பாயில் வியாபாரத் துறையில் பிரபலமானதும், உயர் ரக பண்டங்களைத் தயாரிப்பதில் விசேஷத் திறமையுள்ளவர்களான பாபுலர் டிரக்ஸ் கம்பெனியார் ஆயுர்வேத முறையில் **எப்டோர் (EPDO)** தயாரித்துள்ளார்கள். இதை உபயோகித்து திருப்தி அடைந்தவர்களிடமிருந்து தினசரி பலப்பல கடிதங்கள் இதை வெகுவாகப் பாராட்டி வருகின்றன.

எப்டோ (EPDO) திங்கற்றது. கூந்தல் வளர்ச்சிக்கு அவசியமான இயற்கையான மூலிகைகள், எண்ணெய்களால் தயாரிக்கப்பட்டது. கூந்தலின் வேர்களுக்கு அத்தியாவசியமான போஷாக்குகளை அளிக்கிறது. கூந்தல் உதிருதல், இளம் வயதில் ஏற்படும் நரை, கூந்தல் வாளிப்பாக வளராது இருத்தல் போன்ற குறைகளைப் போக்கச் சிறந்தது **எப்டோர்.**

நறுமணம் கமழும் **எப்டோவை இன்றே உபயோகிக்கத் தொடங்கி, ஒரு சில நாட்களிலேயே அதன் பலனை உணருங்கள்.** உங்கள் கூந்தலைப் பற்றிப் பெருமைப்படுவீர்கள். உங்களுக்கு நம்பிக்கை ஏற்பட கீழ்க்கண்டுள்ள **"திருப்தி ஏற்பட்டால் மட்டுமே பணம் செலுத்துங்கள்"** என்ற திட்டத்தினால் பயனடையுங்கள்.

ஒரு முழு சைஸ் **எப்டோ** ஹேர் ஆயில் பாட்டிலையும், அத்துடன் இலவச சாம்பிள் பாட்டிலையும் வி. பி. பி. மூலம் அனுப்பும்படி பெனிராம் சிமன்லால் & கம்பெனி, 308, பிரின்ஸஸ் தெரு, பம்பாய்-2 என்ற விலாசத்துக்கு எழுதவும். **இலவச சாம்பிள்** பாட்டில் சுமாராக 8 நாட்கள் உபயோகத்துக்கு வரும். முதலில் இலவச சாம்பிள் பாட்டிலை உபயோகித்து பூரண திருப்திஅடைந்தால், முழு சைஸ் பாட்டிலைத் திறந்து உபயோகிக்கவும். அப்படித் திருப்தி ஏற்படாவிடில் முழு சைஸ் **எப்டோ பாட்டிலைத் திறக்காமல்** திருப்பி அனுப்பி ரூ. 12ஐத் திரும்பப் பெறலாம்.

பம்பாயில் பெனிராம் சிமன்லால் அண்டு கோ. ஸ்தாபனத்தாரிடமிருந்து நேரில் ரூ. 12க்கு ஒரு முழு சைஸ் **எப்டோ** பாட்டிலை வாங்கலாம். இந்தியாவில் எந்தப் பகுதிக்கும் வி. பி. பி. மூலம் ஆர்டர்கள் ஏற்றுக் கொள்ளப்படும். விலை ரூ. 15. (எப்டோர் விலை ரூ. 12; பாக்கிங் தபால் செலவு ரூ. 3.)

ஸ்டாக்கிஸ்டுகள்

எப்டோவை உபயோகித்துப் பலன் கண்டவராயிருந்தால் நீங்கள் உள்ளூர் ஸ்டாக்கிஸ்டுகளிடமிருந்து வாங்கிக் கொள்ளலாம்; விலை: ரூ. 12. உள்நாட்டு வரி பிரத்தியேகம்.

சென்னை : தி ஸிமர்ஸ் கெமிகல் கார்ப்பொரேஷன் பிரைவேட் லிமிடெட், 2-81, லாயிட்ஸ் ரோடு.

மதுரை : ஆர். சி. ஸ்டோர்ஸ், 34, கிழக்கு சித்திரை வீதி

பெங்களூர்: தி பாபுலர் ஸ்டோர்ஸ், (Regd.) மல்லேஸ்வரம்.

ஹைதராபாத் : கத்தியவார் ஸ்டோர்ஸ், அபிட் ரோடு, ஹைதராபாத்.

சிக்கந்திராபாத் : கத்தியவார் ஸ்டோர்ஸ், எம். ஜி. ரோடு, சிக்கந்திராபாத்.

கோயமுத்தூர் : ஏ. நஞ்சப்பா அண் கோ., அவிநாசி ரோடு, கோயமுத்தூர்.

ஆத்தூர் (சேலம் ஜில்லா): சாமி மெடிகல் ஸ்டோர்ஸ், ஐ.ஆர்.சி. பில்டிங், ஆத்தூர்.

மங்களூர் : பென்ஸி மார்ட், கனரா ஜுவெல்லர்ஸ்எதிரில், ஜி.எச்.எஸ்.ரோடு,மங்களூர்.

மைசூர் : ஸ்ரீநிவாசா ஸ்டோர்ஸ், மைசூர்.


ஆலப்புழை (கேரளா): எம். ஜே. டிரேடிங் கார்ப்பொரேஷன், ஆலப்புழை.

எர்ணாகுளம்: ஹஸானி ஸ்டோர்ஸ், Wine & G. மர்ச்சன்ட்ஸ், பிராட்வே.

தபால் ஆர்டர்களை பெனிராம் சிமன்லால் & கோ., (Dept. K.) 308, பிரின்ஸஸ் தெரு, த.பெ.நெ.2190,பம்பாய்-2 அனுப்புவார்கள் பெனிராம் சிமன்லால் & கோ. மூலம் வாங்கப்படும் ஒரு முழு சைஸ் பாட்டிலுடன்தான் எப்டோ சாம்பிள் பாட்டில் அனுப்பப்படும்.

கடிதம் ஆங்கிலத்திலேயே எழுதவும்

நீலன் சிலைக்குச் சீட்டு



1857ல் ''சிப்பாய்க் கலகம்'' என்று அழைக்கப்பட்ட முதல் இந்திய சுதந்திரப் போரில் ஈவிரக்கமின்றி இந்தியர்களை உயிர்ப் பலி வாங்கியவன் கர்னல் நீல். இவன் சென்னை கவர்னர் தாமஸ் மன்ரோவினால் ஆதரிக்கப்பட்டவன். கண்ணில் கண்ட இந்தியர்களை யெல்லாம் தூக்கு மரத்தில் ஏற்றிக் கொன்ற 'புண்ணியத்'தைக் கட்டிக் கொண்டவன். சிப்பாய்க் கலகத்தை வெற்றிகரமாக இவன் செய்த உதவிக்குப் பிரதிபலனாக இவனுக்கு பிரிகேடியர் ஜெனரல் பட்டமும் பல விருதுகளும் அளிக்கப்பட்டன. காசியில் இவன் வெற்றிப் பவனி வரும்போது இரு பக்கங்களிலும் வரிசையாக இந்தியர்களின் சவங்கள் தோரணமாகத் தொங்க விடப்பட்டிருக்கும்படி உத்தரவிட்டவன். இவனுக்குச் சென்னையில் மவுண்ட்ரோடில் ஒரு சிலை. ஸ்பென்ஸர் கட்டிடத்துக்கு அருகில் முச்சந்தியில் இச்சிலை இருந்தது.

இச்சிலை 1860ல் ''பொதுஜன'' நிதியைக் கொண்டு இந்த இடத்தில் நிறுத்தப்பட்டது. இச்சிலையை வைப்பது இந்தியர்களுக்கே அவமானம் என்பதை அப்போது மக்கள் உணராமல் இருந்தது வெட்கப்பட வேண்டிய விஷயம். சென்னையிலிருந்து வடக்கே அனுப்பப்பட்ட காரணத்தால் இவனுக்குச் சென்னையில் சிலை வைக்க உத்தேசித்தார்கள் போலிருக்கிறது!

இச்சிலை பத்தடி உயரம். இதன் கீழ் உள்ள தகவல்கள்: ஜேம்ஸ் ஜார்ஜ் ஸ்மித் நீல், ராணியின் மெய்க்காப்பாளர்; மாபெரும் வீரன். லக்னோ போரில் 20 செப்டம்பர், 1857ல் மாண்டார்.

இந்தச் சிலை இருப்பதே ஒரு பெருத்த அவமானம் என்பது நாளடைவில்தான் உணரப்பட்டது. இச்சிலையைத் தகர்ப்பது என்ற முடிவு குறித்து 1927ல் காந்திஜி சென்னை வந்திருந்தபோது அனுமதி கோரப்பட்டது. ஆனால் அவர் சிலையைத் தகர்க்கக் கூடாது என்றும், அதன் மீது களி மண் உண்டைகளை வீசலாம் என்றும் யோசனை தெரிவித்தார். இது தீவிரமாக நடைபெற்றது. இதில் நீலின் மூக்கு உடைந்தது.

1937ல் ராஜாஜி அவர்களின் தலைமையில் மந்திரி சபை சென்னையில் அமைக்கப்பட்டபோது செய்யப்பட்ட முதல் வேலை இந்தச் சிலையைச் சென்னை மியூஸியத்துக்கு அனுப்பியதுதான். 1937 நவம்பர் மாதம் ஒரு நாள் விடியற்காலை இச்சிலை கோணியினால் மூடப்பட்டு மியூஸியம் அருகில் உள்ள ஒரு மரத்தடியில் கொண்டு வந்து சேர்க்கப்பட்டது. அப்போது சென்னை மியூஸியத்தின் அதிகாரியாக இருந்த டாக்டர் எப். எச். கிரேவ்லி இதை மியூஸியத்துக்குள் வைத்திருப்பதற்கு முதலில் ஆட்சேபித்தார். பின்னர் ஆயுதங்களைக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள ஓர் இருண்ட மூலையைப் போனால் போகிறதென்று ஒதுக்கினார். 'மதராஸ் கிளப்' இந்தச் சிலையைத் தங்களிடம் ஒப்படைக்கும்படியாகக் கேட்டதற்குச் சென்னை அரசாங்கம் இணங்கவில்லை.

நீல் மிகக் கொடுமையாகவே இந்தியர்களை நடத்தினார் என்பதை அப்போது கவர்னர் ஜெனரலாக இருந்த லார்ட் கானிங்கே ஒப்புக் கொண்டிருக்கிறார். ஏன்! நீல்கூட இதை மறுக்கவில்லை. ''என் நாட்டின் நன்மையை உத்தேசித்து நான் கடுமையாக நடந்து கொண்டேன்'' என்று நீல் குறிப்பிட்டிருக்கிறார்.

மவுண்ட்ரோட்டில் வெள்ளம்

சென்னை மவுண்ட் ரோட்டில் வெள்ளமா? அப்படித் தண்ணீர் ரோட்

டில் ஆறாகப் பாயக் கூவம் நதியில் தண்ணீர் ஏது?

கூவம் நதியில்தான் தண்ணீர் பெருக்கெடுத்துக் கரை புரண்டு பஸ் ஓடும் மவுண்ட்ரோட்டில் முழங்கால் அளவுக்குத் தண்ணீர் ஓடிற்று. இது ஏற்பட்டது 1943ம் ஆண்டு அக்டோபர் மாதம் 23ந் தேதி மாலை. கடல் தண்ணீர் உள் நோக்கிப் புகுந்ததும் கடுமழை பெய்ததும்தான் இதற்குக் காரணம்.

வெலிங்டன் டாக்கீஸ் அருகே தண்ணீர் மார்பளவு மட்டத்துக்கு இருந்தது. மின்சார சப்-ஸ்டேஷன் அருகில் உள்ள தர்கா தண்ணீரில் மூழ்கி விட்டது.

மின்சார நிலையம் பாதிக்கப்பட்டதால் அவ்வட்டாரத்தின் மின் விசை சப்ளை பாதிக்கப்பட்டு நான்கு நாட்களுக்கு ஒரே இருள் மயமாக இருந்தது.

இப்போது 'மாலை முரசு' உள்ள காரியாலயத்தில் அப்போது பிரபலமாக இருந்த 'பாரத தேவி' தமிழ் தினசரி காரியாலயம் இருந்தது. ஒரு வாரம் பத்திரிகை வேலை பாதிக்கப்பட்டது. அந்த ஒரு வாரமும் 'ஹிந்து' பத்திரிகைக் காரியாலயத்தில் பாரத தேவி அச்சிடப்பட்டது. வெலிங்டன் சினிமா ஒரு வாரம் மூடப்பட்டது.

மவுண்ட்ரோட் வெள்ளம் எப்படி நம்ப முடியாததோ, அதேபோல் மற்றொரு நம்ப முடியாத விஷயம் பச்சையப்ப முதலியார் காலத்தில் கூவம் நதியில் இறங்கி மக்கள் ஸ்நானம் செய்வார்களாம்!

— நந்தலால்

'மந்திரம் கால் மதி முக்கால்' என்பதை 'மாயா ஜால மன்னன்' என்று புகழப்படும் லால் அவர்களின் ஜால வித்தை சர்க்கஸ் காட்சிகளில் காண முடிந்தது. ஆமாம், திரு கே. லால் அவர்கள் தம் ஜால வித்தையை ஒரு சர்க்கஸ் ஆட்டத்தைப் போலத்தான் நடத்துகிறார். ஒளி அமைப்புகள், ஸ்லைடுகள், காட்சி ஜோடனைகள், ஆடை அலங்காரர்கள் ஆகியவற்றின் உதவியால் பார்ப்பவர்களைப் பல்வேறு சூழ்நிலைகளுக்குக் கொண்டு போய் விடுகிறார். 'மதி முக்கால்' என்ற நினைப்புடன் அவர் செய்யும் வித்தைகளுக்கு நம் மனத்துள் விளக்கம் கேட்டுப் பார்த்தாலும் எதுவும் விளங்குவதில்லை. அதுதானே வித்தை காட்டுபவர்களிடம் உள்ள விந்தையான திறமை!

இன்று உலகில் உள்ள மிகப் பிரபலமான நாலைந்து மாஜிக் நிபுணர்களில் ஒருவராக விளங்குபவர் திரு லால்.



எல்லா மந்திரவாதிகளும் காண்பிக்கும் வழக்கமான வித்தைகளைத் திரு லால் காட்டினாலும், தமக்கே உரியன என்று கூறும் சில அபாரமான நிகழ்ச்சிகளையும் வைத்துக் கொண்டிருக்கிறார்.

ஒரு பெண்ணைப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டிய பின் அந்தப் பெட்டியோடு அறை போன்ற அமைப்புள்ள மறைவுக்குள் போய்த் திரையை மூடிக் கொள்ளுகிறார். விநாடிகூட இல்லை. இமைக்கும் நேரத்தில் மூட்டைக்குள் இருந்த பெண் திரையை விலக்கிக் கொண்டு வெளியே வருகிறாள். பிறகு பெட்டியைத் திறந்து மூட்டையை அவிழ்க்க அதனுள் லால் இருக்கிறார். வித்தையிலும் வித்தை—வியக்காதவர்கள் இல்லை.

ஒரு பெண்ணை மின்சாரத்தால் இயங்கும் ரம்பம் கொண்டு இரண்டாக அறுத்து(!) இரு பாதியாகப் பிரித்துக் காட்டுதல், உடலை மெஸ்மரிஸத்தால் கட்டையாக்கி, ஆதாரம் ஏதுமின்றி அந்தரத்தில் நிற்க வைத்தல் போன்ற கண்கட்டு வித்தைகளெல்லாம் இவரது மாயா ஜால நிகழ்ச்சிக்குக் களை கட்ட உதவுகின்றன - இவருக்குப் புகழ் சேர்க்கின்றன.

பின்னணி இசை என்று தலைவேதனை உண்டாக்கும் பாண்டு வாத்திய சத்தத்தைக் குறைக்க வேண்டும். பபூன் போல இருவர் வந்து தமாஷ் என்று நேரத்தைக் கொலை செய்யும் காட்சிகளை நீக்க வேண்டும். இவற்றைச் செய்தால் லாலின் மாயா ஜால வேடிக்கையில் இன்னும் வேகமும் விறுவிறுப்பும் கூடும். மூன்று மணி நேரக் காட்சி இரண்டு மணியில் கச்சிதமாக அமையும்.

உங்கள் நீர்ப்பாசன தேவைக்கேற்ப

ஒவ்வொரு மேனன் டீசல் இன்ஜினும் சிறந்த முறையில் தயாரிக்கப்படுகின்றது. நீண்டகாலம் உழைப்பதற்காக உறுதியாக செய்யப்படுகின்றது. மேலும் குறைந்த விலையில் ஸ்பேர் சாமான்கள் கிடைப்பதால் மேனன் இன்ஜின்கள் எப்போதும் இயங்குகின்றன.

சுமார் ரூ. 3 விலையுள்ள ஒரு காலன் க்ரூட் ஆயில் கொண்டு 60,000 காலன் தண்ணீரைப் பாய்ச்சலாம்.

ஒரு 5 h.p. மேனன் இன்ஜினை சென்ட்ரிப்யூகல் பம்ப்புகளுடன் நேரிடையாக இணைக்க முடியும். 6 h.p. மேனன் இன்ஜினைக் கொண்டு கரும்பு பிழியும் எந்திரத்தை இயக்க முடியும். ஆகவே மேனன் டீசல் இன்ஜின்கள் உங்களுடைய விவசாயத்தில் பலவிதங்களில் வெற்றி கொடுக்க வல்லவை.


மேனன் இன்ஜின்கள்

தமிழக அரசாங்கத்தின்
அங்கீகாரம் பெற்றவை


மேனன் & மேனன்
விக்ரம் நகர் — கோலாபூர்

தமிழகம், கேரளாவுக்கு
ஏகபோக விநியோகஸ்தர்கள்:

ஆர்வீ & கம்பெனி
3, ஸலிவன் கார்டன் ரோடு, சென்னை-4
போன்: 88746 தந்தி: "ARVEECO"



5 H.P. 1500 RPM Diesel engine



6 H.P.-650 RPM Crude Oil engine

MM-105A-TL

அந்தப் பெரிய திடல் சில தினங்களுக்கு முன் ஒரு பொட்டல் நிலமாக இருந்தது. திடீரென்று ஒரு நாள் பலர் உள்ளே நுழைந்தார்கள். மளமள வென்று வேலைகள் தொடங்கின. இரண்டே நாட்களில் அங்கு மயன் சிருஷ்டித்ததுபோல் தென்னை ஓலைகளைக் கொண்டே பிரமாதமாக ஒரு சிங்கார மண்டபமும் பந்தலும் தோன்றின. எங்கு பார்த்தாலும் தோரணம், விதானம், மேற்கட்டு, மின்சாரக் குழல் விளக்குகள். எட்டடி உயரத்தில் ஒரு மேடையின் அலங்காரம் சிறப்புடன் அமைந்திருந்தது. இவ்வளவு அலங்கார ஏற்பாடுகளும் உலகம் உய்ய அவதரித்த இராமச்சந்திரமூர்த்தியின் கதையைக் கேட்க ஆஸ்திகர்கள் சிலர் எடுத்துக் கொண்ட உற்சாகமேயாகும்.

சொல்லும் செயலும்



இராம கதையைச் சொல்லப் போகிறவர் இராமச்சந்திரன் என்ற இளைஞர். சரஸ்வதி தேவியே நாவில் நடமாடுவதுபோல் ஆழ்ந்த அறிவு, பரந்த படிப்பு. வடமொழியில் வால்மீகி, தமிழில் கம்பன், மலையாளத்தில் எழுத்தச்சன், இந்தியில் துளசி என்று பல பாஷைகளிலிருந்தும் இராமாயணத்தை எடுத்துச் சொல்லும் ஆற்றல் மிக்கவர்; செவிக்கு இனிமையாகப் பாடவும் செய்வார். இப்படி ஓர் இளம் மேதையின் சொற்பொழிவைக் கேட்கக் கூட்டம் கூடுவதில் அதிசயமில்லையே ! ராமாயணப் பிரவசனம் தொடங்கிச் சில தினங்களுக்குள் ஊரெங்குமே இதைப் பற்றிப் பேச்சு ; கதை கேட்க வருபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வந்தது. ஒரே திருவிழாக் கோலம் தான்.

இந்த உபன்னியாசத்தை ஏற்படுத்திய குழுவில் பல பெரிய மனிதர்களோடு சில பெரிய குடும்பத்துப் பெண்மணிகளும் உறுப்பினர்களாக இருந்தார்கள். அவர்களில் ஒருவரான பூமா அம்மையார் பரம பக்தை, கூடச் செல்வமும் இருந்தது. அவருக்கு ஒரே மகள் ஜானகி. தாயாருக்குக் கலைகளில் எவ்வளவு உற்சாகமோ அதுபோல் பல மடங்கு பெண்ணுக்கும் இருந்தது. அருமை மகளை அன்புடன் வளர்த்த தாயார், பெண்ணுக்கு அறிவுச் செல்வத்தையும் கொடுத்து வந்தார். பார்க்க அழகாக இருக்கும் ஜானகி தன் பத்தொன்பதாவது வயதில் கலாசாலையில் பி. ஏ. படித்துக் கொண்டிருந்தாள். அவளிடம் ஒரு துடிப்பும், உற்சாகமும், தைரியமும் எப்பொழுதும் பொங்கி வழிந்து கொண்டிருக்கும். இராமச்சந்திரனது இராமாயணப் பிரவசனத்தை ஏற்படுத்தக் காரணமாக இருந்தவளே அவள்தான்.

எப்பொழுதும் சுறுசுறுப்புடன் ஓடி ஆடி வேலை செய்யும் ஜானகி, உபன்னியாசம் தொடங்குமுன் தினமும் செய்யும் வேலை மேடைமீது அழகாக அலங்காரம் செய்து, ராமர் படத்துக்குப் பூச்சூடி, பக்கத்தில் ஊதுவத்திகள் கொளுத்தி வைத்து, ஒரு பிளாஸ்கில் சுண்டக் காய்ச்சிய பாலில் கற்கண்டு குங்குமப்பூ சேர்த்து, ஒரு பக்கமாக வைத்து இப்படிப் பல சில்லறைக் காரியங்களையும் கவனித்துக் கொள்ளுவாள். உபந்நியாசம் முடியச் சில நிமிஷங்களுக்கு முன்னால் அவளும் பல ஆண் பெண்களுடன் தட்டு எடுக்கக் கிளம்பி விடுவாள். அவள் எடுக்கும் தட்டில் நோட்டுக்களும் சில்லறைகளும் நிரம்பி வழியும். இப்படி ஜானகி ஒரு நாள் தட்டு எடுத்து வரும்பொழுது பந்தலின் ஓர் ஓரத்தில் கம்பத்தின்மீது சாய்ந்து கொண்டு உட்கார்ந்திருந்த பெரியவரின் அருகில் வந்தாள்.

வயதானவர், கண்களில் பளபளவென்ற ஒளி, வெண் தாடி, மீசை, நெற்றியில் திருமண். மேலே ஒரு காவி அங்கவஸ்திரத்தைப் போர்த்திக் கொண்டிருந்தார். பரம ஏழை போல் தோற்றம். அவர் எதிரே தட்டுடன் ஜானகி நின்றபோது அவர் செய்த காரியம் அவளை ஒரு கணம் துணுக்குறச் செய்தது. அவரை ஏற இறங்கப் பார்த்து விட்டு மெள்ள நகர்ந்து விட்டான். ஒன்றும் சொல்லவில்லை. அவர் செய்த காரியத்துக்குக் கோபிக்கத் தோன்றவில்லை. கருணை காட்டுவது ஜானகியின் சுபாவம். அடுத்த நாள், அதற்கு மறு நாள், இப்படியேதான். அவர் செய்த காரியம் இதுதான். பக்தர்கள் பலர் தட்டில் காசு போடுவார்கள், ஆனால் இந்த மனிதர் அதிலிருந்து ஒருவருக்கும் தெரியாமல் ஏதோ போடுவது போல் பாவனை செய்து லாகவமாக ஒரு ரூபாயை மட்டும் கைக்குள் அடக்கிக் கொண்டு விடுவார். அதற்குமேல் எடுப்பதில்லை. ஒரு பெரியவர் இப்படி ஒரு காரியத்தை ஏன் செய்ய வேண்டும் என்று யோசித்தான். இதனால் வரும் ஒரு நஷ்டத்தை ஈடு செய்வதுபோல் கடைசியில் ஒரு ரூபாயைத் தன் கையிலிருந்து போட்டு விடுவாள் ஜானகி. ஆனால் அவள் மனத்தில் மட்டும் இது பற்றிய ஒரு சுமை இருந்து கொண்டிருந்தது.

ஜானகியின் மனக் குழப்பத்துக்குத் தெளிவு ஏற்படும் வகையில் சில காரியங்கள் நடந்தன. இராமச்சந்திரனும், ஜானகியும் சந்தித்துப் பொதுவாகப் பல விஷயங்களைப் பற்றிப் பேசுவார்கள். இதற்காக ஜானகி காலை வேளைகளில் பாகவதர் தங்கியிருக்கும் விடுதிக்குத் தன் காரில் சென்று பேசி வருவாள். ஒரு நாள் அப்படி அவரைப் பார்க்கச் சென்றிருந்தபோது அறைக் கதவு சாத்தியிருந்தது. உள்ளேயிருந்து பேச்சுச் சத்தம் கொஞ்சம் பலமாகவே வெளிவந்தது. கதவைத் தள்ளித் திறக்கப் போனவள் சிறிது தயங்கி நின்றான். ''இங்கேயும் வந்துவிட்டீரா ? உம் மகளுக்கும் உமது பேரனுக்கும் நீர் சொல்லி நான் செய்ய வேண்டும் என்பதில்லை. என் கடமை எனக்குத் தெரியும். தயவுசெய்து இங்கிருந்து போய் வாருங்கள்'' என்று இராமச்சந்திரன் கூறுவது காதில் விழுந்தது. கதவு திறக்கப்படும் ஓசை கேட்டுச் 'சடக்'கென்று ஒரு பக்கமாக ஒருவர் கண்ணிலும் படாமல் ஒதுங்கிக் கொண்டாள் ஜானகி. கதவு திறந்து கொண்டது. வெளியே வரும் உருவத்தைக் கண்ட ஜானகிக்கு ஒரு கணம் ஒன்றும் விளங்கவில்லை. அந்த உருவம் அவள் தினமும் பந்தலில் பார்க்கும் பெரியவருடையதுதான். இவருக்குப் பாகவதரிடம் என்ன வேலை? பாகவதருக்கும் இவருக்கும் என்ன சம்பந்தம்? ஏதோ மகள், பேரன் என்று பேச்சுக்கள் வேறு அடிபட்டனவே என்று குழம்பினான். அவளுக்கு அங்கு நிற்கப் பிடிக்கவில்லை. வந்த சுவடு தெரியாமல் வெளியே வந்து தன் காரில் உட்கார்ந்து கொண்டான். கார் புறப்பட்டது. கொஞ்ச தூரம் சென்றதும் அந்தப் பெரியவர் வேகமாய்ப் போய்க் கொண்டிருந்ததைக் கண்டான். உடனே அவள் மனத்தில் ஓர் எண்ணம் - அதைச் செயலாக்கத் துணிந்தான்.

அவர் யார், எங்கு போகிறார், இளம் கலைஞரைக் கண்டு என்ன பேசிவிட்டுப் போகிறார் என்றறிய அவள் உள்ளம் துடித்தது. சிறிது நேரம் சென்ற பிறகு காரை மெதுவாகச் செலுத்திக் கொண்டு பெரியவரைத் தொடர்ந்தான். அப்பெரியவரும் சில தெருக்களைக் கடந்து, ஒரு குப்பத்தினுள் நுழைந்தார். அங்கு அநேக குடிசைகளைக் கடந்து ஒரு குடிசையின் அருகில் போனதும் அவரை ஒருவன் சந்தித்தான். ''என்ன ஐயரே ! போ உள்ளே! பொண்ணு உனக்காகக் காத்துக் கிட்டிருக்கு'' என்று கூறிவிட்டுச் சென்றான். அவர் தலையை ஆட்டிக் கொண்டே நகர்ந்தார். இதைக் கண்ட ஜானகிக்கு ஒன்றும் புரியவில்லை. மெதுவாகக் காரை விட்டிறங்கி அவர் போன குடிசை வாயிலை அடைந்து தலையை உள்ளே நீட்டினான். அங்கே அவள் கண்ட காட்சி ! ஒரு பெண், பார்ப்பதற்குக் கடைந்தெடுத்த தந்தப் பதுமை போல் அழகுச் சிலையாக இருந்தாள். துடைத்து விட்ட ஒரு குத்து விளக்குபோல் மேலே ஒரு நகைகூட இல்லை, நெற்றியில் பளிச்சென்று குங்குமம் துலங்கியது. தரையில் ஓர் ஓலைத் தடுக்கின் மேல் ஒரு குழந்தை, தாயைப் போலவே நிறமும், அழகும், அகன்ற கண்களும், இரு கைகளையும் தன் சிறிய வாயில் அடைத்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது.

''அப்பா! அவர் என்ன சொன்னார் ?'' என்று கேட்டாள் அந்தப் பெண்.

''சொன்னார். 'கொஞ்சம் பொறுங்கள். என்னால் முடிந்ததை அவசியம் செய்கிறேன்' என்றார். என்ன செய்யப் போகிறாரோ பார்ப்போம் !'' என்று கூறினார் பெரியவர்.

இந்தக் காட்சியைக் கண்டு, சம்பாஷணையையும் கேட்ட ஜானகிக்குத் தீயை மிதித்தது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. வேகமாகக் காருக்கு வந்து அமர்ந்து அதைக் கிளப்பிக்கொண்டு படுவேகமாகச் செலுத்திய படி தன் வீட்டை அடைந்தாள். அவளுக்கு ஒரே அலுப்பு. ஆயாசத்துடன் தன் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள். தன் படுக்கையில் குப்புற விழுந்து அழுதாள்.

அன்றைய காலக்ஷேபம் ஆரம்பிக்கும் சமயம் நெருங்கியும் தன் மகள் எப்பொழுதும் காட்டும் சிரத்தையைக் காண்பிக்கவில்லையே என்று ஜானகியின் தாயார் மகளின் அறைக்குச் சென்றாள். ''என்ன ஜானகி! கதை கேட்கப் போகத் துடிப்பாயே! என்ன இன்னிக்கு மசமசன்னு உற்சாகமே இல்லாமல் இருக்கே ! இன்று 'விபீஷண சரணாகதி' கேட்க ரொம்ப நன்றாக இருக்குமாமே ! சரணாகதி தத்துவம் நன்றாகச் சொல்வாராம். கிளம்பவில்லையா ?'' என்று மூச்சு விடாமல் பெண்ணின் முகத்தை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டே கேட்டாள்.

மகளோ, ''அம்மா! எனக்குக் கொஞ்சம் தலை வலிக்கிறது. நீ முன்னால் போ. நான் சிறிது நேரம் கழித்து வருகிறேன்'' என்று கூறவும் ஒன்றும் புரியாத அந்தத் தாய், ''சரி'' என்று மட்டும் கூறிவிட்டுப் போய்

விட்டாள்: ஆனால் மனத்தில் ஒரு அதிருப்தி ஏற்பட்டது. அது பற்றியே சிந்தனை ஓடியது.

இன்று இலங்கைவேந்தன் சகோதரன் வீடணன் உற்றார் உறவினரைத் துறந்து கருமாணிக்கத்தின் காலில் விழுந்து சரணடைந்து உறவு கொண்டாடும் கட்டம். கேட்க வேண்டிய விஷயம். ஆனால் அதைக் கூறப் போகிறவர் இன்று ஏனோ அதைக் கூற அருகதை அற்றவராகத் தோன்றினார். சொல்லும் செயலும் மாறுபட்டு விளங்குவதுபோல் இருந்தது. எவ்வளவு நேரம்தான் சிலைபோல் உட்கார்ந்திருந்தாளோ தெரியாது. திடீரென்று எழுந்தாள் ஜானகி. காரை எடுத்துக் கொண்டு கதாமண்டபத்துக்குக் கிளம்பினாள். கும்பல் பந்தலையும் தாண்டி வெளியே பொங்கி வழிந்தது. அவள் கண்களை ஓட விட்டாள். வழக்கமாக அதே இடத்தில் கம்பத்தில் சாய்ந்து கொண்டு அந்தப் பெரியவர் பாதி கண் மூடியாய் உட்கார்ந்திருந்தார். பாகவதரோ தம் கருமமே கண்ணாகக் கும்பலை ஒரு மந்திரத்தால் கட்டி வைப்பது போல் வால்மீகி, கம்பன் தியாகையர் என்று பொழிந்து தள்ளிக் கொண்டிருந்தார். கூட்டத்தில் முண்டியடித்துக் கொண்டு ஜானகி தன் வழக்கமான இடத்தில் அமர்ந்து தலை நிமிர்ந்தாள். கையில் சிப்ளாக் கட்டையைத் தட்டிக் கொண்டே பாடியவர், அவளைப் பார்த்துத் தலையசைத்துவிட்டுச் சிறு புன்முறுவல் செய்ததைக் காணத் தவறவில்லை ஜானகி.

கதை முடிந்தது. தட்டெடுத்தார்கள், கும்பலும் கலைந்தது. வழக்கமாக ஜானகி பாகவதரிடம் அன்றைய சொற்பொழிவைப் பற்றி அபிப்பிராயம் கூறுவாள். இன்று ஒன்றுமே கூறாமல் தனியாக நின்றாள். அவளருகில் இராமச்சந்திரன் வந்து, ''என்ன ஜானகி ! இன்று கதை உனக்கு ரசிக்கவில்லை போலிருக்கிறது. உன் பாராட்டு எனக்குக் கிடைக்கவில்லையே!'' என்று கேட்டார்.

''அப்படி ஒன்றுமில்லையே! என் பாராட்டு என்ன பெரிய விஷயமா ? சகலமும் தெரிந்த பெரியவரான உங்களைத் தினமும் புகழ்ந்தால் நீங்கள் ரசிப்பீர்களா ?''

''என்னம்மா ! இன்று உன் பேச்சு சரியாக ஒலிக்கவில்லையே ! வழக்கமாகக் காலையில் வந்து என் சௌகரியங்களை விசாரித்து விட்டுப் போவாய். இன்றும் உன் கார் என் ஜாகைக்கு வந்த சத்தம் கேட்டது. ஆனால் ஆளைக் காணோம்.''

பதில் சொல்லாமல் நின்றாள் ஜானகி.

''ஏன் பதில் பேசமாட்டேன் என்கிறாய்? மனத்தில் ஏதாவது தோன்றினால் அதைப் பளிச்சென்று கேட்டுவிட வேண்டும். சந்தேகத்துக்கே இடம் கொடுக்கக் கூடாது. நான் சொல்வது புரிந்ததா ஜானகி? நீ இன்று இருப்பது போல் என்றுமே இருந்திருந்தால் நான் கவலைப்பட்டிருக்கமாட்டேன். ஆனால் இவ்வளவு நாட்களாக நீ எடுத்துக் கொண்ட உற்சாகம், சிரத்தை, என்னிடம் காட்டிய பரிவு எல்லாம் திடீரென்று நின்று விட்டால் அதுவும் என் பரம ரசிகை, பராமுகமாக இருக்கிறாள் என்றால் மனத்துக்கு வருத்தமாக இருக்கிறது. நீ



''ரொம்ப 'போர்' அடிக்கிறது. எங்கே யாச்சும் போகலாமா?''

''அடுத்த வாரம் அப்பா உலகச் சுற்றுப் பிரயாணம் போறார். நீங்களும் போறீங்களா?''

''அது வேண்டாம்மா! வேறு எங்கேயாவது போகலாம்மா!''

வழக்கம்போல் விடுதியில் என்னை வந்து காலையில் பாரேன்'' என்று கூறிவிட்டு அகன்றார்.

'அட ! உளநூல் அறிந்தவர்போல் நம் மனப் போக்கைச் சில மணி நேரத்தில் கண்டு கொண்டு விட்டாரே. நாம் இவரைப் பற்றி ஏதாவது தப்பபிப்பிராயம் கொண்டுவிட்டோமோ?' என்று எண்ணியபடி வீடு சென்ற ஜானகி அடுத்த நாளை ஆவலுடன் நோக்கி இருந்தாள்.

அடுத்த நாள் காரை எடுத்துக்கொண்டு வேண்டாவெறுப்பாகப் பாகவதர் இருப்பிடம் சென்றாள் ஜானகி. அவரும் ஜானகி வருகைக்காகக் காத்திருந்தார். அவள் வந்ததும், ''ஜானகி ! எங்கே நீ வராமல் இருந்து விடுவாயோ என்று எண்ணி இருந்தேன். வந்து விட்டாய். நான் சில விஷயங்கள் உனக்கு மட்டும்தான் சொல்லப் போகிறேன். அதைக் கேட்டுவிட்டு வெறுப்போ, விருப்போ கொள்வது உன் இஷ்டம்'' என்று சொல்லி விட்டு ஆரம்பித்தார் இராமச்சந்திரன்.

''ஜானகி ! ஒரு பணக்காரத் தகப்பனுக்கு இரண்டு பிள்ளைகள். சிறு வயதிலேயே தாயை இழந்தவர்கள். தகப்பனார் எப்படியோ அவர்களைக் கஷ்டப்பட்டு வளர்த்து வந்தார். பணம் என்றும் நிலைத்து நிற்காதே. அது ஒரு நாள் அவர்களை விட்டுச் சென்று விட்டது. ஏழை ஆனதும், மனம் கலங்காமல் மானத்துடன் வாழ ஆசைப்பட்டார்கள். பெரிய பிள்ளைக்கு இந்தக் காலத்துப் படிப்பு ஏறவில்லை, ஆனால் அவனுக்குக் கலைகளில் ஆர்வம் ஏற்பட்டது. அதுவும் தெய்வ வழிபாட்டில் ஈடுபாடு சென்றது. பலன் கதை சொல்லும் பாகவதர் ஆனான். சின்னவன் சேஷனோ ஒன்றிலுமே புத்தி செல்லாமல் சுற்றுவான். ஆள் அழகன்; பார்க்க நன்றாக இருப்பான். அவனை அடக்கி ஆள யாராலும் முடியவில்லை. அவனுக்கு ஒரு மமதை. எந்தப் பெண்ணும் அவனைக் கண்டு ஆசைப்பட்டுவிடுவாள் என்பதுதான். அதற்

கேற்றாற்போல் அவன் ஒரு பேதைப் பெண்ணின் மேல் கண் வைத்தான். அவளும் இவனை விரும்பினாள். ஆனால் தம்பி ஒரு கோழை. அவனுக்கு நிலையான வாழ்க்கை பிடிக்காது. அவன் ஒரு வண்டு. தேனைப் பல மரங்களிலிருந்து உறிஞ்சும் தன்மையுள்ளவன். ஓர் இக்கட்டான நிலைமை ஏற்பட்டுவிட்டது. பெண் தாயாகும் நிலை. மணமோ ஆகவில்லை. இது தெரிந்ததும் தம்பி பயந்தான், எடுத்தான் ஓட்டம். மறைந்தான். விஷயம் அம்பலத்துக்கு வந்தது. பிள்ளையின் தகப்பனார் மனமுடைந்து பிராணனை விட்டார். தனியாக விடப்பட்டான் தமையன். வழி செய்யும்படி கேட்டார்கள் அடிபட்டவர்கள். நியாயம் அங்கிருந்தது. தமையன் தன் கலையை ஓர் அநாதைக் குடும்பம் வாழ அர்ப்பணித்தான். தனக்கென்று வாழவில்லை. தம்பி செய்த பாவத்துக்காக ஊர் ஊராகச் சென்று கதை சொல்கிறான். வரும் பணத்தில் செலவு போக மிச்சம் வருவதை அப்படியே அந்தப் பேதைப் பெண்ணிடம் கொடுத்து அவள் வாழ, அவள் மகன் வாழப் பாடுபடுகிறான். இவ்வளவு நாட்களாகப் பணம் அதிகமாகச் சேரவில்லை. இனிமேல் செல்வம் நிறைய வரலாம் என்று எதிர்பார்க்கிறான். இது தமையன் செய்யும் ஒரு பெரிய தியாகமல்ல, ஒரு குடும்பம் வாழ, எடுத்துக் கொள்ளும் முயற்சி. குடும்பத்தில் தோட்ட வேலை செய்து இன்று ரிக்ஷா இழுக்கும் முனியனின் குடிசை அவர்களுக்கு அடைக்கலமாகக் கிடைத்தது. குகன்போல் குடும்பத்துக்கு உற்ற துணைவன் ஆனான். இதுதான் கதை. தம்பி நல்லவன்தான். ஒரு நாள் திருந்தித் திரும்பி வருவான் என்ற நம்பிக்கையுண்டு தமையனுக்கு.''

ஜானகியின் கண்களில் நீர் திரையிட்டது. எதிரே அந்தப் பால பாகவதர் மறைந்துவிட்டார். இரண்டு கண்ணீர்த் துளிகள் கீழே விழுந்தன. ''என்ன ஜானகி, நீ கண்ணீர் விடும்படி உன் மனத்தைப் புண்படுத்தி விட்டேனா ?''

''இல்லை. பரோபகாரி ஒருவரைத் தப்பாக எண்ணி விட்டோமே. தீர விசாரியாமல் ஒரு முடிவுக்கு வந்து விட்டோமே என்று வருந்துகிறேன்'' என்றாள் அவள்.

''உன் மேல் தப்பில்லை. சூழ்நிலை. இவை தானே ஒருவருடைய அபிப்பிராயத்தை உருவாக்குகின்றன? ரகுகுல திலகனே அப்படி அவதிப்பட்டிருக்கிறானே, நானெம்மாத்திரம்? ஒரு ரசிகையின் உள்ளத்திலுள்ள தப்பெண்ணத்தைப் போக்கிவிட்ட ஒரு திருப்தியுடன் நான் என் கதையை முடிக்கும் தறுவாயிலிருக்கிறேன். அப்போதும்.....''

''நான் ஒரு கேள்வி கேட்கிறேன். தயவு செய்து பதில் கூற முடியுமா ?''

''தைரியமாகக் கேளம்மா !''

'' அந்த அநாதைப் பெண்ணைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் அந்தத் தகப்பனாரை நீங்கள் முழுவதும் நம்புகிறீர்களா ? அவருக்குத் தம் பெண்ணின் நலனுக்காகப் பாடுபடும் ஒரு நல்ல எண்ணம் இருக்குமா ?''

''இது பற்றிச் சிந்திக்கவே யில்லையம்மா. அப்படி வேறுவிதமாக எண்ணலாமா ? ஒரு தகப்பன் மகளின் நலனில் எப்படி அக்கறை இல்லாமல் இருக்க முடியும் ?

''சந்தேகமில்லை. மனத்தில் தோன்றியது கேட்டேன்'' என்றவள் மனத்தில் தோன்றியது என்னவோ தட்டிலிருந்து ஒருவருக்கும் தெரியாமல் ஒரு ரூபாயை எடுக்கும் அந்த உருவம்தான்.

இராமாயண யக்ஞம் சம்பூர்ணமாகியது. பாகவதர் அவர் எடுத்துக் கொண்ட சங்கல்பத்தின்படி செலவு போக மீந்த கணிசமான ஒரு தொகையைக் கிழவனார் கையில் கொடுத்துவிட்டு அடுத்த ஊரை நாடிச் சென்றார். பந்தல் பிரிக்கப்பட்டது. பழையபடி அந்த மைதானம் ஒளி இழந்த பொட்டல் நிலமாகியது.

ஜானகி மட்டும் மனத்தில் ஒரு சஞ்சலத்துடன்தான் இருந்தாள். அதற்கேற்றாற்போல் ரிக்ஷாக்கார முனியனைச் சந்தித்துப் பேசிய போது அவள் சந்தேகம் ஊர்ஜிதமாயிற்று. சேஷனின் காதலி கமலி தன் குழந்தையுடன் குப்பத்தில் குடிசையில்தான் தங்கியிருக்கிறாள். தகப்பனார் ஒரு பெரிய சூதாடி. பெண்ணுக்கு வந்த பணப் பொதியைப் பெற்று இரண்டைப் பெருக்கி நான்காகச் செய்து தருவதாகப் பேதைப் பெண்ணிடம் சொல்லிவிட்டு அகவங்களின் மேல் வகுத்துப் போட்டுக் கைவிரல்களைக் கூட்டிக் கொண்டே பணத்தைக் கழித்துத் தொலைத்து விட்டு அண்ணன் காலக்ஷேபம் செய்யும் அடுத்த இடத்தைத் தேடிப் போய்விட்டாராம். இதைக் கேட்ட ஜானகிக்கு ஆச்சரியமே ஏற்படவில்லை. பேதைப் பெண்ணையும், அவள் குழந்தையையும் அந்த உத்தமத் தியாகியை உத்தேசித்து எப்படியாவது காப்பாற்றுவது என்ற ஒரு முடிவுக்கு வந்தாள். ''முனியா ! நீ இந்தத் தள்ளாத வயதில் ரிக்ஷா இழுத்து ஏன் கஷ்டப்படுகிறாய் ?''

''ஏனம்மா ! நான் வேறு என்ன வேலை செய்ய முடியும்? யாரு எனக்கு வேலை தருவாங்க?'' என்றான்.

''நான் ஒரு யோசனை சொல்கிறேன். கேட்பாயா? உனக்குத் தோட்ட வேலை தெரியுமாமே. எனக்கு ஒரு தோட்டக்காரன் தேவை. நீ இந்தக் குடிசையைக் காலி செய்துவிட்டு என் பங்களாக் காம்பௌண்டில் இருக்கும் சிறு வீட்டில் இருக்கலாம். சம்மதமா ?''.

''அம்மா ! உங்க மனசு தங்கமுங்க. நான் மட்டுமாறு வந்துடுவேன். நான் ஒரு சம்சாரி தாயே. எனக்கு ஒரு பொண்ணும், பேரனும் இருக்காங்க. அவங்களை விட்டு விட்டு எப்படியம்மா வருவேன் ?''

'அட ! இந்த முனியனுக்கு இருக்கும் கடமை உணர்ச்சி ஒரு பெற்ற அப்பனுக்கு இல்லையே ! என்ன ஆச்சரியம் ! தன் சொந்தப் பெண்ணாக ஓர் அநாதையைப் பாவிக்கும் மனமுள்ள இந்த முனியனல்லவா உண்மை மனிதன்' என்று வியந்தாள் ஜானகி ! ''முனியா! நீ உன் குடும்பத்தையும் அழைத்து வந்துவிடு. நீங்கள் எல்லாரும் சௌக்கியமாக இருக்கலாம்....'' என்று கூறிவிட்டு அவனுக்குச் செலவுக்குப் பணமும் கொடுத்துச் சென்றாள் ஜானகி.

சக்திக்கும் வலிமைக்கும் போர்ன்விடா!



சக்தியளிக்கும் போர்ன்விடா நாவினிமையிலே சிறந்ததோர் பானமாக விளங்குவதன் ரகசியம்—செழுமையான கோகோ!



வளமையின் சிறந்த பொருள்களான கோகோ, மால்ட் சர்க்கரை, பால் இவையாவும் திட்டமாக கலக்கப் பெற்று தயாரிக்கப்பட்டதன் பலன்—தென்பும் திடமும் தரும் ஒரு தீஞ்சுவை பானம் போர்ன்விடா. சூடான பாலிலே போர்ன் விடா கலந்து ஒரு கோப்பை அருந்துங்கள்...நாவுக்குத் தான் என்ன இனிமை, உடம்புக்குத்தான் என்ன வலிமை.

சக்திக்கும் வலிமைக்கும்—மற்றும் தீஞ்சுவைக்கும்

கேட்டிடுங்கள் போர்ன்விடா!


"உங்கள் குழந்தைக்குப் பிரத்தியேகமான பவுடர் தேவைப்படுகிறது —
கால்கேட்டே அந்த
நேர்த்தியான பவுடர்!"
கால்கேட் பேபிபவுடர் மிகவும் மென்மையானது. அதிகமாக வேர்வையை உறிஞ்சக்கூடியது. பட்டுப்போல் மிருதுவானது. அது குழந்தையின் இளம் சருமம் எரிச்சலடையாமல், நமைச்சலடையாமல் பாதுகாத்து குழந்தையை குளுமையுடன், சுகமாகவும், ஆனந்தத்துடனும் வைத்திருக்கும். உங்கள் குழந்தைக்கு இன்றே கால்கேட் பேபி பவுடரை வாங்குங்கள்!
COLGATE
Borated
BABY
POWDER
கால்கேட் பேபி பவுடர்
வாங்குங்கள்
— அதிக பவுடர்...
அதிக சிக்கனம்!

CBP.G.7 TAM





எப்படிக் கொடுப்போம்?

கோமதி நாகராஜன்

கையிலிருந்த பட்டியலை மேசைக்குள் வைத்துப் பூட்டிவிட்டு, சாமான்களை எடுத்து ஒழுங்காக அடுக்கி வைக்கத் திரும்பினுள் பானு. கைகளிலே இரண்டு நகைப்பெட்டிகளைச் சுமந்தபடி அவள் வரவுக்காக நின்று கொண்டிருந்த பத்மாவை வியப்புடன் நோக்கினுள்.

''அத்தை ! இந்த இரண்டு ஜோடிகளில் எந்த நெக்லேஸை நான் போட்டுக் கொள்வது ? மயில் டிஸைனைப் போட்டுக் கொள்ளட்டுமா?'' துருதுருவென ஆர்வம் மின்னிய அவள் கண்களை ஏறிட்டு நோக்காமலே பானு பதில் சொன்னுள். ''அது எனக்காகத் தேர்ந்தெடுத்து வைத்தது. • வேண்டுமானுல் பின்னுல் போட்டுக் கொள்ளேன். இந்த டிஸைனைப் பார். இதுதான் உன் கழுத்துக்குப் பொருத்தமானதாக இருக்கும். பத்மா, என்னுடையதை பீரோ அடித் தட்டில் வைத்துப் பூட்டிவிடு.'' சாவியை அவள் கையில் கொடுத்து விட்டு, வேகமாக வாசற்புறம் சென்றுன் பானு.

இந்த சம்பாஷணையை அரைகுறையாகக் காதில் வாங்கியபடி உள்ளே வந்த ரமா முகத்தைக் குலுக்கி நொடித்தாள். அத்தையின் விசேஷ அனுமதி கிடைக்காத மனத் தளர்வுடன் மெல்ல நடந்து சென்ற பத்மாவை ஓரக் கண்களால் நோக்கினுள். மணப் பெண்ணுக்குரிய மகிழ்ச்சியின்றிக் கவலைகள் நிழலாடிய அவளது முகத்தைக் காணவும் பரிவு மேலிட்டது.

''பானு ! இங்கு வந்து பந்தல் ஜோடனையைக் கொஞ்சம் பார்த்து விட்டுப் போகிருயா ?'' என்ற அண்ணுவின் அழைப்பைத் தொடர்ந்து, ''இதோ, வந்து விட்டேன், அண்ணு!'' என்ற பானுவின் குரல் வாசற்புறம் ஒலித்தது. பானு நிமிர்ந்து நோக்கிச் சூள் கொட்டினுள். மேலேயிருந்து ஊசலாடிய பழ வகைகளின் ஜோடனையில் திருப்தியில்லை. ''பத்தாம் பசலிபோல் இது எதற்கு? வேண்டாமே!'' என்றுள்.

''சரி! ஏய், ரமா. இதையெல்லாம் எடுத்துவிட்டுப் பானு சொல்கிறுற் போல் அலங்காரத்தை முடித்துக் கொடு'' என்றவாறு அவர் வெளியே சென்றுர். பெண்ணின் தந்தை ஸ்தானத்தின் பாதிப் பொறுப்புக்

களைத் தங்கை ஏற்றுக் கொண்டு விட்ட பெருமிதம் அவருக்கு !

''பானு அம்மா ! கொஞ்சம் 'பாகு' பதம் பார்த்துச் சொல்கிறீர்களா?'' என்று சமையற்காரர் எதிரே வந்து நின்றார்.

''மன்னிக்குத் தெரியாத பதமா ? என்னை எதற்கு வெட்டியாக அழைக்கிறீர்கள் மாமா?''

''அவர்கள்தான் உங்களைக் கூப்பிட்டுக் காட்டச் சொன்னார்கள். ஒரு நொடியில் பார்த்துச் சொல்லி விட்டுப் போங்கள்.''

பானு பின்கட்டில் நின்றுகொண்டு வேலைகளை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தாள். பூக்களைப் பரப்பித் தொடுத்துக் கொண்டிருந்த ரமா அந்தப் பெரிய பங்களாவுக்குள் ராணி போல் உலவி வந்த பானுவின்மீது குரோதம் பொங்கும் பார்வையை வீசினாள்.

''இது என்ன? இங்கு ஏன் கோட்டை அடுப்புக்கு வெட்டியிருக்கிறீர்கள்? அவ்வளவு புகையும் பந்தலுக்குள் சாடுமே ! வடவண்டைப் பக்கம் போடுவதற்கென்ன?''

''மழை பெய்தால் இரைசல் அடிக்கும், அம்மா !''

''எங்கள் பத்மா அப்படியொன்றும் அரிசி தின்றுவிட வில்லை, மழை கொட்டுவதற்கு. தெரியுமா? அதை மூடிவிட்டு அந்தப் பக்கம் போடுங்கள்'' என்று சிரித்தபடி கூறிவிட்டு உள்ளே போய்விட்டாள் பானு. கிழவர் நெற்றியில் பெருகிய வியர்வையைத் துடைத்து விட்டுச் சலித்தவாறு உதவியாளை அழைத்தார்.

மாடிப் படியில் ஏறிக் கொண்டிருந்த பானுவை மறித்து அணைத்துக் கொண்டான் மது. ''அத்தை ! இன்னும் ஒரு வாரத்துக்கு ''டியூஷன்'' வேண்டாமென்று சொல்லிவிடு, அத்தை!''

''போடா, போக்கிரி ! பத்மாவுக்குக் கல்யாணமா? இல்லை உனக்கா ? கேட்கிறேன்! ஒரு வார லீவு வேண்டுமாமே, இந்த அதிகாரிக்கு ! மூன்று நாளைக்கு மட்டும் கேட்டுக் கொள் போதும்.''

''உன் வாயாலே சொன்னால்தான் அந்த முகடு என்னை விடும். நீ வந்து சொல்லு!'' என்று அவள் கைகளைப் பற்றி இழுத்தான்.

அந்தப் பக்கமாக வந்து கொண்டிருந்த ரமாவை அப்பொழுதுதான் கவனித்த பானு,''ரமா! நீதான் போய் மூன்று நாட்கள் லீவுக்கு டியூஷன் வாத்தியாரிடம் சொல்லி விட்டு, கல்யாண அழைப்பையும் நேரிலே கொடுத்து அழைத்துவிடுகிறாயா?'' என்றாள்.

''உங்கள் உத்தரவுக்குத்தான் சட்டத்தின் மதிப்புண்டு. நானெல்லாம் செல்லாத காசு'' என்று நகர்ந்த ரமாவை ஆச்சரியத்தோடு நோக்கினாள் பானு. ''அடுத்த எட்டாம் நாளில் இந்த வீட்டு மருமகளாகப் போகும் பெண் ஏன் இத்தனை அலட்சியத்துடன் பேசுகிறாள்?'' என்று சிந்தித்தபடியே அண்ணியைத் தேடிக் கொண்டு போனாள்.

''பானு! சுந்தருக்குப் பரீட்சைக்குப் பணம் கட்ட வேண்டுமாம். உன் கையாலே ஆசீர்வதித்துக் கொடுத்து அனுப்பு'' என்று வாஞ்சையுடன் நெருங்கிய அண்ணியைக் கண்டதும் மனத்திலே பரவிய கவலைகளையெல்லாம் மறந்து பிரோச் சாவியுடன் மேலே சென்றாள் பானு;

''பானு! மாப்பிள்ளை அழைப்பு அமர்க்களப்படுகிறது. உள்ளே உட்கார்ந்துகொண்டு என்ன செய்கிறாய் ?''

''வருகிறேன், மன்னி.''

அண்ணா பரபரப்புடன் உள்ளே நுழைந்தார். ''பானு, ஊர்வலத்துக்காகக் கொண்டு வந்துள்ள காரைப் பார்த்துவிட்டுக் குதிக்கிறான் பையன்.''

''அழகாக இருக்கிறதே !''

''பானு, நில்! எங்கே போகிறாய்?''

''இரு அண்ணா! சுருக்கமாக ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வருகிறேன்.''

''வேண்டாம், அம்மா !.... ஏதேனும் சண்டை, தகராறு வந்துவிடப் போகிறது.''

''போங்கள், அண்ணா ! நீங்கள் கோழையாக இருப்பதால்தான் இத்தனை தூரம் விரட்டுகிறார்கள் !''

''என்னம்மா, இப்படி வாதம் செய்கிறாய் ?''

''பின்னே என்ன அண்ணா ! கார் அனுப்புவதற்குள் எத்தனை தடவை 'போன்' மூலம் விரட்டினார்கள். இப்படி மணிக்கு அறுபது வேட்டுகள் அடிக்கும் மாப்பிள்ளையை எப்படிச் சமாளிக்கப் போகிறீர்கள்?'' தூண் அருகே நின்று இதைக் கேட்டுக் கொண்டிருந்த மணப் பெண் பத்மாவின் முகம் இருண்டு கறுத்தது.

''இருக்கட்டும், பானு! பொறுத்துப் போவோமே!''

பானு மெல்ல மாப்பிள்ளையின் அருகே சென்றாள். ''என்ன வேண்டும் உங்களுக்கு?''

அவள் பக்கம் திரும்பாமலே அவன் நண்பர்களிடையே முணுமுணுத்தான். ''என்னை அவ்வளவு மட்டமாக்கிக் கொள்ள நான் தயாராக இல்லை. வங்காளக் குடாக் கடலில் தூக்கி எறியுங்கள் அந்தக் காரை!''

''இதோ பாருங்கள் ! இருபதினாயிரம் பெறுமான காரைக் கடலிலே தூக்கி எறியும்படி இந்நாட்டின் பொருளாதாரம்கூட அவ்வளவு வளர்ந்துவிடவில்லை. உங்கள் முன்பு நாங்கள் சிறியவர்கள், மிக... மிகச் சிறியவர்கள்'' என்றாள் பானு, ஆங்கிலத்தில். நண்பர் குழாம் பிளிறியது.

அவன் வெடித்தபடி திரும்புவதற்குள் பானு படியிறங்கி வந்துவிட்டாள்.

விடைபெற்றுக் கொள்ள வந்த பத்மா குனிந்து வணங்கினாள். அவளை இழுத்து அணைத்துத் தலையை வருடிக் கொடுத்தாள் பானு. ''பத்மா ! இங்கே நடந்த அமளிகளை மறந்துவிடு. சந்தர்ப்பம் வந்தால் உன் வீட்டாருக்கு நான் இருப்பதை நினைவு படுத்து'' என்றாள் புன்னகையுடன்.

''தனக்கு வந்தால்தானே தெரியும் தலை நோவு?'' என்று குத்தலாக மொழிந்த ரமாவைக் கடிந்து நோக்கினாள் அண்ணி.

''பானு ! ஒரு நல்ல சேதி! எனக்கு இரண்டு இடங்களிலிருந்து இன்டர்வ்யூவுக்கு வந்திருக்கிறது. பம்பாய் வேலைக்கு ஆரம்பமே அறுநூறு. சென்னைக் கிளையில் முந்நூறுதான் தொடக்கம். எதற்குப் போகலாம்?'' என்றவாறு உத்தரவுத் தாளைப் பானுவிடம் நீட்டிய பாஸ்கரனின் கம்பீரத் தோற்றத்தைத் தூரத்திலே நின்றபடியே பார்த்துப் பெருமூச்சு விட்டாள் ரமா; ''கைப்

பிடிக்கப் போகிறவனுக்கு முதல் அஞ்சல் இல்லை?'' அவர்கள் இருவரது வருங்காலமும் பானுவின் அதரங்களிலிருந்து தெறித்து உதிரப்போகும் சொல்லில்தான் உருவாக்கப் படவேண்டும்...ம்!

''எட்டிப் பறிக்கிற நாளிலே கொம்பு மேலே ஏறிக் கொண்டாற்போல் பம்பாய் ஒரு கோடியில் போய் என்ன புரட்டப் போகி றாய்? சென்னையானால் பக்கம். நாங்களும் உதவ முடியும்'' என்றான் பானு.

''பிரமாதம் பானு! உங்கள் யோசனைக்கு நன்றி!'' என்றான் புன்னகையுடன்.

''பத்மா ! மயில் டிஸைன் நெக்லஸை மறந்து போட்டுக் கொண்டு போய்விடாதே. பானு ஆசையாகத் தேர்ந்தெடுத்திருக்கிறான்! இந்தா, பானு ! வாங்கிக் கழுத்திலே போட் டுக் கொள்'' சிறு பிரச்னைகளைக்கூட நாசூக் காகக் கிள்ளிச் சமாளிக்கும் இவர்களிடையே ஊன்றப் போகும் வருங்காலம் நிச்சயம் பானு சகாப்தமாகத்தான் இருக்குமோ? அகங் காரத்தால் கொதித்தபடி மாடியை அடைந் தாள் ரமா.

வராந்தா கைப்பிடிச் சுவரிலே சாய்ந்த படி இருட்டுக்குள் உடலைப் புதைத்தபடி சிந்தனையில் மூழ்கியிருந்த அவள் உருவத் தைக் காணவும், இரண்டெட்டுகளில் அவ ளருகே வந்து நின்றான் பாஸ்கர். கண்களில் ஆர்வமும் துடிப்பும் பிரதிபலிக்க நெருங்கி உராய்ந்தவாறு நின்றான்.

''ரமா, பானுவின் திட்டத்தைக் கேட்டா யல்லவா?'' அவனது நெருக்கத்தினால் ஏற் பட்ட இனிமைகூடக் கைப்புணர்வுகளால் திகட்டியது.

''என்ன பதிலைக் காணோம் ! எங்கள் பானு சொன்னால் சரியாக இருக்குமாக் கும்.'' கன்னத்தை நெருங்கி வந்த நெடுங் கரத்தை நாசூக்காக விலக்கினாள் ரமா.

பொங்கி வந்த உணர்வுகள் வார்த்தை களாக வெடித்து வந்தன. ''பானு.... பானு....! இந்த வீட்டிலே அவள் வைத்தது தான் சட்டம். அவள் ஆமோதிப்பில்லாமல் எதையும் அசைக்க முடியாது. என்னைக் காதலித்ததுகூட அவள் 'அனுமதி' வாங்கிய பின்தானே?''

''ரமா, என்ன உளறுகிறாய்? பானு தெய்வம் போல எங்கள் குடும்பத்துக்கு. தெரியுமா ?''

''தெரிகிறது. அதுதான் ஒருவர் மாற்றி ஒருவர் ஆராதனை செய்கிறீர்களே! அந்த ஆணவத்தில்தான் வயதுக்குக்கூட மதிப்பு வைக்காமல் எல்லோரையும் பந்தாடுகிறாள். அப்படி என்ன ஒரு பெண்ணுக்குத் தெய்வ வழிபாடு ? கேட்கிறேன்!''

''ரமா...! என் அப்பா, அம்மா அவளிடம் காட்டிய அன்பையும், பரிவையும் நாங்கள் தொடர்ந்து காட்டி வருகிறோம். அவ்வளவு தான். இதைப் பற்றி நீ இவ்வளவு தூரத் துக்கு ஆராய வேண்டிய அவசியமில்லை '' என்றான் கோபம் பொங்க.

''ஏன் ஆராயக் கூடாது? நாளைக்கே இந்த வீட்டுக்கு மருமகளாகப் போகும் நான் இங்குள்ள நிலைமைகளைச் சரிவரப் புரிந்து கொள்ள வேண்டாமா? எனக்குள்ள உரிமையோடு கேட்கிறேன். அவள் எதையும்



'' என்ன வாத்தியம் சார், அவர் வாசிக்கிறது?''

'' கோட்டுவாத்தியம்.''

'' தெரிஞ்சுதான் சொல்றேளா ? இல்லே... அவர் கோட்டுப் போட்டிருக்கிறதாலே சொல்றேளா?''

கேட்பதற்கு முன்பே தேடித் தேடிக் கொடுத்து விடும் பரபரப்பு உங்கள் எல்லோரிடமும் காணப்படுவானேன்?''

கதவு அறைந்து சாத்தப்படும் ஒலி கேட்டு இருவரும் திரும்பினர். வராந்தாவில் நின்று படிந்த மெல்லிய விளக்கொளியில் அன்னை யின் உருவத்தைக் கண்டு அதிர்ந்து நின்றான் பாஸ்கர். ''என்னம்மா நீ இங்கே?''

''இருக்கட்டும் பாஸ்கர். இரண்டு நாளைய அனுபவங்கள் இத்தனை மன உளைச்சலைத் தருமானால் இனி வாழ்நாளெல்லாம் அவற் றைத் தாங்கக் கூடிய வலிமை இல்லாமல் போய்விடும். ரமா! உன் கேள்விகளை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. இந்த வீட்டில் பெரியவர்கள் முதல், சிறியவர்கள், வேலைக் காரர்கள் வரை பானுவைத் தாங்கி உப சரிக்கிறோம். அவளை ஒரு ஸ்தானத்துக்கு உயர்த்தி வைத்து, பிறருடைய பிரச்னைகளை யும் அவள் முன்னே வைத்து, அதன் பொறுப்புக்களிலே அவள் மனத்தைப் பிழிய வைத்துக் காய்ந்த சருகாக்கி வைத்திருப்ப தனால்தான் தன் தேவைகளை ஊன்றி உணர முடியாத ஜடப் பொருளாக்கி வைத்திருக் கிறோம். அவள் கேட்பதற்கு முன்பே கொடுத்துக் கொடுத்து அதிலே லயிக்க வைத்து, அவள் கேட்டுவிடக் கூடிய பொரு ளையே மறைத்து வைத்திருக்கிறோமடி.''— அம்மா ஏன் இப்படி பொங்கிப் பொங்கிப் புலம்புகிறாள்? பாஸ்கர் தாயார் அருகே வந் தான். ''என்னம்மா சொல்கிறாய்?''

''பானு இன்று உலகிலுள்ள எந்தப் பொரு ளைக் கேட்டாலும் கொடுத்து விடலாம். கேட்கக் கூடாத அதைக் கேட்டுவிட்டால் நாங்கள் எப்படியடா கொடுப்போம்? பதி னைந்து வயதிலேயே உயிரோடு எரித்துக் கொண்ட உணர்ச்சிகளுக்குக் காணிக்கையா கக் கொண்டு வந்த கைம்பெண்ணின் பணத் திலே வளர்ந்த குடும்பம் இது!'' அம்மா வின் கண்ணீரிலே ஒரு பெண்ணின் அவல வாழ்வும் கரைந்து பொட்டுகளாகச் சிதறின. தானே விலக்கிவிட்டுத் தள்ளாடிச் செல் லும் உருவத்தைத் தாங்கி அழைத்துச் செல்பவள் பானுவேதான்! எதிரே நின்ற ஆண்மகனின் கண்களை ஏறிட்டு நோக்கவும் கூசித் தலை குனிந்தாள் ரமா.

பொன்னியின் செல்வரே, வருக, வருக!



கல்கியின் பொன்னியின் செல்வனை இதுவரை நான் எத்தனை தடவைகள் படித்திருப்பேன் என்று எனக்கே தெரியாது. ஒவ்வொரு தரம் படிக்கும் போதும் அதில் எத்தனை இனிமை, எத்தனை குளுமை, எத்தனை விறுவிறுப்பு! இதைப் போன்ற சரித்திர நாவலைப் படைக்கக் கல்கியைத் தவிர வேறு யாராலும் முடியாது. உங்களுக்கு எங்கள் உளங்கனிந்த வாழ்த்தும் நன்றியும் உரித்தாகட்டும்.

பங்களூர்–1
27–5–68 ஆர். நடராஜன்



பொன்னியின் செல்வனை ஒரே தொகுப்பாக நான் பல முறை படித்திருந்தாலும் மீண்டும் ஒரு முறை தங்களது வார வெளியீட்டில் சந்திக்கப் போகிறோம் என்னும் நினைவே மிகவும் மகிழ்வூட்டுகிறது.

ஜாம்ஷெட்பூர்
24–5–68 எம். கண்ணன்



நாங்கள் நண்பர்கள் பத்து பேரும் போன கல்கி இதழில் 'பொன்னியின் செல்வன்' இரும்ப வரப் போவதாக அறிவித்திருந்ததைக் காண நேரிட்டது. அது கண்டதும் எங்களூர் கல்கி ஏஜண்டிடம் சந்தாதாரர்களாகச் சேர்ந்து விட்டோம்.

மேலூர் எல். பழனியப்பன்
23–5–68 (மற்றும் 9 நண்பர்கள்)

வந்தியத்தேவனையும், ஆழ்வார்க்கடியானையும் சந்திக்கும் சிறந்த பாக்கியம் மற்றுமொரு முறை வாசகர்களுக்குக் கிடைக்க இருப்பது அவர்களுடைய அதிர்ஷ்டமே.

திருச்சி – 2
23–5–68 எஸ். ராமதுரை



மனம் மகிழ்ச்சியால் துள்ளியது. கண்களில் நீர் நிறைந்துவிட்டது. உங்களுக்கு எப்படி நன்றி தெரிவிப்பது என்றே தெரியவில்லை.

திருப்பதி, 23–5–68 ச. ஆறுமுகம்

தற்கால மாணவ, மாணவிகள், இளைஞர்கள், தரமிக்க எழுத்தோவியங்களைப் படித்து மகிழ அரியதொரு சந்தர்ப்பத்தை அளிக்கவிருக்கும் தங்களுக்குத் தமிழ்கூறும் நல்லுலகத்தின் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை – 21
24–5–68 டி. என். சுப்ரமண்யம்



இதுவரை கல்கி படைத்த எத்தனையோ நாவல்களில் நான் அதிகமாக விரும்பிப் படித்தது பொன்னியின் செல்வனைத்தான். அதில் வரும் வந்தியத்தேவனையும், அருள்மொழியையும், ஆழ்வார்க்கடியானையும், குந்தவி தேவி, பூங்குழலி முக்கியமாக நந்தினி இவர்களை என் வாழ்நாள் முழுவதும் மறக்கவே முடியாது. அவ்வளவுதூரம் என் நெஞ்சில் ஆழமாகப் பதிந்து விட்ட கதாநாயகிகள் அவர்கள். மீண்டும் படிக்கத் துடிப்புடன் காத்திருக்கிறேன்.

திருச்சி – 8
23–5–68 அழ. ஜெயராமன்

பொன்னியின் செல்வன் மீண்டும் ஆரம்பமாகிறது என்பதைப் பார்த்து அளவில்லா சந்தோஷம் அடைந்தேன். ஒரு நிமிடம் என் இதயம் விம்மிப் பூரித்தது. இளைய பிராட்டி, நந்தினிதேவி, பொன்னியின் செல்வர், வல்லவரையர், பெரிய பழுவேட்டரையர் இவர்கள் எல்லோரும் இதோ வந்துவிட்டோம் என்கின்றனர். மீண்டும் முந்தைய தமிழகத்தின் கலை, கலாச்சாரம் நாகரிகம் ஆகியவை கண்கூடாகக் காண்போம்.

திருப்பூர் – 4
23–5–68 இ. ராமசாமி

''கல்கி'' என்ற குழந்தை தங்களுடையதாக இருந்தாலும் அதை வளர்க்கும் பணி எங்களுடையதாக இருக்கிறது. அதனுடைய வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் இன்றையப் பத்திரிகை உலகில் தமிழ் வளர்ச்சிக்காகக் கல்கி ஆற்றிவரும் பணி அளப்பரியது. அத்தகைய தரமான பத்திரிகையின் விற்பனையாளர்களாக இருப்பதில் பெருமைப்படுகிறோம்.

கல்கி அவர்களின் அற்புதப் படைப்பான பொன்னியின் செல்வன் புதுச் சந்தாதாரர்களை ஏற்படுத்திக் கொடுக்கும் என்று திடமாக நம்புகிறோம்.

பெல்மடுல்லா.
இலங்கை எம்.எஸ்.முத்தையா
25–6–68 (கல்கி ஏஜண்டு)

'கல்கி' அவர்களின் அற்புதப் படைப்புகள் வெளிவந்த நாட்களில் நாம் விற்பனையாளராக இருக்கவில்லையே என்ற ஏக்கத்தைப் போக்கி, கல்கி அவர்களின் கைவண்ணத்தை மீண்டும் அச்சில் ஏற்றி, கல்கி வார இதழ் சிறக்கும் இந்நாளில் நான் விற்பனையாளனாக இருப்பது குறித்துப் பெருமைப்படுகிறேன்.

'பொன்னியின் செல்வன்' இன்றுள்ள ஒவ்வொரு குடும்பத்தின் செல்வனாகத் திகழப் போகிறான்.

புத்தகப் பண்ணை,
தேவகோட்டை
17-6-68 மீனாட்சிசுந்தரம்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam

ஹெர்குலிஸ்®

வெறும் சைக்கிள் மட்டுமன்று வாழ்நாள் முழுதும் உழைக்கும் ஓர் உறுதுணை



உறுதிமிக்கது. மென்மையான ஓட்டம். ஹெர்குலிஸ் வாழ்நாள் முழுதும் உழைக்கத் தக்கபடி அமைந்தது. மிகஉயர்ந்த தரத்தில் தயாராகி, சகாயமான விலையில் கிடைக்கும் ஹெர்குலிஸ், சைக்கிள் களிலே சிறந்த முதலீடாக விளங்கு கிறது



®
ஹெர்குலிஸ் சைக்கிள் & மோட்டார் கம்பெனி லிமிடெட், யு.கே. அவர்களின் பதிவுபெற்ற டிரேட் மார்க்குகள். இந்தியாவில் தயாரிப்போர்: டியூ சைக்கிள்ஸ் ஆப் இந்தியா, அம்பத்தூர், மதராஸ் 53. டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், மதராஸ் 1. பதிவு பெற்ற உபயோகிப்போர்.

TIC-H-43#

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon